நவம்பர் 2014 | விலை ₹.25

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்
இறக்கை: 3 • இறகு: 11

## மெட்ராஸ்

ஆதித் தமிழர்களின்
அப்பட்டமான வாழ்க்கைப் பதிவு




## சேரி ரெண்டுபட்டால்...?

ஆ. சிவசுப்பிரமணியன் ■ சு. இராமசுப்பிரமணியன் ■ ஜோ டி குருஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வெட்டுக்கள் கூறும் சாட்சியம்

# கட்டிலேறுவதற்கு வரி

- வைகை அனிஷ்



கட்டில் ஏற தடை விதித்ததால் தற்கொலை செய்துகொண்டதை விளக்கும் கல்வெட்டு

பண்டைய காலத்தில், திருமணத்தின்போது ஸ்ரீதனமாக பொருள் கொடுக்கவேண்டும்; அவ்வாறு கொடுக்க இயலாதவர்கள் தற்கொலை செய்துகொண்ட நிகழ்ச்சிகள் பல நடந்துள்ளன. அதே போல தன்னுடைய தங்கைக்கு ஸ்ரீதனம் கொடுக்க இயலாமல் வேறு ஒரு மணமகனை தேர்ந்தெடுக்க, அந்த மணமகன் பிடிக்காமல் தங்கை வேறு ஒரு நபரிடம் தொடர்பு கொள்கிறாள். இதனால் அந்தக் குடும்பம் கொலைக்கும் தற்கொலைக்கும் ஆளாகிறது. இன்று வரை வரதட்சணையால் பல குடும்பங்கள் சீரழிந்து, நீதிமன்றம், காவல்துறை என அலைவதையும் காண்கிறோம். அதற்கு கல்வெட்டுக்களே சாட்சியாக உள்ள சில நிகழ்வுகள் காணக்கிடைக்கின்றன.

எல்லாச் சமயங்களும் ஆண், பெண் இடையேயான மகத்துவ உறவைத்தான் திருமணம் என்கிறது. திருமணம் என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் நிகழக்கூடிய அற்புதமான நிகழ்வாகும். உற்றார் உறவினர்களின் தேடுதல் மற்றும் தேர்ந்தெடுத்தல் மூலம் இணையாக்கவும் வாழ்க்கைத் துணையாக்கவும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்வின் நிறைவுதான் திருமணம். திருமணத்தில் சடங்குமுறைகள் பின்பற்றப்படுவதுண்டு.

பெண் பார்த்தல் மற்றும் மாப்பிள்ளை பார்த்தல் நிகழ்ச்சி நடைபெற்ற பின்பு நிச்சயதார்த்தம் நடைபெறும். நிச்சயதார்த்தத்தின்போது பல்வேறு சடங்குகள் அரங்கேறும். அதன் பின்னர் திருமணம் நடைபெறும். திருமணத்தின்போது பெண்ணையும் கொடுத்து பொன்னையும், பொருளையும் கொடுக்கும் வழக்கம் பரவலாக அனைத்து சமயங்களிலும் உள்ளது. ஒரு சில இனத்தில் வரதட்சணை வாங்குவது கிடையாது.

கோயமுத்தூர் பகுதியில் திருமணத்தின்போது மணமகளைத் திருமண மேடைக்குக் கூட்டிவரும் சடங்கைக் 'கட்டிலேற்றிக் கொண்டுவருதல்' எனக் குறிப்பிடுகின்றனர். பண்டையக் காலத்தில் தமிழகத்தில் திருமணத்திற்கு வரிவிதிக்கப்பட்டது என்பது 'கண்ணாலக் காணம்' என்ற கல்வெட்டுச் சொல்லாட்சியின் மூலம் அறியப்படுகிறது. திருமணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை 3 இறகு 11

திருவள்ளுவராண்டு 2045
ஐப்பசி - கார்த்திகை
நவம்பர் 2014

வெளியிடுபவர்
ஆசிரியர்
**வி. முத்தையா**

ஆசிரியர் குழு
**இரா. எட்வின்**
**நெற்கோ**
**சித்தன்**

நெறியாளர்கள்
**கி.பி. அரவிந்தன்**
**ஓவியர் வீர. சந்தானம்**
**டிராட்ஸ்கி மருது**

புலம்பெயர் நாடுகளுக்கான தொடர்புக்கு :



கனடா :
**வி. மகேந்திரன்**
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail.com

ஐரோப்பா :
**க. முகுந்தன்**
K. Mukunthan
kmukunthan@gmail.com



காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.


## நீ என்ன செய்யப் போகிறாய்?

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில், கர்நாடகத் தனிநீதிமன்றத்தின் சிறப்பு நீதிபதி மைக்கேல் டி குன்ஹா அவர்கள், 2014 செப்டம்பர் 27இல் அளித்த தீர்ப்புக்குப் பிறகு, தமிழ்நாடு நிறையத் தகவல்களை உலகிற்குத் தந்திருக்கிறது. குறிப்பாக, தமிழர்களின் பலம் என்ன? பலவீனம் என்ன என்பது பட்டவர்த்தனமாகப் பகிர்ந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

அரசு யார் பக்கம் இருக்கிறது; அரசாங்கம் யார் பக்கம் இருக்கிறது? அதிகாரம் யாரிடம் இருக்கிறது; அதிகாரிகள் யார் பக்கம் இருக்கிறார்கள்? காவல்துறை யார் பக்கம் இருக்கிறது? என்பது தெரிந்தது.

அரசியல் கட்சிகள் என்ன பேசின; அரசியல் தலைவர்கள் என்ன பேசினார்கள்? அதிலும், ஆளுங்கட்சியினர் என்ன பேசினார்கள்; எதிர்க் கட்சிகள் என்ன பேசின; எதிரிக் கட்சிகள் என்ன பேசின; உதிரிக் கட்சிகள் என்ன பேசின? ஒட்டுக் கட்சிகள் என்ன பேசின? என்பது வெளிப்பட்டது.

சட்டம் என்ன சொன்னது? நீதிமன்றம் என்ன சொன்னது? நீதிபதிகள் என்ன சொன்னார்கள்? வழக்கறிஞர்கள் என்ன சொன்னார்கள்? ஊடகங்கள் என்ன சொல்லிற்று? அதிலும், அச்சு ஊடகங்கள் என்ன சொல்லின? தொலைக்காட்சி ஊடகங்கள் என்ன சொல்லின? என்பது துலங்கியது.

சினிமாக்காரர்கள் என்ன செய்தார்கள்? சிந்தனையாளர்கள் என்ன செய்தார்கள்; சமூக ஆர்வலர்கள் என்ன செய்தார்கள்; சத்தியவான்கள் என்ன செய்தார்கள்; வணிகர்கள் என்ன செய்தார்கள்? தொண்டர்கள் என்ன செய்தார்கள்? குண்டர்கள் என்ன செய்தார்கள்? கோயில்கள் என்ன செய்தன? குருக்கள் என்ன செய்தார்கள்; மக்கள் என்ன செய்தார்கள்; மாணவர்கள் என்ன செய்தார்கள்; கல்விக்கூடங்கள் என்ன செய்தன? தொழிற் சங்கங்கள் என்ன செய்தன? என்பது புரிந்தது.

ஆனால், "எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது; எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது; எது நடக்க வேண்டுமோ அது நன்றாகவே நடக்கும்!" என்றெல்லாம் கீதா உபதேசம் பேசி நழுவுகிற நேரமல்ல இது. உனது சுட்டுவிரலை உன்னை நோக்கி நீட்டு; உன் மனசாட்சியைப் பிடித்து உலுக்கு! உரத்துக் கேள்! இப்பொழுது நீ என்ன செய்யப் போகிறாய்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

**ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30 ஆம் தேதியில் 'காக்கைச் சிறகினிலே' அஞ்சல் செய்யப்படுகிறது. 5ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய செல்பேசி எண்: 98414 57503.

**உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| தனி இதழ் விலை | ரூ. 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 275 |
| இரண்டு ஆண்டு | ரூ. 500 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. 1250 |
| மாணவர் சந்தா | ரூ. 200 |

(மாணவர்கள். கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் (வெளிநாடு) | $ 30 |

காசோலைகள், வங்கி வரைவோலைகள். அனைத்தும் KAAKKAI, (A/c No. 60111010005660, SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. IFSC: Synb0006011) என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியாடர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

தொடர்பு முகவரி :
**காக்கை**
288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600005.
செல்பேசி: 98414 57503
மின்னஞ்சல் : kaakkaicirakinile@gmail.com
https://www.facebook.com/kakkai.cirakinile


இதழ் வடிவமைப்பு:
கீழ்வேளூர் பா. ராமநாதன்


# சிறகுக்குள்ளே...





18




23





56





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேரி ரெண்டுபட்டால்...?

ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிகளுக்கு கொண்டாட்டம் என்றொரு பழமொழி உண்டு. ஊரில் தன் பெருமையைக் காட்டிக் கொள்வதற்காக, இரண்டு குழுக்களும், அல்லது கோஷ்டிகளும் இரண்டு முறை ஊர் திருவிழாவினை நடத்துவார்கள். இரண்டு முறை கூழ் ஊற்றுவார்கள். இரண்டு முறை தெருக்கூத்து அல்லது நாடகம் நடத்துவார்கள். இதனால் இதையே வாழ்க்கையாகக் கொண்டிருக்கின்ற தெருக்கூத்து அல்லது நாடகக் கலைஞர்களுக்கு இருமுறை வாய்ப்பு கிடைக்கும். அதைப்போலவே இன்று அரசியல் களத்திலும் தமிழகம் எங்கிலும் உள்ள சேரிகள் இரண்டு மூன்று என பல துண்டுகளாக துண்டுபட்டுக் கிடக்கின்றது. வரலாற்றைப் புரட்டினால், தமிழகத்தில் உள்ள அனைத்து சமூக இயக்கத்திலும், அரசியல் கட்சிகளிலும் தலித்துகளின் பங்களிப்பு மிகுதியாகவே இருந்திருக்கின்றது.

1915இல் தொடங்கப்பட்ட பார்ப்பனர் அல்லாதோர் இயக்கம் முதல் அதற்குப்பின் 1917இல் தொடங்கப்பட்ட நீதிக்கட்சி, காங்கிரஸ் கட்சி என்று சொல்லப்படுகின்ற பேராயக்கட்சி, பொதுவுடமைக் கட்சி மற்றும், திராவிடக் கட்சிகள் என அனைத்துக் கட்சிகளிலும், அரசியல் அதிகாரத்தில் தங்களுக்கும் பங்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தலித்துகள் தங்களை இணைத்து பணிசெய்து கொண்டிருந்தனர்; இருக்கின்றனர். ஆரம்ப காலத்தில் நீதிக் கட்சியில், படித்த தலித்துகள் தங்களை பெருமளவில் இணைத்துக் கொண்டு பங்காற்றியிருக்கின்றனர்... அதற்கு பின் வந்த திராவிட இயக்கத்திலும், தலித்துகள் தங்களைப் பெருமளவில் இணைத்துக் கொண்டு களப்பணியாற்றினார்கள்...


பேராயக் கட்சிக்கு ஒரு காலத்தில் தமிழகத்தில் தீண்டத்தகாதவர்களின் கட்சி என்றே பெயர் இருந்திருக்கின்றது... காந்தி, நேரு, பட்டேல், போன்ற பார்ப்பன, பணியா தலைவர்களின் சொல்லுக்கு செத்து மடிந்தது தலித்துகளாகவே இருந்திருக்கின்றனர். அவர்களுக்குப் பிறகு பொதுவுடைமை கட்சிகளில் உயிர் நீத்தவர்களும் களப்பணி செய்து, கடைசி வரை தொண்டனாக இருந்தவர்களும் தலித்துகள்தான். அந்தக் கட்சிகளின் தலைவர்களாகப் பார்ப்பனர்களும், பணியாக்களும் மட்டுமே தங்களை நிலை நிறுத்திக்கொண்டு நிறுவனமயமாக்கினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின், சின்னமே (மறைந்த தலித் தலைவர் திரு. கோவிந்தசாமி அவர்களின் உதயசூரியன் பத்திரிகையின் முகப்பு) தலித்துகளின் சின்னம்தான். அந்தக் கட்சியிலும் ஆரம்ப காலங்களில் பெருமளவு தன்னை இணைத்துக் கொண்டு களப்பணியாற்றியவர்களும் பலியானவர்களும் தலித்துகள்தான். ஆனால், அதில் தலைவர்களாக தங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நிலை நிறுத்திக் கொண்டவர்கள் பிற்படுத்தப்பட்ட சாதியினர்...

அடுத்து வந்த அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் பெருவாரியாக இணைந்ததும், களப்பணியில் இருப்பதும் தலித்துகள்தான். ஆனால் அந்தக் கட்சிக்கு இப்பொழுது தேவர்களின் கட்சி என்ற பெயரும் வந்து விட்டது... மதிமுக உருவானபோது அதற்கு முதல் பலியானது தலித்துதான். தேமுதிகவில் கூட முதல் பலி தலித்துதான். அவருடைய கட்சியில் உள்ள இளைஞர்கள் பெரும்பாலும் தலித்துகள்தான்.

இங்கு சொல்ல வந்த செய்தி, தலித்துகள் அந்த கட்சியில் இருப்பதல்ல, தலித்துகளைப் போலவே மற்ற சாதியினரும் அந்தந்த கட்சிகளில் பெருமளவில் தங்களை இணைத்துக் கொண்டு ஆரம்ப காலங்களில் செயல்பட்டவர்கள்தான், காலப்போக்கில் அவர்களிடம் இரண்டு விதமான மாற்றங்கள் நிகழ்ந்தது... அவர்களில் பெரும்பாலோனோர் ஏதேனும் ஒரு பதவியைப் பெற்றுக்கொண்டு தலைமைக்கு நெருக்கமானார்கள்... மாவட்டச் செயலாளர்கள் ஆனார்கள்... மந்திரி ஆனார்கள்.. இது எதுவும் நடக்க வில்லை என்றாலோ அல்லது அந்த கட்சியில் தங்களின் சாதிக்கு முக்கியத்துவம் இல்லை என்றாலோ மற்ற கட்சிகளுக்குத் தாவிவிடுவார்கள். பதவிகளையும் பெற்றுவிடுவார்கள்.


ஆனால், தலித்துகள் மட்டுமே தங்கள் கட்சியின்மீதும் அதன் தலைவர் மீதும் கொண்ட விசுவாசத்திற்காக, அந்த கட்சி தொடர்ந்து தங்களுக்கு அநீதி இழைத்தாலும், பலியிட்டாலும் தொடர்ந்து அதே கட்சியில் தொடர்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு தலித் கட்சிகள் மீது நம்பிக்கை வருவதில்லை, மற்ற கட்சிகளில் இருக்கும் தலித்துகள் எல்லாம் அவரவர்களுக்கு ஒத்துப்போகிற தலித் கட்சிகளில் தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட்டாலே 45 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெறலாம். தலித் கட்சிகளில் இணைந்து செயல்பட மறுக்கும் தலித்துகளால் அவர்களுக்கும் அவர்களது சமுகத்துக்கும் என்ன பயன்...?

இந்தக் கேள்வியை தலித் சமூகத்தைப் பார்த்து தலித் கட்சிகளும், அதன் தலைமைகளும் முன்வைக்கும் அதே நேரத்தில், ஒரு சாதாரண தலித்தாக இருந்து 3 கேள்விகளை தலித் அரசியல் கட்சிகளிடமும் தலித் தலைமைகளிடமும் வைக்க வேண்டிய தேவையுள்ளது. தேர்தல் அரசியலில் பெரும்பான்மை கவனத்தை ஈர்த்த தலித் அரசியல் கட்சிகளாக இருப்பவை:

**மாநில அளவில் ஒரு அரசியல் கட்சிக்கு தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் வேண்டும் எனில், அந்தக் கட்சி, சட்டமன்றத்தில் தனது வேட்பாளராக 15 நபரைக் கொண்டிருக்க வேண்டும்; பாராளுமன்றத்தில் 2 நபரைக் கொண்டிருக்க வேண்டும். அல்லது வாக்கு சதமானத்தில் மாநில அளவில் 6 சதமானமும், தேசிய அளவில் 2 சதமானமும் கொண்டிருக்க வேண்டும் என்பது தேர்தல் ஆணையத்தின் விதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1. விடுதலைச் சிறுத்தைகள்
2. குடியரசு கட்சி (செ.கு. தமிழரசன்)
3. புரட்சி பாரதம்
4. சமூக சமத்துவப்படை
5. பகுஜன் சமாஜ் பார்ட்டி (தேசிய அங்கீகாரம் பெற்ற ஒரே தலித் கட்சி)
6. புதிய தமிழகம்
7. தமிழக மக்கள் முன்னேற்ற கழகம்
8. தேவேந்திர குல வேளாளர், கூட்டமைப்பு; உதிரியாக ஒன்றிரண்டு அரசியல் கட்சிகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்தப் பட்டியலில் சில கட்சிகள் விடுபட்டும் போயிருக்கலாம், தலித் அரசியல் கட்சிகளை பட்டியலிடுவதல்ல இந்த கட்டுரையின் நோக்கம், தலித்துகளின் கனவான அரசியல்அதிகாரத்தை நோக்கி தலித் அரசியல் கட்சிகள் ஏன் நகர்வதில்லை, என்பதுவும், இத்தனை கட்சிகள் இருந்தும், ஏன் ஒரு தலித் கட்சியும் மாநில அளவில் தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தைப் பெற இயலவில்லை என்பதும்தான்.

2011 தேசிய மக்கள் தொகையின் கணக்கெடுப்பு, இந்திய அளவில் தலித் மக்களின் சராசரி 16 சதமானத்திலிருந்து 19 சதமானம் வரை இருப்பதாகவும், தமிழகத்தில் மட்டுமே தேசிய சராசரி சதமானத்தை விட அதிகமான அளவில் தலித் மக்களின் எண்ணிக்கை இருப்பதாகவும் சொல்கின்றது. அப்படி எனில், பிற சாதி மக்களின் வாக்குகளைவிட தலித்துகளின் வாக்குகள் அதிகமாக இருக்கின்றது என்றுதானே பொருள். இந்த பின்புலத்தில் ஏன் தலித் கட்சிகள் சிந்திப்பதில்லை?


பொதுவாக தேர்தலில் வெற்றி தோல்விகள் எதனடிப்படையில் நிகழ்கின்றது என்றால், அனுதாப அலை, ஆதரவு அலை, எதிர்ப்பு அலை, கூட்டணி பலம் என ஆயிரம் காரணங்கள் சொல்லப் பட்டாலும், சொல்லப்படாத முக்கியமான காரணம், தலித்துகளின் வாக்குகளைப் பிரிப்பதுதான். ஏன் என்றால் மக்கள் தொகையில் தனித்து அதிக எண்ணிக்கையில் தலித்துகள் உள்ளனர் என்றால் அவர்களின் வாக்கு எண்ணிக்கையும் தனித்து அதிக எண்ணிக்கையில்தான் இருக்கும், அத்தகைய தனித்து அதிக எண்ணிக்கையில் இருக்கும் தலித்துகளின் வாக்குகளைப் பிரிப்பதற்காகவே மாநிலக் கட்சிகளும், தேசியக் கட்சிகளும் ஏதேனும் ஒரு தலித் கட்சியினை தங்களின் கூட்டணியில் எப்போதும் வைத்திருக்கும். அதனால், அந்தக் கட்சிக்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல, தலித்துகளின் பெரும்பான்மை வாக்கு வங்கியைத் தன் பங்குக்கு கூறுபோடும். தேர்தல் காலத்தில் கட்சிப் பணி செய்யவும், கூட்டமாய் கூட வரவும், கொடி நாட்டவும் எடுபிடிகளாகவும் பயன்படுத்திக் கொள்ளும்.

அடிப்படையில் தமிழக அரசியலை மூன்று விதமாகப் புரிந்து கொள்ளலாம். ஒன்று: தேசிய கட்சிகளின் அரசியல்; இரண்டு: திராவிடக் கட்சிகளின் அரசியல்; மூன்று: மண்ணின் மைந்தர்களின் அல்லது தலித்துகளின் அரசியல்.

தேசியக் கட்சிகளின் அரசியல் என்பது வல்லாண்மை அரசியல், இன்னும் எளிமையாய்ச் சொல்வதென்றால், ஏகாதிபத்திய அரசியல், பெரு முதலாளிகளின் அரசியல், மாநில நலனோ, மக்களின் நலனோ அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முதன்மையாக இருப்பதில்லை, அவைகள் எப்பொழுதும் தேசத்தின் நலன் என்றே முழங்குவார்கள், தேசமென்பது வெறும் நிலப்பரப்பு மட்டுமா அதில் வாழும் மக்கள் இல்லையா, வனங்கள், மற்றும் கடல், மலை கிடையாதா? என்றால், இல்லை என்பார்கள். இவையெல்லாவற்றையும் பணமாக்கும் நோக்கோடு செயல்படுவார்கள், இது அவர்களுக்குப் புரியாது, புரிய வைக்கவும் இயலாது.

திராவிடக் கட்சிகளின் அரசியல் என்பது, வந்தேறிகளின் அரசியல் அல்லது வடுகர்களின் அரசியல். இன்னும் எளிமையாகச் சொல்வதென்றால் நிலவுடைமையாளர்கள் சிறு மற்றும் குறு முதலாளிகளின் அரசியல், மணல் அரசியல், மாஃபியா அரசியல்.

தலித் கட்சி அரசியல் என்பது நிலமற்ற வாழ்வாதாரம் ஏதுமற்ற உடலுழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்ட ஏழை எளிய மக்களின் அரசியல், இன்னும் தமிழகத்தில் 80 சதமான தலித்துகள் கிராமங்களில்தான் வாழ்ந்து வருகின்றனர்.


தேசியக் கட்சிகளின் அடையாளமாக அல்லது வாக்கு வங்கிகளாக பெருநகரங்களும், மாநகராட்சிகளும் உள்ளன, திராவிடக் கட்சிகளின் அடையாளமாக நகர்ப்புறமும், சிறுநகரங்களும் உள்ளன, தலித் கட்சிகளின் அடையாளமாக கிராமப்புறங்கள் குறிப்பாக சேரிகள் மட்டுமே உள்ளன. இன்னும் எளிமையாக இதனைச் சொல்ல வேண்டும் என்றால், தேசிய கட்சிகளில் பணக்காரர்களும், திராவிடக் கட்சிகளில் நடுத்தர, பிற்படுத்தப் பட்ட மக்களும் தலித் கட்சிகளில் ஏழை எளிய மக்களுமே இருக்க இயலும். ஆனால், இன்றைய நிலையில் தலித் கட்சிகள் திராவிடக் கட்சிகளை தங்களின் முன்னோடியாகக் கொண்டு அவர்களைப் போலவே அரசியல் நடத்துகின்றன. நிலவுடைமையாளர்களின் அரசியலை நிலவுடைமையாளர்கள்தான் நிகழ்த்த இயலும், நிலமற்றவர்களின் அரசியலை நிலமற்றவர்கள்தான் நிகழ்த்த இயலும்.

ஆனால், தலித் கட்சிகள் எல்லாமே ஏதோ ஒரு வகையில் நிலவுடைமையாளர்களின் அரசியலை நிலமற்றவர்களிடமே நிகழ்த்துகின்றனர். இந்தப் போக்கு தங்களின் வாக்கு வங்கியிடம் இருந்து தங்களை அன்னியப்படுத்தும் போக்கு என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. காரணம், பெருமுதலாளிகளிடம் எடுபிடி வேலைசெய்யும் ஏவலன்கூட தன்னைச் சந்திக்கவரும் ஏழை எளியவர்களிடம் பெருமுதலாளியாகவே நடந்துகொள்வான் என்பார்களே, அதைப்போலத்தான், இந்தப் போக்கும்.

மாநில அளவில் ஒரு அரசியல் கட்சிக்கு தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் வேண்டும் எனில், அந்தக் கட்சி, சட்டமன்றத்தில் தனது வேட்பாளராக 15 நபரைக் கொண்டிருக்க வேண்டும்; பாராளுமன்றத்தில் 2 நபரைக் கொண்டிருக்க வேண்டும். அல்லது வாக்கு சதமானத்தில் மாநில அளவில் 6 சதமானமும், தேசிய அளவில் 2 சதமானமும் கொண்டிருக்க வேண்டும் என்பது தேர்தல் ஆணையத்தின் விதி. நாடு சுதந்திரம் பெற்று 67 ஆண்டுகள் நிறைவுற்றும் தமிழகத்தில் ஒரு தலித் கட்சியும் தேர்தல் ஆணையத்தின் மாநில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அங்கீகாரத்தை ஏன் பெற இயலவில்லை என்றால், தனக்கான நண்பன் யார்? எதிரி யார்? என்ற அரசியல் புரிதல் தலித் அரசியல் கட்சிகளுக்கு இல்லை. எனவே, அவர்களால் அரசியல் களத்தில் சாதிக்க இயலவில்லை என்றே எண்ண வேண்டியுள்ளது.

உதாரணமாக, அரசு மற்றும் அரசியல்வாதிகளின் மனோபாவமும். கிராமங்களில் உள்ள ஆண்டைகளின் மனோபாவமும் ஒன்றாகவே இருக்கும், அது தலித்துகள் தாங்கள் கொடுப்பதை பெற்றுக் கொள்ள வேண்டும், தங்களுக்கான உரிமை என்றோ, சம பங்கு என்றோ எப்போதும் பேசக்கூடாது என்ற போக்கு அது. ஏன் எனில் ஆண்டைகளில் இருந்துதான் ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் வருகின்றனர். இவர்களுடன் கூட்டணி வைக்கும் தலித் அரசியல் கட்சிகளிடமும் அவர்கள் இதே போக்கில்தான் இருப்பார்கள். இத்தனை தொகுதி, இந்த இடம், விருப்பமாக இருந்தால் பெற்றுக்கொள்ளுங்கள் என்று, கூட்டணி பேசும் போதே நிபந்தனையுடனும் அதிகாரத்துடனும் பேசுகின்ற நிலைதான் இருக்கிறது.

தேர்தல் களத்தில், தலித்துகளுக்கு கூட்டணிக் கட்சிகள் எதுவும் தேர்தல் பணியாற்றாது, தலித்துகள் மட்டுமே தேர்தல் பணி செய்ய வேண்டும்: அதே தலித் மற்ற தொகுதியிலும் கூட்டணிக் கட்சிக்காக தேர்தல் பணி செய்ய வேண்டும். தலித்துகளை வெற்றி பெற வைக்கக்கூடாது என்ற உள்ளடி அரசியலில் எதிர்கட்சிக்கு ஆதரவளித்து வெற்றி பெற வைப்பதும் நடக்கும். வெற்றி பெறுவதற்கே இவ்வளவு போராட்டம் என்றால் வெற்றி பெற்றால் கூட்டணி ஆட்சி என்பது எல்லாம் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகத்தான் அமையும்; வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

இவ்வாறு ஆண்டைகளிடம் அடிமைப் பட்டு தலித் கட்சிகள் கூட்டணி வைப்பதைவிட மாற்று சேரி மக்களிடம் கூட்டணி வையுங்கள் தலித் அரசியல் கட்சி தலைவர்களே உங்களுக்கு அதிகாரம் கிடைக்கும்.

எவ்வாறு எனில் தற்போதுள்ள சட்டமன்ற தனித் தொகுதிகள் 46. இந்த 46 தனித்தொகுதிகளில் தங்களுக்கென 15 தொகுதிகளில் வெற்றி பெற்றால்கூட மாநில அங்கீகாரம் கிடைத்துவிடும்தானே! இந்தத்

**நாடு சுதந்திரம் பெற்று 67 ஆண்டுகள் நிறைவுற்றும் தமிழகத்தில் ஒரு தலித் கட்சியும் தேர்தல் ஆணையத்தின் மாநில அங்கீகாரத்தை ஏன் பெற இயலவில்லை என்றால், தனக்கான நண்பன் யார்? எதிரி யார்? என்ற அரசியல் புரிதல் தலித் அரசியல் கட்சிகளுக்கு இல்லை. எனவே, அவர்களால் அரசியல் களத்தில் சாதிக்க இயலவில்லை என்றே எண்ண வேண்டியுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிகளில் ஏதோ ஒன்றோ இரண்டோ அல்லது அதிகபட்சமாக ஒன்பதோ பத்தோ தானே திராவிட கட்சிகளிடம் கூட்டணி வைத்தால் கிடைக்கும், மாறாக பொது தொகுதியையா தலித் கட்சிகளுக்கு ஒதுக்கி வெற்றி பெற வைக்கப் போகின்றார்கள் திராவிடக் கட்சிகள்.

மேலே பட்டியல் இட்டுள்ள தலித் கட்சிகள் தானே தங்களுக்குள் ஒன்றையொன்று போட்டியாகக் கருதி இதே 46 தனித் தொகுதிகளிலும் தலித் மக்களிடம் தங்களுக்காக வாக்கு சேகரிப்பார்கள், அல்லது நிலவுடமையாளர்களின் கட்சியில் இருந்து தேர்வு செய்யப்பட்ட தலித்துக்கு வாக்கு சேகரிப்பார்கள். மாறாக, தலித் அரசியல் கட்சிகள் தங்களுக்குள் கூட்டணி பேசி 46 தொகுதிகளையும் பகிர்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் போட்டியிடாமல் புரிந்துணர்வோடும் ஆதரவோடும் போட்டியிட்டால், அந்த தொகுதியில் உள்ள மொத்த தலித்துகளின் வாக்கும் சிதறாமல் பிற தலித் கட்சிகளின் ஆதரவோடு போட்டியிடுகின்ற வேட்பாளருக்குத்தானே கிடைக்கும்! இதைஏன் செய்வதில்லை தமிழகத்தில் உள்ள தலித் கட்சிகள்? சொந்த சகோதரனோடு ஒத்துப்போவதை விட ஆண்டைகளின் அரசியல் கட்சித் தலைவர்களிடம் விசுவாசம் காட்டுவது எளிதாக இருக்கின்றதா என்ன? பேசி தீர்க்க இயலாத பிரச்சனை ஏதேனும் உள்ளதா சகோதர கட்சிகளிடம் தலித் தலைமைகளுக்கு? தெரியவில்லை.

பிற சாதியினரின் வாக்குகள் இருந்தால் தான் வெற்றி பெற இயலும் என்றால், தேசியக் கட்சிகளும், மாநிலக் கட்சிகளும், நிறுத்தும் தலித் வேட்பாளருக்கு பிற சாதியினரின் வாக்கு வங்கி பிரிந்து பிரிந்து வாக்குகளாக மாறுகின்றது. ஆனால், தலித் கட்சிகளின் கூட்டணி சார்பாக போட்டியிடும் வேட்பாளருக்கு, தலித் வாக்குகள் பிரியாமல் விழுவதால் பெரும்பாண்மை கிடைக்கும், அல்லது குறைந்தது 6 சதமானத்துக்கு அதிகமான வாக்குகள் கிடைக்கும் என்பது எளியவர்களுக்கும் புரியும் உண்மையில்லையா? இது ஏன் தலித் அரசியல் கட்சிகளுக்குப் புரியவில்லை?

தொகுதி சீரமைப்பு என்னும் பெயரில் தலித்துகளின் வாக்கு வங்கியை சிதைக்கும் விதமாக அரசு முடிவெடுத்து செயல்பட்டாலும், 500 வாக்குகள் ஒரு கிராமத்தில் உள்ளது என்றால் அவற்றில் 100 வாக்குகள் சேரி மக்களின் வாக்குகளாகத்தான் இன்னமும் இருக்கின்றது. 400 வாக்குகளை மாநில கட்சிகள், தேசியக் கட்சிகள், பிற சாதியைச் சேர்ந்த சுயேட்சை வேட்பாளர்கள் பிரிக்கும் போது, சேரி மக்களின் 100 வாக்குகளை பிரிக்காமல் பெறும் தலித் கட்சிகளே வெற்றி பெற பெரு வாய்ப்பு உள்ளது என்பது ஏன் புரிவதில்லை?

மூன்றாவதாக, இதுவரை தனித் தொகுதிகளில் நிறுத்தப்படும் நிலவுடைமை யாளர்களின் கட்சி வேட்பாளர்கள் யாராவது தலித்துகளுக்காக, கட்சியின் கட்டுப்பாட்டை மீறி சட்டமன்றத்திலோ, பொது வெளியிலே குரல் கொடுத்து இருக்கின்றனரா? அவர்களால் தலித்து களுக்கு எள்முனையாவது நன்மை நிகழ்ந்து இருக்கின்றதா? இந்த நிலையில் பொது கட்சிகளில் இருந்து தனித்தொகுதிகளில் வேட்பாளர்கள் நிறுத்துவதை சட்டத்தின் வழி நின்று தடைசெய்வதற்கு தலித் கட்சிகள் ஒன்றிணைந்தோ அல்லது தனித்தோ ஏன் போராடவில்லை? குறைந்தபட்சம் தனித்தொகுதிகளிலாவது தலித் கட்சிகள் மட்டும் போட்டியிட்டு தனக்கான பெரும்பான்மையை நிரூபிக்கலாம், அல்லது திட்டங்களில் முன்னுரிமை பெற இயலும் அல்லவா? இதை ஏன் செய்வதில்லை?

கூட்டணி கூட்டணி என்று மீண்டும் மீண்டும் நிலவுடைமையாளர்களின் அரசியல் கட்சிகளையே சார்ந்து இருப்பது ஏன்? திராவிடக் கட்சிகளும் அல்லது தேசிய, மாநிலக் கட்சிகளும் தலித் கட்சிகளுடன் கூட்டணி வைப்பது என்பது சேரி மக்களின் வாக்குகளைப் பிரிக்கும் சூழ்ச்சியில்லையா? இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த உண்மை தெரிந்தும் தெரியாதது போல இருக்கப்போகின்றன தலித் அரசியல் கட்சிகள்?

இரவல் செருப்பை விட வெறுங்காலில் நடப்பது சுயமரியாதை மிகுந்தது என்று தமிழகத்தின் சேரிகளில் இருக்கும் ஏழை களுக்குப் புரிகின்றது, தலித் தலைமை களுக்கு எப்போது புரியுமோ? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதிலமடைந்தயென் மனசு



எப்பொழுதாகிலுமென்றில்லாமல்
எல்லா தருணங்களிலுமுன்
நினைவு மூச்சு
சுருண்டபடியிருக்கிறது.
துளிர் சிரிப்பினுள்
தரிசன நிசப்தமொழி
காண தோன்றும் காலை
நீர்க்கோடிட்டு
ஊட்டம் ஊட்டுகையில்
நீ பூப்பெய்தும் காலத்தின்
வரவு நேர்வுக்காய்
காத்திருத்தலின் போது
நீ சிரிக்கிற சப்தத்தின்
ஒலி
செவியுனுள் தேன்கலந்து
இரு கால்களால் நடந்து புகும்.
வேரோடு யாரோ அபகரித்துப்போன
இவ்விசயங்கள் யங்ஙனாவது
உயிர்பெறின்
அங்குமென் பெருஞ்சோகம்
அபகரித்தவனுக்கு கேட்க
நியாயமில்லை யென்றாலும்கூட...
சிதிலமடைந்தயென் மனசு
உனக்குள் ஞாபகமாய்
மீண்டும்
பூத்து திளைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுமை

ராஜபுரி என்ற வளமான நாடு. வினோதவர்மன் என்ற அரசன் அரசோச்சிய காலம். பெயருக்கேற்பவே புதுமைகளைச் செய்ய நாட்டங்கொண்ட தலைமகன். இதனாலோ என்னவோ அவன் பெயர் காரணப் பெயராகவே அமைந்துவிட்டது!

வினோதங்களில்தான் எத்தனை வகைகள்! அதில் இவ்வரசன் ஆடை வினோதங்களில் தனி நாட்டங்கொண்டிருந்தான். 'அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி' கேட்கவா வேண்டும்? வித்தியாசமான ஆடைகளை அணிவதிலும் அறிமுகம் செய்து பிரபல்யப்படுத்துவதிலும் ராஜபுரி சுற்றியுள்ள சிற்றரசுகளிலும், பேரரசுகளிலும் அதிகம் பேசப்பட்டு வந்தது.

புதிய ஆடை அறிமுகங்கள் செய்து பரிசுகள் பெறவும், இதனை வேடிக்கை காணவும் மக்கள் கூட்டம் அலைமோதின. ராஜபுரியின் அரண்மனையில் தினமும் இதே வேலையாகிவிட்டது. சாதாரண ராஜபணிகள் தடைப்பட்டன. வினோதவர்மனுக்கும், அரசி வினோதினிக்கும் இப்பிரச்சினையைத் தீர்க்க வழி தெரியவில்லை. மந்திரி மதிசூதனனை அழைத்து ஆலோசனை கோரினார் அரசர்.

மதிசூதனன் தன் அறிவின்பால் கர்வம் கொண்டவர். "ராஜாவுக்கும், ராணிக்கும் புதியதும், இதுவரை அறியப்படாததுமான புதுமையான ஆடையை அறிமுகம் செய்பவருக்குப் பரிசு 1000 பொற்காசுகள் என்றும், ஆனால் ஏற்கனவே அறியப்பட்ட ஆடையைக் காட்டுபவர் சிறைக்குக்கொண்டு செல்லப்படுவார் என்றும்' புதிய விதிமுறையை மந்திரி மதிசூதனன் வகுத்தார்.

புதிய நடைமுறை பற்றி ராஜபுரியிலும், சுற்றியுள்ள ஊர்களிலும் பறை சாற்றப்பட்டது. மக்கள் திகைத்து விட்டனர்! கூட்டம் திடீரென்று தடைப்பட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாக வருபவர்களும் சிறை சென்றனர். நாடு அமைதியாகிவிட்டது.

சுமார் 6 மாத இடைவெளியின்பின் ஒரு நாள், இரு நாடோடிகள் ராஜபுரி அரண்மனையில் நுழைந்தனர். தாம் இதுவரையில் அறியாத புதுமையான ஆடையைத் தயாரித்துத் தருவதாகவும், அதற்குத் தயாரிப்புக் காலம் ஒரு மாதமும், தனிமையான இடமும் வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தனர். ராஜாவும், ராணியும் ஆவலுடன் ஆவனசெய்வதாக வாக்களித்தனர்.

நீண்ட காலத்தின் பின் ஏற்பட்ட 'புதுமை' என்பதால் அரண்மனை முழுவதுமே ஆவல் பொங்கியது. நாடோடிகளும் வித்தியாசமாகவே நடந்துகொண்டனர். பிறகென்ன ஊர் முழுவதும் செய்தி பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடோடிகளுக்கான வீட்டின் வெளியே மக்கள் கூடி அதிசயம் பற்றி ஏதோ கூறிச் செல்வதும், கலைவதுமாக ராஜபுரி மீண்டும் களைகட்டியது. தையல் இயந்திரத்தின் ஒலி அந்த வீட்டுக்கு வெளியே செல்வோரின் செவிகளுக்கு ஏதோ புதுமைகளைச் சொல்வதாக கிளுகிளுப்பூட்டின.

அரண்மனையில், மந்திரியின் மனம் தடுமாறியது. வினோத உடையை எப்படியாவது முன்கூட்டியே அறிந்துவிட வேண்டுமென மனம் உந்தியது. ஒரு நாள் நாடோடிகளின் விருந்தினர் மாளிகைக்குச் சென்றார் மந்திரி. உள்ளே சென்ற மந்திரியைக் கவனிக்காதவாற நாடோடிகள் இருவரும் தீவிரமாகத் தையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

தையல் நடந்தபோதும் 'சட்டையை' மந்திரியால் காண முடியவில்லை. குழப்பத்துடன் மந்திரி "என்னப்பா ஏதுமே தெரியவில்லையே?" எனக் கேட்டுவிட்டார்.

அப்போதுதான் நிமிர்ந்து பார்த்த நாடோடிகளில் ஒருவன், மந்திரியைப் பார்த்துப் புன்சிரிப்புடன் வரவேற்றுவிட்டு, "எமது ஆடை அறிவாளிகளின் கண்களுக்கே தெரியும்" என்றான்.

அதிர்ச்சியுற்ற மந்திரி சங்கடத்துடன் ஒருவாறு சமாளித்துவிட்டு, "ஆடை மிகவும் நன்றாக எடுப்பாக புதுமையாக இருக்கிறது!" என ஆகா.. ஓகோ.. எனப் புகழ ஆரம்பித்துவிட்டார்.

அங்கிருந்து திரும்பிய மந்திரி சும்மா இருக்கவில்லை. ராஜசபையில் வந்து பதிய ஆடை பற்றி ஓகோவெனப் புகழத் தொடங்கிவிட்டார். 'இவ்வாடை அறிவாளி களுக்கு மட்டும்தான் தெரியும்.' என்ற தகவலைச் சொல்லி, ராஜா இதுவரை காணாத புதிய ஆடையைப் பெறப்போகின்றார் என்பதையிட்டு தான் பெருமிதம் கொள்வதாக மார்தட்டினார்.

ராஜாவுக்கும், ராணிக்கும் இருப்புக் கொள்ளவில்லை. ஒருநாள், ராணியிடம் சொல்லிவிட்டு ராஜா விருந்தினர் மாளிகைக்கு ரகசியமாகச் சென்றார். வழமைபோல் ஆடை தயாரிப்பு வேலைகளில் நாடோடிகள் மும்மரமாக இருந்தனர்.

சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்த ராஜாவுக்கு எதுவுமே தெரியவில்லை. ஐயோ பாவம்! தன் அறியாமையை எண்ணி ராஜா வருந்தினார். மந்திரிக்குத் தன்னைவிட அறிவு அதிகமுள்ளதை ராஜாவால் ஒத்துக்கொள்ள முடியாதே! ஒருவாறு தன்னியலாமையைப் புரிந்த ராஜா ஆடையைப் பார்த்ததாகக் கூறி நாடோடிகளைப் பாராட்டினார். அற்புதமான ஆடையென்று ராஜாவே வர்ணித்ததால் நாடோடிகள் பெரிதும் மகிழ்ந்தனர்.

அரண்மனை திரும்பியதும், ராணி உட்பட அனைருக்குமே புதிய ஆடைபற்றி ஓகோவென்று ராஜா புகழ்ந்து தள்ளினார். தகவல் காட்டுத் தீ போல் சுற்றியுள்ள ஊரெல்லாம் பரவியது.

அரண்மனையைச் சுற்றி கூட்டம் கூட ஆரம்பித்துவிட்டது. மீண்டும் ராஜ பணிகள் மேற்கொள்ள தடைகள் ஏற்பட்டன. மக்களின் ஆவலை ஈடு செய்ய ராஜாவும், ராணியும் புதிய ஆடைகளை அணிந்தவாறு நகர்வலம் வருவார்களென அறிவிப்பு செய்யப்பட்டது.

குறிப்பிட்ட தினம், வீதியின் இருமருங்கிலும் ஒரே கூட்டம். ராஜாவும் ராணியும் புதிய ஆடைகளுடன் சிறப்பாக யானை மீதேறி நகர்வலம் வந்தனர். மக்கள் வாயடைத்து விக்கித்துப் போயினர். நகரினை வலம்வந்து கொண்டிருந்த ராஜாவும், ராணியும் பெருமிதத்தால் குதூகலித்தனர்.

ஊரின் புறத்தே ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. தெரு வழியே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களுக்கு உற்சாகம் பொங்கியது. ராஜா, ராணியைப் பார்க்க விரைந்து முன்வரிசைக்கு வந்தனர்.

ராஜாவையும் ராணியையும் பார்த்த ஒரு சிறுவன், "அங்கே பாராடா... ராஜாவும் ராணியும் எங்களைப் போலவே அம்மணமாக வருகிறார்கள்!!" என்றான் சத்தமாக.

'புதுமைக் கோலத்தில் ராஜா ராணி' ஊர்வலக் காட்சியைப் பார்த்ததால் விக்கித்த கூட்டத்திலிருந்து சிரிப்பொலி கிளம்பியது. ராஜாவுக்கும், ராணிக்கும் ஏதோ பொறிதட்டியது. ●

---

நன்றி: மௌனம் (மே, யூன், யூலை 1993 காலாண்டு இதழ் 1, பிரான்சு). இவ்வாக்கம் நான் பிரான்சு வந்திருந்த காலத்தில் கிபி அரவிந்தனுடன் இணைந்து வெளிட்ட 'மௌனம்' முதலாம் இதழில் எழுதப்பட்டது. யாழின் தீவுக் கூட்டத்தில் அமைந்த சிறு கிராமமான கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் எட்டாம் வகுப்பு படித்தபோது சக வகுப்பு நண்பன் சிவானந்தன் சொன்ன செவி வழிக்கதை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு சீன்

வெய்யில் சுத்தமாக இறங்கியிருந்தது. ஒரு புண்ணியவான் விளக்கிய லெஃப்ட் ரைட் எல்லாம் சரியாகத் திரும்பியதில் ரங்கராஜபுரம் ஐந்தாவது தெருவில் வந்து நின்றிருந்தேன். வண்டியை ஒரு ஓரமாக நிறுத்தி ஹெல்மெட் லாக் செய்து, சென்டர் ஸ்டாண்ட் போட்டேன். சென்னையில் வாகனத்தை நிறுத்துவது தனி கலை. அந்தக் கலையில் சமீபத்தில்தான் கொஞ்சமாய்த் தேறியிருக்கிறேன். எதிர் திசையில் "வெப் சொல்யூஷன்ஸ்" என்னும் பதாகை தெரிந்தது. அதன் உரிமையாளன் விசு என் கூடப் படித்தவன். அதென்னமோ மகா நகரமான சென்னைக்கு வந்தபிறகு எதிர்ப்படும் ஒவ்வொரு முகத்தையும் உற்றுப்பார்த்து அதில் எவனெல்லாம் நம்ம ஊர்க்காரன் என்று தேடத் தோன்றும் போல.

சென்னைக்கு வந்து மூணு வாரமாயிற்று. "இந்த வீக் எண்ட் வந்துரு" என்று நூறு தடவையாவது கூப்பிட்டிருப்பான். வேறு ஆப்ஷனே இல்லாமல் விசுவைத் தேடி வந்திருக்கிறேன். ஸ்கூல் டேஸிலேயே டொக்கு விழுந்த கண்களும் பூஞ்சை உடம்புமாகக் கம்ப்யூட்டர் துறைக்கென்றே அளவெடுத்தாற் போல இருப்பான். அதிகம் துவைக்காத ஆங்கில வாசக டீஷர்ட்டும் ஒரு தரம்கூட துவைக்காத கார்டுராய் பேண்டுமாக அவன் ஒரு விற்பன்னனாகவே வலம் வந்தான். எட்டு வருடங்கள் கழித்துப் பார்த்தால் இந்த 'வெப் சொல்யூஷன்ஸ்' கம்பெனியை சொந்தமாக நிறுவிப் பத்துப் பதினைந்து பேருக்கு வேலை கொடுத்துக்கொண்டிருப்பதாகப் போன தரம் ஊருக்கு வந்தபோது சொன்னான். பொறாமைக்கு வாய்ப்பே இல்லாத ஸ்னேகம் எங்களது.

மாடிக்கு மொத்தம் பதினெட்டுப் படிகள். ஏறிச்சென்று பார்த்தால் வாசலில் அமர்ந்திருந்த செக்யூரிட்டி "ஓர்த்தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்ல. நாளைக்கு வாங்க..." என்று என்னைத் திரும்ப அனுப்புவதிலேயே குறியாய் இருந்தார். நான் பேசியது அவர் காதுகளில் கேட்கவில்லை போலும். பன்ச்சராகிக் கீழே இறங்கினேன். "எங்க போனே ராசா" என்று தூரத்தில் பாட்டு கேட்டது. எரிச்சலாகி செல்லில் அழைத்தேன். கட் செய்துவிட்டு அடுத்த நிமிசம் அவனே கூப்பிட்டான்.

"சாரி மாப்ள... ஆஃபீஸ் ஸ்டாஃப் ஒருத்தவுங்க அப்பா திடீர்னு இறந்திட்டாரு.. எல்லாரும் அங்கே தான் இருக்கோம். இன்னும் ஒன் அவர்ல வந்துருவேன். கோச்சுக்காம வெயிட் பண்ணு மாப்ள."

சொன்ன காரணம் ஒரு முட்டுச்சந்தைப் போல முடிவுற்றிருந்ததால் 'சரி' என்று முனகிவிட்டு வைத்தேன். டூவீலரை நிறுத்தியிருந்த இடத்துக்கு வந்தேன். எங்கே செல்லலாம் என்று எத்தனை யோசித்தாலும் ஒரு இடமும் தோன்றவில்லை. சீனு இருப்பது மேடவாக்கம். எட்வின் வேலை பார்ப்பது எண்ணூர். ஒரு மணி நேரத்தைக் கொல்வதற்காக இரண்டு இடத்தையும் நோக்க முடியாது. அப்படியே நின்றேன்.

என்னை நக்கல் செய்வதற்காகவே பெய்தாற் போல திடீர் மழை ஆரம்பித்தது. அன்னியர்களை துரத்தி விளையாடுவதில் மழைக்குத்தான் எத்தனை ஆனந்தம்...? சட்டென்று ஓடி எதிர்த்தாற்போல் இருந்த டீக்கடையில் நுழைந்தேன். மழை வந்தாலே ஒன்று, நன்றாக நனைய வேண்டியிருக்கிறது அல்லது நனைவதற்குள்ளாக ஓடி ஏதாவதொரு கூரைக்குக் கீழே ஒதுங்க வேண்டியிருக்கிறது.

அதிர்ஷ்டவசமாக அந்த டீக்கடையின் உட்புறம் ஒரே ஒரு டேபிள் இருந்தது. அதைச் சுற்றிலும் மூணு சேர்கள் இருந்தன. பாதிதான் உட்கார முடியும் போல அவ்வளவு சின்ன சேர்களை அதற்கு முன் பார்த்ததில்லை. ஒரு டீயை சொல்லிவிட்டு சேரில் அமர்ந்தேன். மத்தியான நேரம் ஏற்படுத்தித் தந்த லேசான இருள் ரம்மியமாக இருந்தது. மேலே ஒரு மின்விசிறி 'கட்டக்' 'கட்டக்' என்று சப்தமெழுப்பியபடி சுற்றிக்கொண்டிருந்தது. மேலே இருந்த டி.வி.யில் சப்தமில்லாமல் டாம் அண்ட் ஜெர்ரி ஓடிக்கொண்டிருந்தது. பூனையை சத்தாய்க்கும் எலி என்பது யாரையும் கவர்ந்துவிடுகிறது. நான் சொல்லிய, டீ வருவதற்குள் சடாரென்று உள்ளே நுழைந்த ரெண்டு பேர் சேர்களை கைப்பற்றிக்கொண்டார்கள்.

அதில் ஒருவன் நன்றாக நனைந்திருந்தான். லேசான தாடி. ப்ரவுன் நிறக் கண்கள். நெற்றியில் ஒரு சின்ன வடு இருந்தது. எனக்குத் தெரிந்த யாரையோ நினைவுபடுத்தினான். யார் என யோசிக்க முடியவில்லை. இன்னொருவன் சற்றுப் பருமனான உடல், பகல் நேர உறக்கத்திலிருந்து எழுந்து வந்தாற்போலத் தோற்றம்... ரெண்டு பேருமே ஜீன்ஸில் இருந்தனர். பருமன் இப்போது ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்தான்.

மழை வலுவாக அடித்து ஆடிக் கொண்டிருந்தது. பார்க்கும் தருவாயில் மழை மனசுக்கு இதமாகிவிடுகிறது. எந்த இடமாக இருந்தாலும் மழை பார்க்கையில் ஏதோ சந்தோஷமாய்த்தான் இருக்கிறது. நானும் ஒரு தம்மைப் பற்ற வைத்தேன். கல்லாவின் முன்னால் அமர்ந்திருந்தவர் அனேகமாக முதலாளியாக இருக்கக் கூடும். நெற்றியில் குங்கும சந்தன திருநீற்றுப் பட்டைகளுடன் ஆன்மிகமாய்த் தெரிந்தார். ஏதோ கணக்கு நோட்டை எடுத்துவைத்துக்கொண்டு தன் முன் இருந்த ஸ்லேட்டில் எதையோ எழுதிக்கொண்டிருந்தார்.

கடையின் உள்புறமிருந்து வந்த மாஸ்டர், தாம்பாளத்தில் இருந்து வடைகளை ஹாட்பாக்ஸிற்கு இடம் மாற்றினார்.

**அன்னியர்களை துரத்தி விளையாடுவதில் மழைக்குத்தான் எத்தனை ஆனந்தம்...? சட்டென்று ஓடி எதிர்த்தாற்போல் இருந்த டீக்கடையில் நுழைந்தேன். மழை வந்தாலே ஒன்று, நன்றாக நனைய வேண்டியிருக்கிறது அல்லது நனைவதற்குள்ளாக ஓடி ஏதாவதொரு கூரைக்குக் கீழே ஒதுங்க வேண்டியிருக்கிறது.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வடையின் மணம் மட்டும் அறையெங்கும் கமழ்ந்து மிஞ்சியது. அந்த ஒல்லியான மனிதன் அங்கே நான் என்ற ஒருவன் இல்லாதது போலப் பேச ஆரம்பித்தான்.

"அபத்தமா இருக்குது வினோ... என்னால இதுக்கு மேல பொறுத்துக்க முடியாது. குட்பை சொல்லிட்டு கௌம்பிரவா நானு...?" என்றான்.

அதற்கு அந்தப் பருமனான வினோ "காரியம் பெருசா வீரியம் பெருசா...?" என்றான்.

தன் ஒரு விரலால் மோவாயைத் தேய்த்தபடி "வீரியம் இல்லாம காரியம் எப்பிடி செய்றது...?" என்றான்.

அதை சாதாரணமாக எடுத்துக்கொண்ட வினோ "ராஜி... நான் சொன்னா கேளு.படம் முடியிற வரைக்கும் நவ துவாரத்தையும் மூடிட்டு அட்ஜஸ்ட் செஞ் சிக்க. அடுத்து நீ நெனைக்கிறா மாதிரி படம் பண்ணலாம். அந்தாளைப் பத்தித் தெரியாதா...? தான் சொல்றதை அந்தக் கடவுளே வந்து சொன்னாலும் மாத்திக்கிற டைப் இல்லை. வெட்டியா ஏன் ஆர்க்யூ பண்றே...?"

கண்ணால் அந்த ராஜி கேட்டிருப்பான் போலும், அவர்கள் இருவருக்கும் தலா இரண்டு வடைகள் வழங்கப்பட்டிருந்தன. அதைப் பிய்த்து தன் வாய்க்குள் அனுப்பியபடியே

"சரி மக்கா... நீ சொல்றது ரைட்டு... ஒரு லாஜிக் வேணாமா...? ஹீரோ யாரு...? இல்ல கேக்குறேன் அவனோட கேரக்டர் என்ன...? நீ சொல்லு மச்சி... நீ சொல்லு நான் கேக்குறேன்."

இதற்கு வினோ மௌனமாக இருந்தான். என் கண்களை ஒருதரம் வெட்டுக்கத்தி போலப் பார்த்த ராஜி அவனே மறுபடி தொடர்ந்தான்.

"ஹீரோ ஒரு வாத்தியாரு. கிட்டத்தட்ட நவயுக விவேகானந்தர் மாதிரி ஒரு கேரக்டர்... நீ தானே சொன்னே... நீ தானே சொன்னே?" தன் முன்னால் இல்லாத ஒரு நபரை திட்டுகிற தொனியில் சொன்னான். அவன் குரல் சற்று உச்சஸ்தாயிக்குப் போயிருந்தது.

"அப்பிடி எல்லாம் பில்ட் அப் குடுத்திட்டு செகண்ட் ஆஃப்ல எப்பிடி ஹீரோ தண்ணியடிச்சிட்டு குத்துப் பாட்டு பாடுற மாதிரி உன்னால கற்பனை செய்ய முடியிது..?"

... இப்போது குரலின் ஸ்தாயி குறைந்திருந்தது.

"மச்சி அது செம்மை கேரக்டர்டா... அந்தாளு சொன்னது வெறும் ஷெல்லு... உனக்குத் தெரியாததா...? ஆனந்தன் ஒரு வாத்தியாருன்னு மட்டுந்தான் சொன்னாரு டைரக்டர். பார்த்துப் பார்த்து நான் உருவாக்கலை...? உரு ஏத்துனேன்ல...? எப்பிடி நிப்பான்... எப்படி நடப்பான்... என்ன மேனரிஸம்... என்ன வாய்ஸ் மாடுலேஷன்ல பேசணும்னெல்லாம் எத்தனை சொல்லிருப்பேன் டிஸ்கஷன்ல...? முதல் ஷெட்யூல்ல ஹீரோ சிவகுரு கிட்டே என்ன சொன்னாரு...?ஆனந்தன் கேரக்டர் முழுக்க ராஜியோட வார்ப்பு ஸார், அப்டின்னு சொன்னாரா இல்லையா..? இப்ப எங்கேருந்து வந்தது குத்துப் பாட்டு...?" வரிசையாக இருமினான். நாலைந்து முறை இருமியவன் தன் கைக்குட்டையால் வாயைப்

**பார்த்துப் பார்த்து நான் உருவாக்கலை...? உரு ஏத்துனேன்ல...? எப்பிடி நிப்பான்... எப்படி நடப்பான்... என்ன மேனரிஸம்... என்ன வாய்ஸ் மாடுலேஷன்ல பேசணும்னெல்லாம் எத்தனை சொல்லிருப்பேன் டிஸ்கஷன்ல...? முதல் ஷெட்யூல்ல ஹீரோ சிவகுரு கிட்டே என்ன சொன்னாரு...?ஆனந்தன் கேரக்டர் முழுக்க ராஜியோட வார்ப்பு ஸார், அப்டின்னு சொன்னாரா இல்லையா..? இப்ப எங்கேருந்து வந்தது குத்துப் பாட்டு...?"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்திக்கொண்டு "ஸாரி" என்றவன் மறுபடி நிதானமாக ஆரம்பித்தான்,

குத்துப் பாட்டுன்றது ஒரு படத்துக்குள்ளே ஆமை புகுந்தாப்ல மச்சி. என்னா மாதிரி சீன் வெச்சிருந்தம்...? ஆனந்தனுக்கு வேலை போயி, வெக்ஸ் ஆகி, நடந்து வருவான். அப்போ ஒரு அறுபது வயசுப் பெரிசு அவன் கிட்டே டாஸ்மாக்குக்கு வழி கேப்பாரு. இவன் விரக்தியா சிரிச்சிட்டே "எனக்குத் தெரியலைய்யா"ன்னு சொல்லி நகருவான். சட்டுன்னு மழை கொட்டும். ரோட்டோரத்தில கிடக்குற யூஸ் அண்ட் த்ரோ தம்ப்ளர்ல மழைத் தண்ணி நிரம்பும். அப்ப ஒரு பார்வை பார்ப்பான் ஹீரோ. செம்மை பொயட்ரிடா அந்த சீன். இப்ப குடிச்சிட்டு ஹீரோ குத்துப் பாட்டு பாடுறான். இந்த சீனைத் தூக்கிட்டாண்டா அந்தாளு... செத்துறலாமான்னு வருது."

இப்போது டாமுக்கும் ஜெரிக்குமான துரத்தல் உக்கிரமாகியிருந்தது. என் பார்வை அங்கே இருந்தாலும் என் கவனம் அவர்களின் சம்பாஷணையில் லயித்தது. "எதுக்கு வினோ குத்துப் பாட்டு...? வரிசையா நாலு ஹிட்டு. அதுல ஒரு படத்துக்கு ஸ்டேட் அவார்ட். இடையில ஒரே ஒரு படம் ஓடலைன்னதும் குத்துப் பாட்டு வெக்கிறதை என்னால ஏத்துக்க முடியாது." என்றவன் தன் கை விரல்களை அந்தரத்தில் சொடக்கியவன் யாருமற்ற திசை பார்த்து "ஏன்... பயம்மா மிஸ்டர் பி.எம். ராமநாதன்...? பயப்படுறீங்களா...?"

ராஜின் முகம் முழுவதுமாக வியர்த்திருந்தது. மிகவும் உணர்ச்சி வசத்தில் இருப்பதை முகம் சொன்னது. சாமி வந்த சிறுமியைப் போல லேசாகத் தள்ளாடினான். கல்லா பக்கத்தில் அமர்ந்திருந்த முதலாளி லைட் சுவிட்ச்சைத் தட்ட, குழல்வெளிச்சத்தில் அந்த இடமே வேறொன்றாக மாறியது. நான் அமைதியாக அவர்கள் இருவரையும் பார்த்தபடி ஆனால், அவர்களுக்கு உறுத்தாத வண்ணம் அமர்ந்திருந்தேன்.

பி.எம்.ஆர் பெரிய இயக்குனர். அவர் எடுத்த நர்த்தனம் படம் எட்டு வருசங்களுக்கு முன் வந்தது. ஐந்து படம் எடுத்திருக்கிறார். அதில் கடைசியாக எடுத்த மகாவரம் நல்ல கதையாக இருந்தாலும் அட்டர் ஃப்ளாப்பாகி இருந்தது. அதற்கடுத்த படத்தைப் பற்றித்தான் பேசிக்கொள்கிறார்கள். எனக்கு வியப்பாக இருந்தது. சினிமாவின் ஜிகினா மேல் எனக்கு எப்போதும் லேசான கிறக்கம் உண்டு. எல்லாப் படத்தையுமே பார்க்கும் லோ கிளாஸ் ரசிகர்களில் ஒருவன் நான். போன தரம் சென்னை டு மதுரை, மதுரை டு சென்னை பஸ்சில் சென்று வந்த போது அடுத்தடுத்த நாள், ஒரே படத்தை ஆர்வமாகப் பார்த்தவன் என்றால் புரியும். என் முன்னால் அமர்ந்திருக்கும் இருவரும் ஆனானப்பட்ட பி.எம். ஆர் படத்தில் வேலை பார்க்கிற உதவி இயக்குனர்கள் போல.ஒரு சினிமாவை எப்படி உருவாக்குகிறார்கள் என்று கிட்டத்தில் பார்க்கும் வாய்ப்பு ஒரு தரம்கூட வாய்க்காத எனக்கு அவர்கள் இருவரையும் பார்க்கும் போது லேசான பிரமிப்பாக இருந்தது.

தெளிவான குரலில் முன்பிருந்த உரத்த தொனிக்குப் பதிலாக மௌனமாக பேசினான் ராஜி.

"மச்சி... நீ என்ன சொல்றே...? குத்துப் பாட்டு வேணாம்னு நான் சொன்னது தப்பா...? தப்புன்னா செருப்பால அடி. நான் வாங்கிக்கிறேன்."

இப்போது 'தம்'மை பற்றவைத்துக் கொண்டு என்னை ஒருதரம் பார்த்த வினோ வெளியே மழையைப் பார்த்தான். அது விடுவதாயில்லை. இன்னும் விசு வருவதற்கு நேரமிருந்ததால் நான் டி.வி. பார்ப்பதைப் போல அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

"ராஜி... உன் சைட் எந்தத் தப்பும் இல்லை. டைரக்டரை பற்றி யோசி. அவருக்கு ஃபைனான்ஸ்ல நெருக்கடி. முன்னாடி ப்ராமிஸ் பண்ண இடத்துலேருந்து ஒரு பல்க் அமவுண்ட் வரவேண்டியது வரலை. இப்ப பத்துவட்டி பரமு கிட்டே வாங்கியிருக்காரு போல. பணம் குடுக்குற நெருக்கடி என்னானு உனக்குத் தெரியாதா...? அதான் கொஞ்சம் காம்ப்ரமைஸ் பண்ணிக்க நினைக்கிறாரு."

மறுபடி ரௌத்ரமானான் ராஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னா ம...த்த காம்ப்ரமைஸ் பண்ணிக்க நெனைக்கிறாரு...? மொதல் நாலு படத்துலயும் எந்தக் கீறலும் விழாம எடுக்க முடிஞ்சதில்ல...? அப்போல்லாம் செய்யலை.இப்ப நீயே ப்ரொட்யூசர்ன்றதால உன் படத்துக்குள்ளே குத்துப் பாட்டு வருது. பன்ச் டயலாக்கும் வெக்கத்தான் போறே...? இதுக்கு எதுக்கு, வார்த்தைக்கு வார்த்தை என் சினிமா, என் சினிமான்னு க்ளெய்ம் பண்ணிக்கினே அலைஞ்சே... முன்னாடி சொன்ன வார்த்தையெல்லாம் மயக்கத்துல இருக்கிற பாம்பு மாதிரிதான் மச்சி. அது திடீர்னு எழுந்து வந்து கண்ணைக் கொத்தியே தீரும்."

"இதுல உனக்கென்ன வலிக்குது...? அவருக்கு இது லைஃப் பிராப்ளம். இந்தப் படத்தை முடிச்சி குடுத்துட்டு நல்ல பிள்ளைன்ற பேரை எடுத்துட்டு, படம் பண்ணப் போ. அதை விட்டுட்டு பாதில போறது உனக்கும் நல்லதில்ல. அவருக்கும் மனக்கஷ்டம். காரியம் பெருசா வீரியம் பெருசா...? சொல்றதைக் கேளு மச்சி. டைரக்டர் எது சொன்னாலும் தலையை ஆட்டிட்டே இன்னும் இருபது நாளை கழிச்சிடு. சரியா...?"

அதன் பிறகு கொஞ்ச நேரம் அந்த ரெண்டு பேருமே எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அங்கே ஒரு அசிங்கமான மௌனம் ஏற்பட்டிருந்தது.

நான், எனக்கு முன்னால் நிகழ்ந்துகொண்டிருக்கிற ஒரு நாடகத்தின் முடிவை அறிந்துகொண்ட பிறகு வெளியே கிளம்பலாம் என்று ஆவலாய்க் காத்திருந்தேன். வாசல் பக்கம் பார்த்ததில் மழை குறையத் தொடங்கியிருந்தது. ஓரிரு தைரிய மனிதர்கள் தலையில் கேரிப் பையை சுற்றிக்கொண்டு சைக்கிளிலும் நடந்தும் திரியத் தொடங்கியிருந்தார்கள்.நான் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, எதாவது செய்தாக வேண்டுமே என்று சலனமேதும் இல்லாத என் கைக் கடிகாரத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

"க்கும்" என்று செருமியவாறே, "வினோ... நீ சொல்றது கரெக்ட்டு. பி.எம்.ஆர் எக்கேடு கெட்டா எனக்கென்ன...? நான் பேசப்போறதில்ல. ஆனா பாக்கப்போறேன். குத்துப் பாட்டு வெக்கட்டும். எதை வேணா எடுக்கட்டும்...? ஏற்கனவே இந்தக் கதையை இவர் எடுக்குறது மேல எனக்கு ஹோப் இல்லை. இப்ப பாதில கழண்டா எனக்கு லாஸூ... முழுசா முடிச்சிட்டு பை சொல்லிட வேண்டியதுதான். டப்பிங்குக்கெல்லாம் இருக்கப் போறதில்ல நானு." என்றவன் ஒரு தம்ளர் தண்ணீரை எடுத்துக் குடித்தான்.

தன் குரலைத் தாழ்த்திக்கொண்டு "நம்மாளு போன படம் செஞ்சாரில்ல அமுதா ஃபிலிம்ஸ்க்கு, அந்த ப்ரொட்யூசர் நாராயணனோட மச்சான் ஒருத்தர். பேரு நந்த கோபால்னு ஜுவெல்லரி ஓனர். ஒண்ணாரூவால முடிச்சிருவீங்களான்னு கேட்டிருக்காரு. உனக்கு சொல்லிருக்கேன்ல, 'சாயங்கால தேவதைகள்'னு லவ் ஃபெய்லியூர் மேட்டர்.அதை தான் ஒன் லைன் சொன்னேன். சீக்கிரம் ஆரம்பிச்சிடலாம்னு சொல்லிருக்காரு.பார்ப்போம்... நீ எப்டி, இந்தப் படத்தோட கழண்டு வந்துருவியா... இல்ல...?"

**குத்துப் பாட்டு வெக்கட்டும். எதை வேணா எடுக்கட்டும்...? ஏற்கனவே இந்தக் கதையை இவர் எடுக்குறது மேல எனக்கு ஹோப் இல்லை. இப்ப பாதில கழண்டா எனக்கு லாஸூ... முழுசா முடிச்சிட்டு பை சொல்லிட வேண்டியதுதான். டப்பிங்குக்கெல்லாம் இருக்கப் போறதில்ல நானு. என்றவன் ஒரு தம்ளர் தண்ணீரை எடுத்துக் குடித்தான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு அந்த வினோ, "என்ன மச்சி இப்டி கேக்குறே... நீ வான்னு கூப்பிடும் போது டாண்ணு வந்திருவேன்ல. உனக்காகத்தான்யா நான் இருக்கறதே...

இப்போது அவர்கள் இருவரும் எழுந்துகொண்டார்கள், தன் ஜீன்ஸ் பாண்டின் பின் பாக்கெட்டில் புடைத்துக் கொண்டிருந்த அழுக்கு நிற பர்ஸை எடுத்து அலட்சியமாகப் பிரித்தான் ராஜி. ஒரு நூறு ரூபாய்த் தாளை எடுத்து கல்லாவில் நின்றிருந்த மனிதரிடம் நீட்டினான். மிச்ச சில்லறையை வாங்கி இன்னொரு பாக்கெட்டில் செருகிக்கொண்டே நடக்க ஆரம்பித்தான்... டி.வி.யில் ஒரு மரத்தில் கட்டப்பட்டிருந்த கார்ட்டூன் பூனை முழுவதுமாகத் தோற்று சர்வாங்கமும் நடுங்கிக்கொண்டே நின்றிருந்தது. எலி மிக ஏளனமான புன்னகையோடு இருந்தது.

இன்னும் ஐந்து நிமிடத்தில் வந்துவிடுவதாக விசு எஸ்.எம்.எஸ். பண்ணி இருந்தான். நானும் டீக்கு காசை கொடுத்துவிட்டுக் கிளம்பத் தயாரானேன். நான் நீட்டிய ஐம்பது ரூபாயை வாங்கி தன் மேசையில் வைத்துக்கொண்டே, கல்லாவில் இருந்த மனிதர் எட்டிப் பார்த்தார். அவர்கள் இருவரும் பேசிக்கொண்டே நடப்பதை உறுதி செய்தவராகத் தன் சட்டைப் பையில் இருந்த செல்லை எடுத்தார். எந்த பட்டனையும் அழுத்தாமல் தன் காதில் வைத்து,

"சார்... ஆமாம் சார், கௌம்பிட்டாங்க சார்..." என்றவர் லேசாகத் திரும்பிப் பார்த்தார்.

எதிர்முனை எதுவோ பேச உம்... உம்... என்று கேட்டுக்கொண்டே இருந்தவர்,

"பீ.எம்.ஆர் சார்... நீங்க பெரிய டைரக்டர். நீங்க கேக்கும் போது எப்டி சார் மறுக்கமுடியும்... அதான் சார், 2 பேரும் வந்ததும் செல்லுல உங்க நம்பரை அடிச்சி பைக்குள்ளே வெச்சிக்கிட்டேன். பக்கு பக்குன்னு இருந்திச்சி சார், உங்க நேரத்துக்கு மழை வேற அடிச்சி ஊத்துச்சா... அதான் இங்கனயே உக்காந்துட்டாங்க..."

நான், அந்த திருநீறும் குங்குமமும் வியர்த்துக்கொண்டிருந்த நெற்றிக்குக் கீழே இருக்கும் அவரது கண்களைத் தேடினேன்.

"நான், இப்பிடி செல்லை ஆன் செஞ்சி வெச்சிருந்தேன்னு தயவு செஞ்சி சொல்லிடாதீங்க சார்..." இப்போது அந்தக் கண்கள் எங்கேயும் பார்க்காமல் தாழ்ந்தன. அவரது குரலில் இன்னுங்கொஞ்சம் நடுக்கம் தெரிந்தது.

"சரி சார்... இருக்கட்டும் சார்... அப்பறம்..." லேசாக இழுத்தவர் "என் மச்சான் வெங்கடேசுன்னு... உங்க படம்னா பைத்தியம் சார்... அவனுக்கு ஒரு சீன்ல தலையைக் காட்டிறணும்னு ரொம்ப நாளா அனத்துவான் சார். இந்த மாதிரி, பீ.எம்.ஆர். சார் ஆபீசு உங் கடைக்கு எதுத்தாப்ல தானே இருக்கு... என்னை ஒரு சீன்ல நடிக்க வெய்யி மாமான்னு ஒரே நச்சரிப்பு சார். போன படத்தப்பவே ஒரு தரம் கேட்டேன்..." லேசான சிரிப்புடன்,

"ரொம்ப தாங்க்ஸ் சார்... ஓக்கே சார்... ஓக்கே சார்... வர்ற வெள்ளிக்கிழமை தான சார்... ஏவியெம்மா சார்... சரிங்க சார்... ரொம்ப நன்றிங்க சார்..."

பயபக்தியுடன் செல்லை டேபிள் மேல் வைத்தார். இன்னும் நான் நிற்பதைப் பார்த்துவிட்டு கொஞ்சம் கறாரான குரலில்,

"என்னா வேணும்...?"

"50 ரூபா கொடுத்தேன். மிச்சம் தர்லை..."

உடனே தன்னால் தாமதம் என்பதை உணர்ந்துகொண்டவராக,

"சாரி சார்... முக்கியமாப் பேசினதுனால கவனிக்கலை. இந்தாங்க சார்..." அவர் கொடுத்த மிச்சத்தைக் கையில் ஏந்தியபடியே வெளியே வந்தேன். எதிர்ப்புறம் விசுவின் அலுவலகத்தை நோக்கி நகர்ந்தேன். அதற்கு முந்தைய வாசலில் நின்றபடி, இன்னும் சுவாரசியமாகத் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்த ராஜியையும் வினோத்தையும் பார்த்துக்கொண்டே கடந்து சென்றேன். சற்று முன் அவ்வளவு மழை பெய்ததற்கான அறிகுறியே இல்லாமல் பளீரென்று முடிவடைந்திருந்தது அந்தக் காட்சி.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வமாக்கப்பட்ட வண்ணார்கள்

சைவம், வைணவம் என்ற இரு நிறுவன சமயங்களின் எல்லைக்குள் வராத தெய்வங்கள்; தமிழகத்தில் ஏராளமாக உள்ளன. இவற்றைக் கிராம தெய்வம், குல தெய்வம் என்ற பெயர்களிலும், இவை உறையும் இடங்களை ஊர்க்கோவில், கிராமக்கோவில் என்ற பெயர்களிலும் அழைப்பது பொதுவான மரபு. சிறுதெய்வம், பேய்க்கோவில் என்று மேட்டிமையோர் இவற்றைக் குறிப்பிடுவர். ஆய்வாளர்களால் இத்தெய்வங்கள் நாட்டார் தெய்வங்கள் என்றழைக்கப்படுகின்றன.

இயல்பாக இறந்த, தற்கொலை புரிந்தும், விபத்தில் சிக்கியும், கொலையுண்டும் இறந்த மனிதர்களின் நினைவாக உருவானவையே இத்தெய்வங்கள்.

மனித உடலில் ஆவி என்ற ஒன்று உறைவதாகவும், மனிதன் இறந்தபின் அவன் உடலைவிட்டு அது வெளியேறுவதாகவும் புராதன மனிதன் நம்பினான். குறிப்பிட்ட மனிதனொருவன் வாழ்வதற்கென்று வரையறுக்கப்பட்ட காலத்திற்கு முன்பே, கொலை, விபத்து, தற்கொலை என்பனவற்றால் அவனது உயிர் பறிக்கப்படும் போது அவனது உடலில் உறைவதாக நம்பும் ஆவியானது, அமைதியற்றுப்போகிறது என்ற கருத்து உருவாகியுள்ளது. இதன் தொடர்ச்சியாக அவனது ஆவியானது தன்னைக் கொன்றோரைப் பழிவாங்கும் என்ற பய உணர்வின் அடிப்படையில் அதனைத் தடுக்கும் முகமாக அவனை வணங்கத் தொடங்கினர். மற்றொரு பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது ஆவியை அமைதிப்படுத்தி அதன் துணையைப் பெறலாம் என்றும் நம்பினர்.

**கொலையில் உதித்த தெய்வங்கள்**

இத்தகைய நம்பிக்கைகள் மிகவும் தொன்மையானவை என்பதற்குச் சான்றாக சங்க கால நடுகல் வழிபாடு உள்ளது. போர்க்களத்தில் மரணமடைந்த வீரனுக்கு நடுகல் நாட்டும் வழிமுறை குறித்துத் தொல்காப்பியமும், நடுகல் வழிபாடு குறித்து சங்க இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. கல்வெட்டுக்களுடன் கூடிய நடுகற்களும் கிடைத்துள்ளன.

நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியாகவே கொலையுண்டோருக்குக் கல்நாட்டியும், பீடம் அமைத்தும், சிலைவடித்தும் வணங்கும் வழக்கம் நிகழ்கிறது. கொலையில் உதித்த தெய்வங்கள் என்று இத்தெய்வங்களை அழைக்கலாம்.

கொலையில் உதித்த தெய்வங்கள் யாவும் அடிப்படையில் உண்மையில் மனிதர்களே. மனிதர்கள் சிலர் இவ்வாறு தெய்வமாக்கப்படுவதற்கு அவர்கள் கொலையுண்டதே அடிப்படைக் காரணம். கொலைக்கு ஆளாவதற்கான காரணங்களுள் ஒன்று சாதி மீறிக் காதலித்தலாகும். கௌரவக் கொலை என்று ஊடகங்களிலும், நீதிமன்றத் தீர்ப்புகளிலும் இன்று இடம்பெறும் கொலைச் செயலுக்கு அடிப்படைக் காரணம் சாதி மீறியக் காதல்தான்.

சாதி மீறிக் காதலித்துக் கொலைக்காளான இளைஞர்களும், இளம்பெண்களும் தெய்வங்களாக நிலைபெற்றுள்ளார்கள். இவ்வரிசையில் வண்ணார் சமூக இளைஞர் களும் இடம்பெற்றுள்ளனர்.

***வண்ணார மாடன்: 1***

திருநெல்வேலி மாவட்டத்தில் பாய் நெசவுக்குப் புகழ்பெற்ற பத்தமடை என்ற ஊர் உள்ளது. இவ்வூரின் அருகில் பொருநை ஆற்றின் தென்கரையில் உள்ள கிராமம் கரிசூழ்ந்த மங்கலம். இவ்வூரில் வாழ்ந்த வண்ணார் சமூக இளைஞனொருவன் அவ்வூரைச் சேர்ந்த பிராமணப் பெண்ணொருத்தியைக் காதலித்துள்ளான்.

இக்காதலையறிந்த பெண்ணின் தந்தை அவ்வண்ணார இளைஞனைக் கொலை செய்யத் தன் அடி ஆட்களை ஏவினான். அவர்களும் அவனது முழங்காலை வெட்டிவிட்டுச் சென்றனர். வெட்டுண்ட அவ்விளைஞன் இறந்து போனான். பின் கரிசூழ்ந்தமங்கலம் ஆற்றங்கரையோரம் பீடம் எழுப்பி அவனைத் தெய்வமாக்கினர். இம்மாவட்டத்தில் கொலையுண்டு தெய்வமான ஆண்களை மாடன், பட்டன், பட்டவராயன், பட்டபிரான் என்றழைக்கும் மரபுண்டு. இம்மரபின்படி இத்தெய்வம் வண்ணார மாடன் என்று பெயர்பெற்றது.

கொலையுண்ட வண்ணார் இளைஞனது ஆவி குறித்த அச்சம் பிராமணர்களிடம்; உருவானது. அதே நேரத்தில் உயிர்ப் பலியேற்கும் அத்தெய்வத்தின் கோவிலுக்குச் சென்று வழிபட அவர்களது சாதிய மேலாண்மையும், அவர்கள் பின்பற்றி வந்த வைதீக சமய நெறியும் தடுத்தது. இச்சிக்கலை அவர்கள் வேறு வழியில் தீர்த்தனர்.

நாட்டார் கோவில் திருவிழாவின் முக்கிய கூறு சாமியாட்டமாகும். இந் நிகழ்வில் குறிப்பிட்ட தெய்வத்தின் ஆவி சாமியாடியின் மீது இறங்கும் என்பது வழிபடுவோரின் நம்பிக்கை. மேலும் சாமியாட்ட நிகழ்வென்பது முன்னர் நடந்ததாக அவர்கள் நம்பும் நிகழ்வை மீண்டும் நடத்திக் காட்டும் நிகழ்வாக (enactment) அமைபும் தன்மையது.

இதன் அடிப்படையில் வண்ணார மாடன் கோவில் கொடையின் (திருவிழாவின்) போது சாமியாட்டம் இரவில் நிகழும். சாமியாடியாக இருப்பவர் வண்ணார்

**கொலையுண்ட வண்ணார் இளைஞனது ஆவி குறித்த அச்சம் பிராமணர்களிடம்; உருவானது. அதே நேரத்தில் உயிர்ப் பலியேற்கும் அத்தெய்வத்தின் கோவிலுக்குச் சென்று வழிபட அவர்களது சாதிய மேலாண்மையும், அவர்கள் பின்பற்றி வந்த வைதீக சமய நெறியும் தடுத்தது. இச்சிக்கலை அவர்கள் வேறு வழியில் தீர்த்தனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தைச் சேர்ந்தவராக இருப்பர். சாமியாட்டம் முடிந்தபின் சாமியாடியின் முழங்காலை மடக்கி தொடையுடன் சேர்த்து சங்கிலியால் கட்டிப் பூட்டிவிடுவர். இதனால் அவன் ஒரு காலுடனேயே நடக்கமுடியும். இச்செயலானது வண்ணார் இளைஞன் முழங்கால் வெட்டப்பட்டு ஒரு காலுடன் நடந்த நிகழ்வை நினைவுபடுத்துவதாகும்.

பின்னர் நொண்டியடிப்பது போல் ஒரு காலின் துணையுடன் பிராமணர்கள் வாழும் அக்கிரகாரப் பகுதிக்குள் சாமியாடி நுழைவார். அவர் வரவை எதிர்பார்த்து பிராமணக் குடும்பம் ஒவ்வொன்றும் முறுக்கு, சீடை, தட்டை, இலட்டு, அதிரசம், ரவாலாடு, வடை போன்ற தின்பண்டங்களில் ஒன்றிரண்டை வீட்டில் தயாரிப்பர். சுளவு (முறம்) ஒன்றில் திண்பண்டத்தை வைத்து அவரவர் வீட்டிற்குமுன் தெருவில் அதை வைத்துவிடுவர். தோசை, இட்லி வைப்பதும் உண்டு.

சங்கிலி பூட்டப்பட்டு ஒற்றைக் காலுடன் வரும்; சாமியாடி, தம் தோளில் துணியால் ஆன பை போன்ற பொட்டலத்தைத் தொங்கவிட்டிருப்பார். இது அக்கால வண்ணார்களின் வழக்கம் சார்ந்தது.

அக்கிரகாரத் தெருவிற்குள் இரவு நேரத்தில் நுழையும் வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த சாமியாடி ஒவ்வொரு வீட்டின் முன்பும் முறத்தில் வைக்கப்பட்டிருக்கும் தின்பண்டங்களை எடுத்துத் தன் தோள்ப் பையில் போட்டவாறே அத்தெருவைக் கடந்து கோவிலை வந்தடைவார்.

இந்நடைமுறையில் நடப்பியல் சார்ந்த செய்தியொன்றுள்ளது. சாமியாடி என்பவன் அந்நிகழ்வின் போது மனித உருப்பெற்ற தெய்வமாவான். அவ்வகையில் வண்ணார மாடன் கோவில் கொடையின்போது சாமியாடி, எப்போதோ கொலையுண்ட வண்ணார் இளைஞனாகவே விளங்குகிறான். வீட்டிற்கு வரும் மருமகனை உபசரிக்க இத்தகைய தின்பண்டங்களைச் செய்து வழங்குவது பொதுவான தமிழ்நாட்டு மரபு. இங்கு பிராமணப் பெண்ணைக் காதலித்தமையால், வண்ணார் இளைஞன் மருமகன் முறையாகிறான். எனவே இத் தகைய தின்பண்டப் படையல் நிகழ்கிறது.

காலப் போக்கில் சங்கிலியில் பூட்டுப்போட்டு நடந்து செல்ல சாமியாடி முன்வரவில்லை. இதனால் துண்டு ஒன்றால் கட்டி சாமியாடியை அனுப்பினார்கள். அவர் இரவில் அக்கிரகாரப் பகுதியை அடைந்ததும் துண்டை அவிழ்த்துவிட்டு நடந்து சென்று தெருவைக் கடந்தவுடன் மீண்டும் துண்டால் கட்டிக்கொண்டு நடந்து வரத்தொடங்கினார்.

கரிசூழ்ந்தமங்கலம் கிராமத்தை விட்டு பிராமணக் குடும்பங்கள் வெளியேறி யமையாலும், வண்ணார மாடசாமிக் கோவில் சாமியாடிக்கு இவ்வாறு தின்பண்டம் படைப்பது தம் சாதிக்கு இழுக்கைத் தருவது என்று பிந்தைய தலைமுறை கருதியதாலும் இச்செயல் நின்றுவிட்டது. என்றாலும் சாதிமீறி காதலித்தமைக்காகக் கொலையுண்ட வண்ணார் சமூக இளைஞனை நினைவு படுத்திக்கொண்டு, வண்ணார மாடசாமி கோவில் கரிசூழ்ந்த மங்கலத்தில் இன்றும் நிலைபெற்றுள்ளது. அதன் பூசாரியாக வண்ணார் சமூகத்தைச் சேர்ந்தவரே உள்ளார்.

**வண்ணார மாடன்: 2**

திருநெல்வேலி மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள இட்டமொழி, சமூகரெங்கபுரம் என்ற ஊர்களுக்கு நடுவில் உள்ள கிராமம் கோட்டைக் கருங்குளம். இக்கிராமத்தில் வாழ்ந்த முதலியார் சாதிப் பெண்ணொருத்தியை அதே கிராமத்தைச் சேர்ந்த வண்ணார் சாதி இளைஞன் காதலித்துள்ளான்.

அப்பெண்ணின் தந்தை தம் பண்ணை யில் பணிபுரிந்த தேவர் சாதியைச் சேர்ந்த பண்ணையாளைத் தூண்டிவிட்டு அவ்விளைஞனைக் கொலை செய்துவிட்டார். பின்னர் அவ்விளைஞனின் ஆவி குறித்த அச்சம் காரணமாக அவனுக்குப் பீடம் அமைத்து அத்தேவர் குடும்பத்தினர் தம் குலதெய்வமாக வழிபடுகின்றனர் (தோழர். ஆர். குமார்).

**ஈனமுத்து**

தூத்துக்குடி நகரில் இருந்து திருநெல்வேலி செல்லும் நெடுஞ்சாலையில் தெய்வச்செயல்புரம் என்ற கிராமம் உள்ளது. இதற்கு வடக்கேயுள்ள சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலப் போக்கில் சங்கிலியில் பூட்டுப்போட்டு நடந்து செல்ல சாமியாடி முன்வரவில்லை. இதனால் துண்டு ஒன்றால் கட்டி சாமியாடியை அனுப்பினார்கள். அவர் இரவில் அக்கிரகாரப் பகுதியை அடைந்ததும் துண்டை அவிழ்த்துவிட்டு நடந்து சென்று தெருவைக் கடந்தவுடன் மீண்டும் துண்டால் கட்டிக்கொண்டு நடந்து வரத்தொடங்கினார்.**

கிராமம் சிங்கத்தா குறிச்சி. இவ்வூரில் புரத வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த ஈனமுத்து என்ற இளைஞர் தெய்வமாக்கப்பட்டுள்ளார்.

ஈனமுத்து என்ற இளைஞன் புரத வண்ணார் சாதியைச் சேர்ந்தவன். பிராமண குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தியை இவன் காதலித்தான். இதனையறிந்த பிராமண நிலக்கிழார்; ஆட்களை வைத்து அவனைக் கொலைசெய்ய ஏற்பாடு செய்தார். ஊர்ச் சோற்றினைத் துணியில் மூட்டையாகக் கட்டி முதுகில் சுமந்து வரும்போது நிலக்கிழாரின் ஏவலாட்கள் அவன் காலை வெட்டினர். வெட்டுண்ட அவன் நொண்டியவாறே வந்து உயிர் துறந்தயிடமே பீடம் அமைந்துள்ள இடமாகும். ஈனமுத்து இறந்த செய்தி கேட்டு அங்கு வந்த அவன் காதலியும் உயிர் துறந்தாள். எனவே அவளையும் வழிபடுகின்றனர். பெயரைச் சுட்டாது சாதியின் பெயரால் பாப்பாத்தி அம்மன் என்றே அழைக்கின்றனர். கொடையின் போது ஈனமுத்துவுக்குத்தான் உயிர்ப் பலியுண்டு. அம்மன் பிராமணச் சாதி யாதலால் உயிர்ப்பலி கொடாது, சர்க்கரைப் பொங்கல், தேங்காய் படைக் கிறார்கள். ஈனமுத்து, பாப்பாத்தி என்று குழந்தைகளுக்குப் பெயரிடும் பழக்கமும் உண்டு. இச்செய்திகளைக் கூறிய தகவலாளர் தமது பெண்ணொருத்திக்குப் பாப்பாத்தி என்று பெயரிட்டுள்ளார். (சிவசுப்பிரமணியன். ஆ, 2013, பூச்சியம்மன் வில்லுப்பாட்டு, பக்கம்: 26-28)

இதுபோன்று கொலையில் உதித்த மேலும் பல வண்ணார் சமூகத் தெய்வங்களைக் கண்டறிய முடியும். இத்தெய்வங்கள் மீதான பக்தியுணர்வை விலக்கிவிட்டு வாய்மொழியாக வழங்கும் அவற்றின் தோற்றப் புராணங்களைச் சேகரித்து ஆராய்ந்தால் இச்சமூகத்தின் வீரர்களைக் கண்டறிய முடியும்.

மேற்கூறிய மூன்று ஊர்களிலும் தெய்வமாக்கப்பட்டுள்ள வண்ணார் சமூக இளைஞர்கள் இறுக்கமான சாதி எல்லையைத் தாண்டி மேட்டுக்குடிப் பெண்களைக் காதலித்துள்ளனர். இது நிலவுடைமைச் சமூகத்தின் மரபை மீறிய செயலாகும். இம்மரபு மீறிய செயலே அவர்களது கொலைக்குக் காரணமாக அமைந்துவிட்டது.

மக்களாட்சி முறை வளர்ச்சியடைந்துள்ள இன்றையச் சூழலிலேயே சாதிமீறிக் காதலிப்போரையும், காதலித்து திருமணம் செய்துகொண்டோரையும் கொலைசெய்யும் கொடுமை நிகழ்கிறது. இக்கொலைகளுக்குக் கௌரவக் கொலை (Honour Killing) என்ற பெயரும் இடப்பட்டுள்ளது. நீதி மன்றங்களின் ஆவணங்களிலும்கூட இப்பெயர் இடம்பெற்றுவிட்டது. தமிழக அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் சாதி மீறியக் காதலை அடையாளப்படுத்த 'நாடகக் காதல்' என்ற கலைச் சொல்லையே உருவாக்கிவிட்டார்.

தற்போதைய நிலையே இப்படியென்றால் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் எப்படியிருந்திருக்கும் என்று கூறத் தேவையில்லை. எவ்வாறாயினும் சமூகத் தடையை மீறி, சாதிமீறிக் காதலித்ததன் விளைவாகத் தம் உயிரை இழந்த இவ்விளைஞர்களை வீரர்கள் (Heros) என்றழைப்பதில் தவறில்லை.

இவர்களைப் போன்றே நிலவுடைமைச் சமூகத்தில் எதிர்க்குரல் எழுப்பியும் மரபு மீறியும் கொலைக்காளாகித் தெய்வ மாக்கப்பட்ட வண்ணார் தொடர்பான பழமரபுக் கதைகளைச் (Legends) சேகரித்து வழிபாட்டு மரபுடன் இணைத்து ஆராய்ந்தால் வண்ணார் சமூகத்தின் வீரர்கள் சிலரை அடையாளம் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிக விடை பெறுகை

பசுமை உடுத்தியும்
பலவண்ணம் பூசியும்
வசந்தம் பரப்பிய
மரங்களிடம் விடைபெற்று
காற்றின் திசையறிந்து
பயணப்படுகின்றன
பழுத்து விழுந்த சருகுகள்

சலனம் வழியும்
மனங்களில்
மேலும் சுமையிறக்க
சபதமெடுத்து
மெல்ல மெல்லக்
குவிகிறது
இருளின் நிழல்

வசந்த காலத்தின்
விடைபெறுகை
வெறுமையால்
வனையப்பட்ட
கணங்கள் பற்றிய
நினைவுகளை
நிரப்பிச் செல்கின்றது

இது நிரந்தர விடைபெறுகை
இல்லையென்று தெரிந்திருந்தும்
சூழ்ந்துகொள்ளும்
சங்கடங்கள்
சலிப்பையே தருகின்றன.
கொடுங்குளிர்வரும் முன்னரே
உறைந்துபோகின்றன
இதயச் சுவர்கள்

வெண்பனிப் பாதையில்
கால்கள் புதைய
பயணத்தின் தூரம்
நீள்கிறது
நரம்பறுக்கும் கொடுங்குளிரால்
மவுனத்தின் பிடிக்குள்
ஆன்மா சரணடைகிறது

நடுநிசிச் சூரியதேசத்தின்
ஒளி வெளிகளை
உறிஞ்சிக் குடித்து
ஏப்பம்விட்டவாறு வருகிறது
இருளெனும் காலப்பூதம்
எஞ்சியுள்ள ஒளித் துளிகளை
பறித்துப் பதுக்கவும்
மனச்சுமையில்
தவித்துக்கொண்டிருப்பவரை
மண்டியிட வைக்கவுமாய்..

சிறுகச் சிறுகச்
சேர்த்து வைத்த
செல்வமெல்லாம்
நொடியொன்றில்
பறிபோன நிலைக்கு நிகராய்
பதறுகிறது அடிமனம்
வசந்தம் வற்றிப்போனதாய்..


உதிராத இலைகளும்
விலகாத ஒளியும்
உறையாத நதியும்
வற்றாத வசந்தமும்
நிரந்தரம் ஆகாதோ?
ஏக்கத்தை மட்டும்
விதைத்தவாறு
விரைந்து பறக்கின்றன சருகுகள்

சலனங்கள்...
ஆழ்மனதை ஆட்கொண்டு
ஆட்டிப்படைக்கின்றபோதும்
நேற்றோடு எதுவும்
நின்றுபோய்விடுவதில்லை
என்று தேற்றிக்கொள்வதைத்தவிர
வேறுவழியில்லை

அடுத்த வசந்தத்தின்
காலடி ஓசைக்காய்
கனவுகளை அடைகாத்துக்
காத்திருப்பதைத்தவிரவும்
வேறுவழியில்லைதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோபல் பரிசு

## மாறிப்போனதா சாதனை நிகழ்த்தும் வயது?

மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், உலக அமைதி, இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் உலக அளவில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

அந்த வகையில்,2014இல் நோபல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு, இங்கிலாந்து-அமெரிக்க விஞ்ஞானிகளான ஜான் ஓ கீப் (வயது 75), நார்வே தம்பதியர் எட்வர்ட் மோசர், (வயது 52) மே பிரிட் மோசர் (வயது 51) ஆகியோருக்கு கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு, அமெரிக்க விஞ்ஞானியான சுஜி நகமுராவுக்கும் (வயது 60), ஜப்பான் விஞ்ஞானிகளான இசாமு அகசாகி (வயது 85), ஹிரோஷி அமனோவுக்கும் (வயது 54) கூட்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.


வேதியியல் துறைக்கான நோபல் பரிசு, அமெரிக்காவைச் சேர்ந்த எரிக் பெட்சிக் (வயது 54), வில்லியம் எம். மோர்னெர் (வயது 61), ஜெர்மனியைச் சேர்ந்த ஸ்டெஃபான் ஹெல் (வயது 51) ஆகிய மூவருக்கும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு, பிரெஞ்சு நாட்டின் பொருளாதார நிபுணரான ஜீன் டிரோல் (வயது 61) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலக அமைதிக்கான நோபல் பரிசு, இந்தியாவைச் சேர்ந்த சமூக ஆர்வலர் கைலாஷ் சத்யார்தி (வயது 60), பாகிஸ்தான் சிறுமி மலாலா (வயது 17) இருவருக்கும் கூட்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு, பிரான்ஸ் நாட்டு எழுத்தாளர் பேட்ரிக் மோடியானோவுக்கு (வயது 69) அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இந்தியருக்கும் பாகிஸ்தானியருக்கும் அமைதிக்கான நோபல் பரிசு.**

குழந்தைத் தொழிலாளர் முறையை எதிர்த்துப் போராடிவரும் இந்தியாவின் சமூக ஆர்வலர் திரு. கைலாஷ் சத்யார்த்தியும் பெண் குழந்தைகளின் கல்வி உரிமைக்காகக் குரல் கொடுத்துவரும் பாகிஸ்தானியச் சிறுமி மலாலாவும் இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றிருக்கிறார்கள்.

"குழந்தைகள் மீதான அடக்குமுறைக்கு எதிராகவும் பெண் குழந்தைகளின் கல்வி உரிமைக்காகவும் போராடியதற்காக இவர்கள் இந்தப் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

உலகின் ஏழை நாடுகளில் தற்போதைய மக்கள் தொகையில் 60 சதவீதம் பேர் 25 வயதுக்குக் கீழ் உள்ளனர். அமைதியான உலக வளர்ச்சிக்கு குழந்தைகள், இளைஞர்களின் உரிமைகள் மதிக்கப்படுவது மிகவும் அவசியமாகும்.

நிதி ஆதாரத்துக்காக குழந்தைகள் சுரண்டப்படுவதற்கு எதிராக, மகாத்மா காந்தியடிகளின் பாரம்பரியத்தைப் பின்பற்றி கைலாஷ் சத்யார்த்தி அமைதியான முறையில் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளார்.

குழந்தைகளும்கூட தங்களின் நிலையை மேம்படுத்திக்கொள்ள உரிய பங்களிப்பைச் செய்ய முடியும் என்பதற்கு உதாரணமாக மலாலா விளங்குகிறார். ஒரு அபாயகரமான சூழலில் தன்னை முன்னிறுத்திக்கொண்டுள்ளதன் மூலம் பெண் குழந்தைகளின் கல்வி உரிமைக்கான செய்தித்தொடர்பாளராக மாறியிருக்கிறார்.

ஓர் இந்தியரும் ஒரு பாகிஸ்தானியரும், ஒரு இந்துவும் ஒரு முஸ்லிமும் கல்விக்காகவும் தீவிரவாதத்துக்கு எதிராகவும் நடத்தப்படும் பொதுவான போராட்டத்தில் இணைவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என நோபல் பரிசுத் தேர்வுக்குழு பாராட்டியுள்ளது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில், பேராசிரியராகப் பணியாற்றியவர் அய்சக் பாரோ (Isaac Barrow). அவர், மற்றவர்கள் செய்யத் துணியாத ஒரு காரியம் செய்தார். அவரது பணிக் காலத்தில், அவராகவே முன்வந்து அவரது பதவியை, அவரது மாணவர் ஒருவருக்காக விட்டுக்கொடுத்தார். பதவி விலகுவதால் ஏற்படும் பணியிடத்தில், குறிப்பிட்ட அந்த மாணவரை மட்டுமே பணியமர்த்த வேண்டும் என்ற முன் நிபந்தனையோடுதான் அவர் பதவி விலகினார். அந்தப் பேராசிரியரால், திறமை மிகுந்த இளைஞர் என அடையாளம் காட்டப்பட்டவர்தான், பிற்காலத்தில் இயற்பியல் மற்றும் கணிதத்தில் அறிய பல கண்டுபிடிப்புகளுக்குக் காரணமான சர் அய்சக் நியூட்டன்.

மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு, 'மீண்டும் நியூட்டனின் தரத்தில் ஒரு அறிவியல் வல்லுநர்' என மற்றவர்களால் பாராட்டப்பட்டவர், ஆல்பர்ட் அயின்ஸ்டீன். அவர் தனது 26ஆவது வயதிலேயே, 1905ஆம் ஆண்டு 'சிறப்பு சார்பு கொள்கை'யை (Special Theory of Relativity) வெளியிட்டார். அந்த கண்டுபிடிப்பு எந்த அளவிற்குத் தனிச்சிறப்பு கொண்டதென்றால், அதன் நூற்றாண்டான 2005ஆம் ஆண்டு முழுவதும், 'அகில உலக இயற்பியல்' (International year of Physics) ஆண்டு என கொண்டாடப்பட்டது.

1917ஆம் ஆண்டு மிகவும் சிக்கலான 'பொது சார்பு கொள்கை'யை (General Theory of Relativity) வெளியிட்டார் அயின்ஸ்டீன். ஆரம்பக் காலங்களில், 'சார்பு கொள்கையை' சரிவர புரியாத நிலையே நிலவி வந்தது. எனவேதான், அந்த தலைசிறந்த அறிவியல் கண்டுபிடிப்புக்காக, அயின்ஸ்டீனுக்கு நோபல் பரிசு தரப் படவில்லை. அதனை ஈடுசெய்யும் விதத்தில், 'ஒளிமின் வெளியீட்டிற்கான' அவரது 'குவாண்டம் கொள்கை'யின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரெஞ்ச் எழுத்தாளர் பேட்ரிக் மோடியானோவுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு



பேட்ரிக் மோடியானோ என்ற பிரெஞ்சு எழுத்தாளர் 1945ஆம் ஆண்டு பாரீஸில் பிறந்தவர். இவரது தந்தை இத்தாலியர். யூத மதத்தைச் சேர்ந்தவர்; தாயார் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த நடிகை.

யூதர்களின் துயரங்கள், நாஜிக்களின் கொடுமை, சமூக அடையாளம் இழப்பு ஆகியவையே இவரது படைப்பின் கருப்பொருளாகும்.

இரண்டாம் உலகப் போரின்போது நாஜிக்களின் ஆதிக்கத்தில் பிரான்ஸ் அடைந்த துயரங்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர். அன்னியர்களின் ஆக்கிரமிப்பில் சாதாரண மக்களின் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை பேட்ரிக் மோடியானோவின் எழுத்துகள் படம்பிடித்துக் காட்டுவதாகவும் அதன்மூலம் யாரும் புரிந்துகொள்ளமுடியாத உலகுக்கு மனித உணர்வுகளை இட்டுச் செல்லும் அவரது கலைநயத்துக்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாகவும் பரிசுக்குரிய தேர்வுக்குழு குறித்திருப்பது குறிக்கத்தக்கது.

1968இல் வெளியான இவரது 'லாபேலஸ்டீ லெடோல்லே' என்ற பிரெஞ்சு நாவல், யூதப்படுகொலைகளைக் குறித்த முக்கியமான பதிவுகளில் ஒன்றாகப் போற்றப்படுகிறது.

அடிப்படையிலான விளக்கத்தைக் காரணம் காட்டி, பின்னாளில் அவரது 42ஆவது வயதில் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

நியூட்டன், அயின்ஸ்டீன் போன்று, இளம் வயதிலேயே சிறந்த அறிவியல் கண்டுபிடிப்புகளுக்குக் காரணமான சாதனையாளர்கள் முன்பு நிறையவே இருந்தனர். ஆனால், காலம் செல்லச் செல்ல, அரிய பெரிய கண்டுபிடிப்புகளுக்குக் காரணமான சாதனையாளர், 50 அல்லது 60 வயதைக் கடந்தவர்களாகவே இருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

எந்தத் துறையானாலும், சிறப்பான கண்டுபிடிப்புகள், இளம் வயது சாதனையாளர்களிடம் இருந்து வெளிப்படும் என்பதுதான், அனைத்துக் காலங்களிலும் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படும் பொதுக் கருத்தாக இருந்து வருகிறது. இதற்கு மாறாகக் கால ஓட்டத்தில், பெரும்பாலான அரிய கண்டுபிடிப்புகள், வயது முதிர்ந்த சாதனையாளர்களிடமிருந்தே வெளிப்படுவது, வியப்பை ஏற்படுத்துகிறது.


இப்படிப்பட்ட சாதனையாளர்களின் வயது விலகலுக்கான காரணத்தை அறிய, பென்ஜமின் ஜோன்ஸ் (Benjamin Jones) ஒரு ஆய்வை மேற்கொண்டார். இவர், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின், 'தேசிய பொருளாதார ஆய்வுக் கழகத்தில்' பணியாற்றும் ஆய்வாளர் (Researcher). கடந்த 100 ஆண்டுகளில், இயற்பியல், வேதியல், மருத்துவம் மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் நோபல் பரிசு பெற்றவர்கள், பரிசு பெற்றபோது அவர்களது வயது



பொருளாதாரத் துறைக்கான நோபல் பரிசு பெற்றவர்







மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு பெற்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியற்றைத் தரவாகப் பயன்படுத்தி, அவர் தனது ஆய்வை மேற்கொண்டார்.

ஒப்பு நோக்குவதற்காக, அந்தக் காலக் கட்டத்தில் சாதனைகள் நிகழ்த்திய தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் தடகள வீரர்களின் வயதையும், தரவாகத் திரட்டி, அவற்றைத் தொகுத்து, தனது ஆய்விற்குப் பயன்படுத்தினார் ஜோன்ஸ்.

ஜோன்ஸ் தனது ஆய்வு முடிவுகளை மூன்று விதமாக வகைப்படுத்தினார்.

முதலாவதாக, சாதனையாளர்களின் சராசரி வயது 30 என்றபோது கண்டு பிடிப்புகள் 42 விழுக்காடாகவும், 40 என்றபோது கண்டுபிடிப்புகள் 40 விழுக்காடாகவும், 50க்கு மேல் என்றபோது, கண்டுபிடிப்புகள் 14 விழுக்காடாகவும் இருப்பதாக ஆய்வு சொல்கிறது.

இரண்டாவதாக, 26 வயதிற்கு குறைவான சாதனையாளர்களிடமிருந்து, 7 விழுக்காடு கண்டுபிடிப்புகளே உள்ளன; 19 வயதிற்கு உட்பட்டவர்களிடம் இருந்து அறிய கண்டுபிடிப்புகள் எதுவும் இல்லை என்றே சொல்லலாம்.

மூன்றாவதாக நோபல் பரிசு பெற்றவர்கள் மற்றும் அதே காலக்கட்டத்தில் சாதனை நிகழ்த்திய தொழில்நுட்ப கலைஞர்கள் ஆகிய இரு சாராரையும் ஒப்பு நோக்கும் போது, சாதனைகளும் அவற்றை நிகழ்த்திய சாதனையாளர்களின் வயது பங்கீடும், ஒரே மாதிரியாகவே இருப்பதாக கண்டறியப்பட்டது.

ஆய்வு வெளிப்படுத்தும் முக்கியச் செய்தி என்னவென்றால், காலம் செல்லச் செல்ல, 'வயதுப் பங்கீடு' மாறுகிறது என்பதாகும். ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட ஒரு நூற்றாண்டு கால இடைவெளியில், அரிய கண்டுபிடிப்புகளுக்குக் காரணமான சாதனையாளர்களின் வயது, நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்ததை விடவும், 5 அல்லது 6 என்ற அளவில், நூற்றாண்டின் முடிவில் கூடியுள்ளது என்பதாகும்.

சாதனையாளர்களின் இந்த மேல்நோக்கிய வயது விலகலுக்கான காரணங்களை ஜோன்ஸ் இப்படி பட்டியலிடுகிறார்.


முந்தைய காலங்களைப் போல் அல்லாமல், சாதனையாளர்கள், தங்களது இளமைப் பருவத்தை, மேலும் மேலும் கற்பதிலும், பயிற்சி எடுப்பதிலும் செலவிடுகின்றனர் என்பதைக் காரணமாகக் கூறலாம்.

இளைய மற்றும் முதிய அறிவியலாளர்கள் ஒரு குழுமமாக வாழ்தலும்கூட, ஒரு காரணமாக இருக்கக்கூடும்.


அடுத்து ஜோன்ஸ் குறிப்பிடும் காரணம், கூர்ந்து நோக்க வேண்டிய ஒன்றாகும். அதாவது, 'ஆயுள்-சுழற்சியில்' (Life-cycle) 'அனுபவம்' கூடுவதாகவும், 'திறமை' குறைவதாகவும் கொண்டால், திறமையை விடவும் அனுபவமே, சாதனை நிகழ்த்துவதற்கான முக்கிய கூறாக மாறியுள்ளதை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

மறுதலையாகவும் ஒன்றைச் சொல்லலாம். அதிகரித்து வரும் 'உடல் நலம்' (Health care) காரணமாக முதிய சாதனையாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால், இளையவர் ஒருவரை விடவும் முதிய சாதனையாளரிடமிருந்தே கண்டுபிடிப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகக் கருதலாம். இது, 20ஆம் நூற்றாண்டில், 8 வயது வரையிலான விலகலுக்கான காரணமாகக் கருதலாம்.

இத்தனை காரணங்களைப் பட்டிய லிட்டாலும்கூட, முடிவாக ஒன்றைக் கூற, ஜோன்ஸ் தவறவும் இல்லை; தயங்கவும்



இயற்பியல் துறைக்கான
நோபல் பரிசு பெற்றவர்கள்



வேதியியல் துறைக்கான
நோபல் பரிசு பெற்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26 வயதிற்கு குறைவான சாதனையாளர்களிடமிருந்து, 7 விழுக்காடு கண்டுபிடிப்புகளே உள்ளன; 19 வயதிற்கு உட்பட்டவர்களிடம் இருந்து அறிய கண்டுபிடிப்புகள் எதுவும் இல்லை என்றே சொல்லலாம்.**

இல்லை. இளைய தலைமுறையினரிடம் ஏற்பட்டுள்ள 'ஆற்றல் சரிவே' இதற்குப் பெரிதும் காரணம் என்கிறார். 20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள 30 விழுக்காடு 'ஆற்றல் சரிவு' (திறமை குறைவு என்றும் சொல்லலாம்) இதனை ஒப்புக்கொள்ளும் விதத்தில் உள்ளது.

அறிவியலாளர்களின் 'சாதனை' மற்றும் 'வயது' பற்றிய ஆய்வில், ஒப்பு நோக்கு வதற்காகத் திரட்டப்பட்ட 'தடகள வீரர்கள்' பற்றிய தரவுகளை ஆய்வு செய்ததில், ஆய்வு முடிவு, வேறு மாதிரியாக இருந்ததை அறிய முடிந்தது. கால ஓட்டத்தில், சாதனைகளை நிகழ்த்தும் தடகள வீரர்களின் வயது மாறாமலேயே உள்ளதாக அறியப்பட்டது.

தடகள வீரர்கள், தங்களது 'மனித மூலதனத்தை' (human capital) உயர்த்த வேண்டிய அவசியம் இல்லாதிருக்கின்றனர். மாத்திரமல்ல, அவர்களது சாதனை களத்திற்கான விதிகளும், தேவைகளும் கால ஓட்டத்தில் மாறாமலேயே உள்ளன. எனவேதான், அனைத்துக் காலங்களிலும், தடகள வீரர்கள், தங்கள் இளம் வயதிலேயே சாதனைகள் நிகழ்த்துகின்ற நிலை, காலத்துடன் மாறாமலேயே இருந்து வருகிறது.

இதற்கு நேர்மாறாக, அறிவியல் சாதனையாளர்கள், தங்களது 'அறிவு முதலீட்டை' (intellectual capital) தொடர்ந்து அதிகரிப்பதும், அதன் காரணமாக தங்களது 'அறிவுதிறனை' (knowledge) கூட்டுவதுமாக இருக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால், கல்வி அறிவு பெறுவதற்கு ஆண்டுகள் பல ஆகின்றன என்பது வெளிப்படையாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும். (படைப் பாளிகளுக்கும் இது பொருந்தும் எனக் கருதலாம்தானே).

நோபல் பரிசைப் பற்றி ஒன்றிரண்டு தகவல்களைச் சொல்லி, இந்தக் கட்டுரையை முடிப்பது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன். ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஆல்ஃபிரட் நோபல் வேதியியல் நிபுணர்; பொறியியல் வல்லுநர்; மற்றும் கண்டுபிடிப்பாளர். அவரது வாழ்நாளில், 355 கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர். அதன் மூலம் பெரும் பொருள் ஈட்டியவர்.

அவர் மரணம் அடைவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவரது தம்பி இறந்துவிட்டார். அச்சமயம், ஆல்ஃபிரட் நோபல்தான் இறந்ததாகக் கருதிய ஒரு பிரெஞ்ச் பத்திரிகை, 'மரண வியாபாரி செத்தான்' (Death merchant died) என்பதாக செய்தி வெளியிட்டது.

ஆல்ஃபிரட் நோபலின் கண்டுபிடிப்புகளில் ஒன்றான 'டைனமைட்' இராணுவத்தில் பயன்படுத்தப்பட்டு ஏராளமானோர் சாவிற்குக் காரணமானது. நோபலின் பெரும் பொருளீட்டலில், 'டைனமைட்'டின் பங்கு கனிசமானது. அதுதான், நோபல் மீது வெறுப்பு ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்தது.

தான் உயிரோடு இருக்கும்போதே தனது மரணச் செய்தியைப் படித்த ஆல்ஃபிரட் நோபல், தனது மரணத்திற்குப் பிறகு தன்மீது எந்த அளவிற்கு மக்கள் வெறுப்படைவார்கள் என்பதை உணர்ந்து கொண்டார். அதனால் மனம் மாறி, ஒரு 'மரண சாசனத்தின்' (Will) மூலம், தனது பெரும் செல்வத்தைக்கொண்டு உருவாக்கியதுதான் நோபல் பரிசு.

ஆரம்பத்தில் இயற்பியல், வேதியியல், மருத்துவம், அமைதி (Peace) ஆகிய துறைகளுக்கே நோபல் பரிசு வழங்கப்பட்டு வந்தது. 1969ஆம் ஆண்டு முதல்தான் பொருளாதாரத்திற்கு நோபல் பரிசு வழங்கப் படுகிறது. இன்றுவரை 'கணிதத்திற்கு' நோபல் பரிசு இல்லை. ஆல்ஃபிரட் நோபலின் மனைவியுடன் ஒரு கணிதப் பேராசிரியர் 'கள்ள உறவு' வைத்திருந்ததே அதற்கான காரணமாக கூறப்பட்டு வருகிறது. உண்மையான காரணத்தை ஆல்ஃபிரட் நோபல் ஒருவரே அறிவார்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபி, ஆலப்புழை. மலையாளக்கதை தமிழில்: சிதம்பரம் ரவிச்சந்திரன்



# ராமண்ணாவுடைய மரணம் ஒரு தற்கொலையா?

'ராமண்ணாவை நான் முதல் தடவையாக பார்த்தது எப்போது...?' பஸ்சில் இருந்தபோது பின்னோக்கி ஓடிக்கொண்டிருந்த காட்சிகளைப்போல மனதும் கடந்த காலத்தை நோக்கி ஓடியது. இங்கே டிரான்ஸபர் ஆகி வந்த அன்றோ மறுநாளோ என்று ஞாபகம். பகல் வேளையில் ஆபீசில் வேலை மும்முரத்திற்கு அப்புறம் கொஞ்சம் நாற்காலியில் சாய்ந்தபோது உடம்பில் தோன்றிய ஒரு சின்ன சோம்பேறித்தனம் மனதையும் சோர்வாக்கியபோது என்று நினைக்கிறேன்... முன்னால் ஆவி பறக்கும் டீயோடு ராமண்ணா... என்னுடன் வேலை செய்த பாலசந்திரன்தான் ராமண்ணாவை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தது.

விசு... இதுதான் ராமண்ணா. எங்களோட சாப்பாட்டுக்கு எஜமான்.

அதைக் கேட்டபோது அவன் பலமாக சிரித்தான். பாலன் இடையிடையே இப்படித்தான் பலமாக சிரிப்பது வழக்கம். அவன் அப்படிச் சிரிக்கும்போது முன்வரிசையில் வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் இரண்டு பற்களுக்கு இடையே இருக்கும் இடைவெளியை நன்றாக பார்க்கமுடியும். அப்போது அவனுடைய கண்கள் இரண்டும் ஒரு கோடு வளைவதுபோல வளைந்துகொள்ளும்.

சாருக்கு பஜ்ஜியா... பருப்பு வடையா...?

அடக்கமாக ராமண்ணா கேட்டான்.

ரெண்டிலும் ஒண்ணு ஒண்ணு கொடு... ராமண்ணாவுடைய கை மணத்தை தெரிஞ்சுக்கறேன்..

பாலன் இதை சொல்லிவிட்டு கண்களை மூடிக்கொண்டு மறுபடியும் சிரித்தான்.

சம்பளத் தேதி வந்தபோது சாயங்காலம் கையில் மணம் வீசும் டீ கோப்பையோடு தயக்கத்தோடு ராமண்ணா என் முன்னால் வந்து நின்றான். அவன் நின்றிருந்தது ஏதோ தருமம் வாங்க வந்ததுபோல இருந்தது. ஒவ்வொருத்தரும் கணக்கு சொல்லி காசை எண்ணிக் கொடுக்கும்போது, வாய் நிறைய புன்னகையோடு அதை வாங்கி கையில் வைத்திருக்கும் துணிப்பையில் இருக்கும் பழைய பர்சுக்குள் வைப்பான். ராமண்ணாவுடைய இரக்கம் நிறைந்த சுபாவம்தான் என்னை அவனோடு நெருக்கமாக பழகவைத்தது பல சமயங்களில் மாலை நேரங்களில் டீக்கடையில் பாலை கொடுத்துவிட்டு திரும்ப வரும்போது அவன் நான் தங்கியிருந்த இடத்துக்கு வருவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'எனக்காக காத்துக்கொண்டிருப்பதற்கு ராமண்ணா எனக்கு யாருமாக இல்லை இல்லையா...? சொந்தமும் இல்லை. பந்தமும் இல்லை. என்றாலும் அவன் எனக்கு யாராகவோ இருந்தது போல ஒரு தோணல் என் இதயத்தில் இருந்து கடல் அலையைப்போல பொங்கி பொங்கி எழுந்து வந்துகொண்டே இருந்தது...**

அப்படி அவனுடைய குடும்பத்தை பற்றியும் கொஞ்சம் புரிந்துகொள்ள என்னால் முடிந்தது.

மூன்று பெண் குழந்தைகள் அவனுக்கு. ஒரு பெண்ணுடைய கல்யாணத்தை முடித்துவிட்டான். அதற்காக இருந்த வீட்டின் ஒரு பாகத்தை அவன் விற்க வேண்டி வந்தது. அப்புறம் அவனுக்கு என்று இருந்தது ஒரே ஒரு பசுமாடுதான். அதுதான் அவனுடைய வருமானத்துக்கு ஒரே மூலதனமாக இருந்தது.

***

பெண் குழந்தைகள் அதிகம் இருப்பவர்களோட பழகும்போது பார்த்து ஜாக்கிரதையா பழகணும்.

ஏதோ ஒரு தீர்க்கதரிசனத்தை சொல்லி விட்டதுபோல இதை என்னிடம் சொல்லிவிட்டு பாலன் சத்தமாகச் சிரித்தான். என் முகம் இதை கேட்டுவிட்டு எப்படி ஆகிறது என்பதை பார்க்காமல் இருப்பதற்குதானோ அவன் கண்களை மூடிக்கொண்டான். பல வருடங்கள் கழித்து இரண்டு நாள்களுக்கு முன்புதான் நான் ராமண்ணாவை கடைசியாகப் பார்த்தது. சொந்த ஊருக்கு டிரான்ஸ்பர் ஆகி போனபிறகு இப்போதுதான் நான் இங்கே முதன்முதலாக வருகிறேன். ஹெட் ஆபீசுக்கு வரவேண்டிய ஒரு வேலையும் எனக்கு இருந்தது. ஆபீசில் எல்லோருமே புதிய மனிதர்களா இருந்தார்கள். ஆபீசுக்கு முன்னால் இருந்த காலி இடத்தில் புதிதாக ஒரு பேக்கரி முளைத்திருந்ததை என்னால் பார்க்கமுடிந்தது. ராமண்ணா இப்போதும் இங்கே டீ கொண்டுவருகிறாரா என்று விசாரித்தபோது அங்கே இருந்த யாருக்கும் அப்படி ஒரு ஆளை தெரியவில்லை. பழைய ஞாபகத்தை வைத்துக்கொண்டு ராமண்ணாவுடைய வீட்டை நோக்கி நடந்தேன்.

நான் ராமண்ணாவை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு கொஞ்சநேரம் ஆனது என்றாலும், ராமண்ணா சட்டென்று என்னை அடையாளம் கண்டுபிடித்துவிட்டான்.

விசுவம் சார்... எவ்வளவு நாளாயிடுச்சு பார்த்து?

ராமண்ணா என்னை பற்றி விசாரித்துக் கொண்டிருந்தபோது ராமண்ணாவிடம் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை நான் ஆராய்ந்துகொண்டிருந்தேன். அந்த பழைய வீட்டுக்கு ஆகும் வயதை போல ராமண்ணாவுக்கும் ஆகிவிட்டது போல தோன்றியது எனக்கு. பாழாய்ப்போன வீடு. அவன் திடீரென்று ஒரு வயோதிகனாக மாறிவிட்டதைப் போல. கண்கள் இருண்ட குகைகளைப் போல தோன்றியது... முகம் சுருக்கங்களுடைய குடியிருப்பாக மாறியிருந்தது. குரல் எங்கோ தொலைதூரத்தில் இருந்து வருவதைப் போல இருந்தது. ஐந்தாறு வருடங்களுக்குள் ஒரு ஆள் இந்த அளவுக்கு மாறமுடியுமா?

சாருக்கு கல்யாணம் ஆயிடுச்சா?

ராமண்ணாவுடைய கேள்வி என்னை சிந்தனைகளின் வலையில் இருந்து விடுபட செய்தது.

ஆயிடுச்சு...

நான் பதில் சொன்னேன்.

எனக்கு தெரியாதே..?

ராமண்ணா தொண்டையில் துக்கத்தோடு சொன்னான்.

கல்யாணம் ஆகப்போகிற சமயத்தில் நான் ஒன்றும் இவனை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவில்லை என்பதை குற்ற உணர்வோடு அப்போது தான் நினைத்து பார்த்தேன்.

ராமண்ணாவுக்கு என்ன ஆச்சு...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சநேரம் பேசாமலிருந்துவிட்டு ராமண்ணா சொன்னான்.

இதுக்கப்புறம் ஆவதற்கு ஒன்றும் இல்லை. என்னோட வாழ்க்கை கிட்டத்தட்ட முடியப்போகுது... கேன்சர்... என்னோட உடம்பையும், என்கிட்ட இருந்த கொஞ் சநஞ்ச சம்பாத்தியத்தையும் அது சுரண்டி தின்னுடுச்சு. ஒரே சொத்தா இருந்த பசுவும் செத்துப்போச்சு.

மருந்து எதுவும் சாப்பிடறது இல்லையா...? ஒப்புக்காக நான் கேட்டேன்.

பதில் ஒரு பெருமூச்சாக வந்தது. நீண்ட நாள்களுக்கு பிறகு பார்த்ததால் ராமண்ணா நிறைய பேசினான். கடைசியில் பேச்சு தற்கொலை பற்றி வந்தது.

தற்கொலை செஞ்சுக்கறது கோழைத் தனமாக்கும்.

ஒரு உலக தத்துவத்தை சொல்வது போல நான் சொன்னேன்.

எப்பவும் அப்படி இல்ல சார்... வாழ்க்கையில நஷ்டப்பட்டவனுக்கு அது ஒரு ஆசீர்வாதம் ஆகும்... என்னோட ஆஸ்பத்திரி செலவுக்காக குழந்தைகளோட காதுலயும், கழுத்துலயும் இருந்தத எல்லாம் வித்தாச்சு. உடம்பு மோசமாகுதே தவிர சுமாராகூட ஆகமாட்டேங்குது. இப்ப ஆஸ்பத்திரி செலவுக்காக இருக்கற இந்த வீட்டயும், இத சுத்தி இருக்கற இடத்தயும் அடகு வச்சு விக்கறதுக்காக பாத்துகிட்டு இருக்காங்க அவளும், குழந்தைகளும்..

அப்படி செய்யவேண்டாம்னு சொல்லி சொல்லி அலுத்துப்போச்சு எனக்கு.. என்னோட காரியம் முடியப்போகுது. இருக்கற ஒரே ஒரு பிடிப்பு இந்த வீடுதான். இதுவும் போச்சுன்னா அவங்க எங்க போய் நிப்பாங்க...? யார் இருக்கறாங்க அவுங்கள பாத்துக்கறதுக்கு...?

ராமண்ணா விதும்பினான்.

இப்ப நான் இருக்கற இந்த நிலைமையில மரணத்த நான் நேசிக்கறேன் சார்.. .

நிகழப்போகும் துயரத்தை முன்பே அறிந்ததுபோல தவிக்கும் விழிகளுடன் ராமண்ணாவுடைய பெண் குழந்தைகள் வாசல் கதவின் மேல் சாய்ந்து நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுடைய காதுகளும் கழுத்தும் வெறுமையாக இருந்தது. ராமண்ணாவுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் நான் குழம்பினேன். ராமண்ணாவுக்கு முன்னால் நான் ரொம்பவும் சின்னதானதுபோல தோன்றியது எனக்கு.. ராமண்ணாவுடைய விறைத்துப்போன கைகளுக்குள் கொஞ்சம் ரூபாய் நோட்டுகளை வைத்தபிறகு நான் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பியபோது அவன் இவ்வளவு சீக்கிரம் தற்கொலை செய்துகொள்வான் என்று நான் எதிர்பார்க்கவில்லை..

***

இன்றைய பேப்பரில் அது வெறும் ஒரு தற்கொலை. ராமண்ணா எனக்கு யாருமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் யாரோ என்பது போல ஒரு தோணல். அவசர அவசரமாக வீட்டை விட்டு கிளம்பியபோது மனைவியிடம் ராமண்ணா பற்றிய விசயத்தை சொன்னேன். பழைய டீக்கடைகாரனுடைய சாவை பற்றி துக்கம் விசாரிக்க போகும் என்னை அவள் அதிசயத்தோடு பார்த்தாள். அவளுடைய பார்வையில் லேசாக பரிகாசமும் இருந்தது..

ஐந்து மணிநேரம் பயணம் செய்து அங்கே போய் சேரும்போது ராமண்ணா ஒரு பிடி சாம்பலாக மாறியிருந்தான். முன் பின் தெரியாதவர்களுடைய கேள்விக் குறிகளாக பாய்ந்த பார்வைகளை அலட்சியப்படுத்தியபடி, பதட்டத்துடன் நடக்கும்போது நினைத்துக்கொண்டேன். 'எனக்காக காத்துக்கொண்டிருப்பதற்கு ராமண்ணா எனக்கு யாருமாக இல்லை இல்லையா...? சொந்தமும் இல்லை. பந்தமும் இல்லை. என்றாலும் அவன் எனக்கு யாராகவோ இருந்தது போல ஒரு தோணல் என் இதயத்தில் இருந்து கடல் அலையைப்போல பொங்கி பொங்கி எழுந்து வந்துகொண்டே இருந்தது... எத்தனையோ நாள்கள் ஊர் பேர் தெரியாத இந்த இடத்தில் அவன் கொண்டுவந்த சோற்றையும், டீயையும் சாப்பிட்டு வளர்ந்ததுதான் இந்த உடம்பு.. என்கிற நினைப்பு தோன்றியபோது என் உடல் என்னையும் அறியாமல் சிலிர்த்தது...'.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயதேவன் கவிதை

# நாங்கள் கூடுகளைக் காக்கும் குருவிகள்

உங்கள் துப்பாக்கிகளை உறக்கத்தில்
ஆழத்திவிட்டு வாருங்கள்
நாம் எதிர்கொள்வோம் காஷ்மீர் ரோஜாவின்
மகரந்தம் வீசும் நட்பின் கரங்களுடன்.

ஒரே முலைப்பால் உண்டவர்கள் நாம்
சிந்துவின் உந்திக்கொடி இணைக்கிறது நம்
தலைமுறைகளின் வேர்களை
குங்குமக் காடுகளில் நாம் விளையாண்ட ஞாபகங்கள்
வரலாற்றின் பதிவுகளாய்.

நாங்கள் கூடுகளை காக்கும் குருவிகள்
நீங்கள் தானியம் கவரும்
காட்டுக் கோழிகள் அல்ல என்பதை காட்டலாம்
உலகக் கூரையில் ஏறிநின்று.

இன்னும் அவகாசம் இருக்கிறது நாம் பேச
சியால்காட் எல்லைப் பகுதியிலும்
லடாக்கின் மலை உச்சியிலும்
பனியின் வெப்பத்தில் வெந்துவிட்ட உம் ராணுவத்தினர்
காஷ்மீரில் வந்து குளிர்காயலாம்
நட்பின் அடுப்புகளை சூழ்ந்து கொண்டு.
ஓரடி எடுத்து வைப்போம் முன்னால்
சமாதானச் சூரியன்களுடன் -
ஈரடி பின்னேகும் நம் பகைமூட்டும்.

கேடயங்கள் வாள்கள் ஆவது
எதிரில் நிற்பவன் எதிரி என்றால் மட்டுமே
நாம் நண்பர்கள்.


பனிக்கட்டியாய் கரைந்துவிடும் நம் இடைவெளி
கொஞ்சம் பளிங்குபோல் நம் இதயங்கள் இருந்தால்.

பல வசந்தங்களும் கோடைகளும்
வீணாய்க் கழிகின்றன நம் துருப்புகளுக்கு
மனைவிகளின் இளமையும்
தளிர்களின் வளமையும்கூட.

ஆப்பிள்களுக்காக உயிரை விற்க வேண்டாம்
இதயங்களுக்காக ஒருவர் நேசிப்போம்
ஒருவர் தேசத்தை.

அதோ! உங்கள் இஸ்லாமாபாத்திலும்
எங்கள் இந்துஸ்தானத்திலும்
குழந்தைகள் அழுகின்றன தொட்டிலில்
"பெரியவர்களே! எங்கள் தூளிகளையாவது
கட்டுங்கள் ஒரே கயிற்றில்".

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்புக்குள்ளே அழுவுற சீமாட்டிகள்

கல்லூரி நிர்வாகம் அனுப்பிய அந்தக் கடிதத்தை நான் அப்படியே ஏற்றுக் கொள்வதாக இருந்தால், என் ஆசிரியப் பணிக்கு அது முற்றுப்புள்ளியாய் இருந்திருக்கும். என் சென்னை வேர், பாத்தியிலேயே அழுகிப் போயிருக்கும். அந்த நிலையில் "வீழ்வேன் என்று நினைத்தாயோ?" என்று பாடத்தான் தோன்றியது. ஊரில் மனைவி உட்பட இந்தச் செய்தியை யாருக்கும் தெரிவிக்க வில்லை. வேலை போகலாம்; எழுதவும் பேசவுமான என் பணிக்கு, இந்த நிலை ஒரு திறப்பாக இருக்கலாம். பணியில் இருந்த இரண்டாண்டு காலமும் வாய்க்கும் வயிற்றுக்குமான ஒரு போராட்ட காலமாக இருந்தது. இன்னும் வாயும் வயிறும் சுருங்கலாம். ஆனால் எழுத்தும் பேச்சுமாக நிமிர்வது என்ற உணர்வு என்னைச் சோரவிடாது செய்தது.

அந்தப் பணிநீக்கக் கடிதத்தால் என் துறையினர் அதிர்ச்சியுற்றிருந்தனர். அந்தக் கடிதத்தில் என் பணி நீக்கத்திற்கான எந்த ஒரு காரணமும் கூறப்படவில்லை. ஆனால், நான் நீடிப்பதற்கான எல்லா வகையான காரணங்களும் இருந்ததாகத் துறையினர் கருதினர். மூத்த பேராசிரியர்களின் உடன்பிறந்த தம்பியாக நான் கருதப் பட்டேன். துறையிலிருந்து பாலூர் கண்ணப்பர் ஓய்வு பெற்றிருந்தாலும் என் பணிநீக்கத்தால் சினமுற்றிருந்தார். மூத்த பேராசிரியர் கேப்டன் அமீர்அலி, இதற்குத் தீர்வுகாண முனைந்தார். நான் எழுதுவதுபோல நிர்வாகத்திற்கு ஒரு கடிதம் எழுதித் தந்தார்.

கல்லூரித் தாளாளருக்கு எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் பல கேள்விகள் முன் வைக்கப்பட்டன. "என்னை எதனால் பணிநீக்கம் செய்தீர்கள்? தமிழ்த் துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் எனக்கு வழங்கப்பட்ட பணிகள் அனைத்தையும் குறைவறச் செய்துள்ளேன். என் பணியில் குறை இருப்பதாகத் தங்களுக்கு எழுத வேண்டியவர், எனக்கு உடனடி மேலாளராக இருந்த பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார்தாம். ஆனால் என்னுடைய துறைச் செயல்பாடுகளால் அவர் எப்பொழுதும் நிறைவடைந்து என்னைப் பாராட்டினார். ஆண்டின் இறுதியில் துறைத் தலைவர் தரவேண்டிய இரகசியக் குறிப்பில் என்னைப் பற்றி குறை சொல்லி இருந்தால் நீங்கள் என்னைப் பணிநீக்கம் செய்யலாம். ஆனால் பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் அப்படி ஒரு கடிதத்தை எழுதி இருக்கவேமாட்டார். பிறகு எதன்பேரில் இந்தப் பணிநீக்க ஆணை!" என்று கேட்டு இருந்தது என்கடிதம்.

பேராசிரியர் கேப்டன் அமீர்அலியின் அருமையான ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இக்கடிதம் நிர்வாகத்தை ஒரு கலக்குக் கலக்கி இருக்கிறது.

கல்லூரி ஆட்சிக் குழுக் கூட்டத்தில் என் பணிநீக்கத்தைப் பேராசிரியரும், கல்லூரி முதல்வருமான கோபாலகிருஷ்ணா பரிந்துரை செய்திருக்கிறார். பரிந்துரை செய்வதற்குத் துறைத் தலைவரின் இரகசியக் குறிப்பைச் சான்று காட்டி இருக்க வேண்டும். ஆனால் அதை அந்தக் கர்வம் பிடித்த முதல்வர் புறக்கணித்தார். அவர் செய்த பணிநீக்கப் பரிந்துரை ஏற்கப்பட்ட பொழுது, கல்லூரி வளாகச் சுவருக்கு வெளியே நான் வீசப்பட்டுவிட்டதாகக் கருதினார்.

நான் அனுப்பிய கடிதத்தைப் படித்த கல்லூரித் தாளாளர் ஏ.ஏ. ரஷீது, பேராசிரியர் கண்ணப்ப முதலியாரைத் தொடர்புகொண்டு என்னைப் பற்றிக் கேட்டிருக்கிறார். கண்ணப்ப முதலியார் என்னைப் பாராட்டிச் சொன்னவுடன் என்னைப் பற்றி எழுதிய இரகசியக் குறிப்பைக் கேட்டிருக்கிறார். கண்ணப்ப முதலியார் அதன் நகலைத் தாளாளரிடம் காட்ட, தாளாளர் கோபம், கல்லூரி முதல்வர் கோபாலகிருஷ்ணா மீது பாய்ந்திருக்கிறது. கோபாலகிருஷ்ணாவின் அகம்பாவம் கொண்ட போக்கு தாளாளருக்குப் பிடிக்கவில்லை. கோபாலகிருஷ்ணாவை பொறிக்குள் மாட்ட நல்லதொரு வாய்ப்புக் கிடைப்பதாகக் கருதிய தாளாளர், கோபாலகிருஷ்ணாவுக்கு விளக்கம் கோரும் ஒரு கடிதத்தை அனுப்பினார்.

அதில் அவர் கேட்டிருந்த முக்கியக் கேள்வியே, "சாகுல் அமீது பற்றி, பாலூர் கண்ணப்ப முதலியார் தந்த இரகசியக் குறிப்பை ஏன் ஒளித்து வைத்தீர்கள் (Why did conceal the confidential report, given by Paloor Kannappa Mudaliar about Mr. Sahul Hameed?) என்பதுதான்."

கோபாலகிருஷ்ணா சொல்வதற்கு எந்தப் பதிலும் இல்லை.

எனினும் என்னை உடன் பணியில் அமர்த்தவில்லை. நிர்வாக எந்திரம் அப்படியெல்லாம் உடனே நீதி வழங்கி விடாது. பணியில் சேர்வதற்கு மீண்டும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இந்த நேர்முகத் தேர்வுக்கு எம்.ஏ.முடித்த வேட்பாளர்கள் எல்லாம் வந்திருந்தனர். நேர்முகத் தேர்வுக்குழுவில் முதல்வர் கோபாலகிருஷ்ணா, சமூகவியல் துறைத் தலைவர் யு. முகமது காசிம், கல்லூரித் தாளாளர் ஆகியோர் வந்திருந்தனர். என்னிடம் திருக்குறள் பற்றிக் கேட்கப் பட்டது, சொன்னேன். பேராசிரியர் காசிம் எளிமையாக ஒரு கேள்வி கேட்டார்;

"அளவையியல் என்றால் என்ன?"

**பேராசிரியர் கோபாலகிருஷ்ணா கர்வம் பிடித்தவர் என்றால் அதைவிட கர்வம் பிடித்தவர் தாளாளர் ரஷீது. ஒரு கர்வம் மற்றொரு கர்வத்தைப் பொறுத்துக்கொள்ளாது. கோபாலகிருஷ்ணாவை எச்சரித்து வைப்பதற்கு என் விவகாரத்தைத் தாளாளர் பயன்படுத்திக் கொண்டார். இந்த ஆதிக்க அமைப்பில் எந்த ஒரு நியாயமும் சிராய்ப்பில்லாமல் பிறப்பதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் அச்சொல்லை அறிந்திருந்தாலும் அது எதைச் சுட்டப் பயன்படுகிறது என்று ஒருகணம் தடுமாறினேன்.

"அளவையியல்... தர்க்கத்தைக் குறிக்கிறது" என்று சொன்னேன்.

அந்த நேர்முகத் தேர்வில் நான் தேர்வு செய்யப்பட்டேன். ஆசிரியரல்லாத வேறொரு பணி குறித்துச் சிந்தித்த என்னை ஆசிரியப் பணி பற்றிக்கொண்டது. இப்படி நான் மீள்தேர்வு செய்யப்பட்டதற்கு கேப்டன் அமீர்அலியின் வழிகாட்டுதல் உதவியாக இருந்தது. நிர்வாகத்துக்கு நான் எழுதிய கடிதத்தால், நிர்வாகம் எனக்கு ஒரு பெயரிட்டது: "சண்டைச் சேவல் (fighting cock)"

எனினும், காலப்போக்கில் கல்லூரி நிர்வாகத்தை எதிர்த்துப் போராட வேண்டிய சூழல் ஏற்பட்டது. அப்பொழுதும் தாளாளராக ரஷீதுதான் இருந்தார். நான் மீண்டும் பணியில் அமர்வதற்கு ரஷீது காரணமாக இருந்தாலும் என்னை நியாயம் கருதிப் பணியிலமர்த்தவில்லை என்பது எனக்குப் புரிந்தது. பேராசிரியர் கோபாலகிருஷ்ணா கர்வம் பிடித்தவர் என்றால் அதைவிட கர்வம் பிடித்தவர் தாளாளர் ரஷீது. ஒரு கர்வம் மற்றொரு கர்வத்தைப் பொறுத்துக்கொள்ளாது. கோபாலகிருஷ்ணாவை எச்சரித்து வைப்பதற்கு என் விவகாரத்தைத் தாளாளர் பயன்படுத்திக் கொண்டார். இந்த ஆதிக்க அமைப்பில் எந்த ஒரு நியாயமும் சிராய்ப்பில்லாமல் பிறப்பதில்லை.

அப்பொழுது எனக்கு மத ஈடுபாடு இருந்தது. அது பாகுபாடு காட்டும் ஈடுபாடு இல்லை. இறைநம்பிக்கை, இறை நம்பிக்கையை நிறைவேற்றும் தொழுகை என்ற வகையில் என் புரிதல் இருந்தது. வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையை ஒருபோதும் தவறவிட்டது இல்லை. பேரளவில் மக்கள் கூடிச் செய்யும் வழிபாட்டில் பங்கேற்பதும் இறைவனிடம் முறையீடு செய்வதும் எனக்கு ஒரு வகையான மன அமைதியைத் தந்தது.

எனக்குச் சிக்கல் ஏற்பட்ட தருணங்களில் நான் தனிமையில் முறையிடுவதற்கான வெளியாகத் தொழுகைதான் இருந்தது.

முஸ்லிம்கள் நோன்பிருக்கும் ரமலான் மாதத்தில் முப்பது நோன்பையும் நோற்காவிட்டாலும் இயன்ற போதெல்லாம் நோன்பிருந்தேன். அப்படி ஒரு நோன்பு நாளில், நபிகள் நாயகத்தைப் பற்றிக் கவியரங்கம் ஒன்று கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ்ப் பேராசிரியரும் கவிஞருமான அப்துல் கபூர் சாகிப் அந்தக் கவியரங்கத்துக்குத் தலைமை தாங்கினார். முஸ்லிம் லீக் தலைவர்களில் ஒருவராகிய அ.க.அ. அப்துல் சமத் சாகிபும் அந்தக் கவியரங்கத்துக்கு வருகை தந்ததாக நினைவு. அ.க.அ. அப்துல் சமத் தமிழின்மீது தணியாத ஆர்வம் கொண்டவர். ஆற்றொழுக்குப்போல் அவர் சொற்பொழிவு அமைந்திருக்கும். பின்னாளில், சாபானு வழக்குத் தொடர்பாக நான் ஒரு முரண்பட்ட நிலைப்பாட்டை எடுத்த போதிலும், அதைப் பெரிதுபடுத்தாமல் என்மீது அன்பு பாராட்டியவர். அந்தக் கவியரங்க மேடையில் கல்லூரி முதல்வர் கோபாலகிருஷ்ணாவும் அமர்ந்திருந்தார்.

அந்தக் கவியரங்கத்தில் நானும் பங்கேற்றேன். என் கவிதை பெற்ற வரவேற்பை விழிகளைத் துருத்தியபடி கோபாலகிருஷ்ணாவும் கேட்டுக் கொண்டிருந்தார். அந்தக் கவிதை வரிகளை மேற்கோள் காட்ட எனக்கு இப்போது நினைவில்லை. அக்கவிதை கல்லூரி ஆண்டு மலரில் வெளியிடப்பட்டது. அந்தக் கவிதையை என்னுடைய மாணவர், இப்பொழுது காயிதே மில்லத் கல்லூரியில் துறைத் தலைவராகப் பணியாற்றும் பேராசிரியர் ஹாஜா கனி தேடிக் கண்டுபிடித்துத் தமது முனைவர் பட்டத்துக்கான ஆய்வேட்டில் மேற்கோளும் காண்பித்துள்ளார். நான் எப்படியெல்லாம் இறைநம்பிக்கை கொண்டவனாக இருந்தேன் என்பதற்குரிய தடயமாக அந்தக் கவிதையை மேற்கோள் காட்டுகிறார்.

இப்பொழுதும் மன அமைதி தேடி இறையிடம் கையேந்தும் எந்தக் கைகளையும் முடக்கும் வாதங்கள் என்னிடம் இல்லை. இறைநம்பிக்கையை மனிதர்கள் கொள்ளும் காதல் உறவைப்போல் ஒரு தனிப்பட்ட அந்தரங்க உணர்வாகத்தான் கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்பொழுது எனக்கு மத ஈடுபாடு இருந்தது. அது பாகுபாடு காட்டும் ஈடுபாடு இல்லை. இறைநம்பிக்கை, இறைநம்பிக்கையை நிறைவேற்றும் தொழுகை என்ற வகையில் என் புரிதல் இருந்தது. வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையை ஒருபோதும் தவறவிட்டது இல்லை. பேரளவில் மக்கள் கூடிச் செய்யும் வழிபாட்டில் பங்கேற்பதும் இறைவனிடம் முறையீடு செய்வதும் எனக்கு ஒரு வகையான மன அமைதியைத் தந்தது.**

கிழக்கரையில் என்னுடைய பள்ளிக் காலத்து நண்பர் ஒருவர் வீட்டில் இரு பெண்மணிகளிடம் நான் நடத்திய உரையாடல் என் நினைவுக்கு வருகிறது. அவர்கள் பெருஞ்செல்வச் சீமாட்டிகள். அவர்களில் ஒருவர் என்னுடன் படித்தவர் என்பதை நினைவுபடுத்தி, என்னிடம் வாதாடத் தொடங்கினார்.

"நீ ஏன் எப்பவும் எங்கள எதுக்குறாய்?" என்று ஆரம்பித்தார்.

"ஒங்களைத் தனிப்பட்ட முறையிலே எதுக்கலே...இந்த வாழ்க்கை முறையிலே நியாயமில்லை என்கிறதைத்தான் சுட்டிக் காட்டுகிறேன்" என்றேன்.

"இல்லே... ஒனக்கு போறாமை... உன்கிட்ட உள்ள இல்லாமையினால் ஏற்பட்ட போறாமை."

"எனக்கு இன்னமும் வேண்டுங்கிற மனநிலை இல்லை. எனக்கு இருக்குறது போதுமானதாத்தான் இருக்குது. அதனால பொறாமை இல்லே..."

"நீ அப்படிச் சொல்லாம். ஆனா நாங்க உன் போறாமையாத்தான் பாக்குறோம்."

"எனக்கு எது திருப்தியைத் தருது தெரியுமா?"

"நீதான் சொல்லணும்?"

"உலகத்திலே மிகச் சிறந்த ஓவியத்தைப் பார்த்திருக்கீங்களா?"

"இல்லே"

"நான் நேரிலே பாக்காட்டாலும் அச்சிலே பாத்திருக்கேன். மிகச் சிறந்த இசையை இசைத்தட்டுலே கேட்டிருக்கேன். மிகச் சிறந்த கவிதைகளைப் படிச்சிருக்கேன்..." நீங்க இதையெல்லாம் பாத்துக் கேட்டு ரசிச்சிருக்கீங்களா?"

"இம்... இல்லே..."

"ஒங்களோட இல்லாமையை நெனச்சி எனக்கு வருத்தமா இருக்கு."

"அதயெல்லாம் உடு.. நீ ஏன் தொழுவமாட்டேங்குறே."

"செய்யுற தப்பெல்லாம் செஞ்சிட்டுத் தொழுவுனா சரியாப் போயிடுமா? நீங்க அல்லாவை நம்புறதாச் சொல்ற நேரத்துலேயும் ஒங்க கல்லாவைத்தான் நெனக்கிறிங்க."

அந்தப் பெண்மணிகள் இந்தத் தாக்குதலை என்னிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.


"நீ எங்க நம்பிக்கையைக் கொறை சொல்லாதே... ஒனக்குத் தெரியுமா நாங்க கல்புக்குள்ளே அழுவுறத எல்லாம் சொல்றதுக்கு அல்லா ஒருத்தந்தான் இரிக்கிறான். தொழுவுறது மட்டுமில்லே, திட்டுறதா இருந்தாக்கூட அல்லாவத்தான் திட்டுறோம்."

அந்தப் பெண்மணி உறுதியான குரலில் பேசினாலும், அந்தக் குரலுக்குள் அழுகிற மனத்தை என்னால் கேட்க முடிந்தது. என்னுடைய சொற்கள் ஊசிகளாய்க் குத்தி அந்த மனத்தைக் காயப்படுத்திவிட்டது. எங்கள் உரையாடல் நின்றுவிட்டது. பிறகு நலம் விசாரிப்புடன் நான் விடை பெற்றுக்கொண்டு வந்துவிட்டேன்.

முதலும் கடைசியுமாக முறையிடுவதற்கு அவர்களுக்கு அல்லாதான் இருக்கிறான். எனினும் புலம்பும் மனக்கவலைக்கு யார் காரணம்? எனக்கு இறையுணர்வைப் புரிந்து கொள்வதற்கான ஒரு தருணமாக அது இருந்தபோதிலும், மாற்ற வேண்டியது இந்த வாழ்க்கை முறையைத்தான் என்று அந்தப் பெண்கள் புரிந்துகொண்டார்களா என்ற சந்தேகம் இன்றுவரை நீங்கவில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் வாழ்க்கையில் சலிப்படையாமல் இருப்பதற்குக் காரணமே கவிதைதான்

கவிஞர் ஈரோடு தமிழன்பன். தமிழ்க் கவிதை உலகின் தனித்துவமிக்க கவிஞர்களில் ஒருவர்; பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களில் ஒருவர்; பத்தாண்டுகள் பாரதிதாசனோடு நெருங்கிப் பழகும் பேறு பெற்றவர்; தமிழ்க் கவிகள் பாரதியையும் பாரதிதாசனையும் முன்னோடிகளாகவும் ஆங்கிலக் கவிஞர்கள் வால்ட்விட்மனையும், பாப்லோ நெருடாவையும் தோழமைகளாகவும் வரித்துக்கொண்டவர்.

தமிழ்க் கவிதையின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதுப்புது உத்திகளைப் புகுத்தியவர். தமிழக அரசின் குறள்பீட விருதும், இந்திய அரசின் சாகித்ய அகாதமி விருதும் பெற்றவர். தொலைக்காட்சி ஊடகத்தின் வழியாக தமிழின் அழகை தமிழர்களுக்கு உச்சரிக்கக் கற்றுத் தந்தவர். செய்தி வாசிப்பில் தமிழின் சிறப்பெழுத்துக்களைத் தனது நாவால் நளினப்படுத்திக் காட்டியவர்.

பொதுவுடமை சித்தாந்தத்தையும் திராவிடத் தத்துவத்தையும் கலந்து பிழிந்து மேடைத் தமிழ் தந்த மேன்மைக் கவி. வானம்பாடியிலேயே கானம்பாடிய கானக்குயில். அறுபது ஆண்டுக்கும் மேலாய் ஓயாத கவிமுழக்கம் இவரது குரல். எண்பது வயதிலும் துள்ளிக்குதிக்கும் இவரது தமிழ்ச் சொல்லாடல். திறமையாளர்களைப் பெருமைப்படுத்தி பெருமைகொள்வது இவரது அடையாளம். தமிழன்பனின் எண்பதாவது பிறந்தநாள் நிறைவையொட்டி அவருடனான ஒரு நேர்காணலை வெளியிட்டுச் சிறப்பிக்கிறது காக்கை.

– ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எந்தக் கொள்கை ரீதியான கருத்து களையும் தங்கள் கவிதைகளில் இப்போதெல்லாம் காணமுடியவில்லை என்ற கருத்து முன்வைக்கப்படுகிறதே?*

இப்படி ஒரு கருத்து முன்வைக்கப் படுகிறதா என்பதை நான் இதுவரை அறிய வில்லை. 'கொள்கை ரீதியான' என்பது 'கட்சி ரீதியான' என்னும் பொருளில் வைக்கப்படுகிறதா? என்றும் எனக்குத் தெரியவேண்டும். இன்னொன்று, இதுவரை இருந்த என் கவிதைகளுக்கான அடித்தளத்தைக் கைவிட்டிருக்கிறேனா? அல்லது வேறு தளத்திற்குப் போயிருக் கிறேனா? அப்பட்டமாக 70களில் எழுதி வந்த அரசியல் கவிதைகள் ஒருவேளை மாறியிருக்கலாம். அப்பட்டம் என்னும் தன்மை இல்லாமல் இருக்கலாம்; அரசியலை முன்னெடுத்துப் பேசும் கவிதைகளில் கலைப்பரிமாணம் மாறியிருக்கலாம். 'கொள்கை ரீதியாக' என்று நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்களோ அது மாறவில்லை.

*சமுதாய நிகழ் களன்களை மையமிட்டுப் பல்வேறு பரிமாணங்களில் காட்டுவதே தங்கள் நோக்கமாக இருக்கிறது என்ற கூற்று சரியா?*

இதுவும் முற்றான உண்மை இல்லை. எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்துகிற சமுதாய நிகழ்வுகளை 'மக்களுக்கான மக்கள் இலக்கியம்' என்கிற கண்ணோட்டத்தில் பொய்க்காத மனச்சான்றுடன் நான் கவிதை களில் பதிவு செய்கிறேன். 'சமூகத்திற்கான ரொட்டி சுடுவதே கவிஞனின் கடமை' என்பான் பாப்லோ நெருதா. எனக்கு இது உடன்பாடு. அகவயப்போக்கில் அனுபவப் பதிவுகள் என் படைப்புகளில் இருப்பதும் வாழ்வின் காரண காரியங்கள் மீதான வினாக்களை எழுப்பும் தத்துவத் தன்மைகள் என் கவிதைகளில் இருப்பதும் உண்மையே

*தாங்கள் எழுதுவது எண்ணிக்கைக் காகவா? எண்ணங்களை மிகுதியாகப் பதிவுசெய்யவா?*

எண்ணிக்கைக்காக ஒருபோதும்நான் எழுதுவதில்லை. ஒருவேளை அதிகமாக எழுத முடியாதவர்கள் அப்படிச் சொல்லலாம். எண்ணிக்கைக்காக எழுதிய தாகப் பாரதிதாசனைச் சொல்வீர்களா? பாப்லோ நெருதாவையும் இப்படி விமர்சித்தவர்கள் இருந்தார்கள். வரலாற்றிடம் அவர்கள் மன்னிப்புக் கேட்க நேரிட்டது. எனக்குள் வற்றாமல் பெருகிவரும் கவிதை வெள்ளத்தைத் தடை செய்யாமல் வெளியிடுகிறேன். இது தவறா? இப்போதும் சொல்கிறேன்; எண்ணங்களே முக்கியம்; எண்ணிக்கை அல்ல.ஆனால் எண்ணிக்கையைப் பெருக்கும் எண்ணங் களை என் கவிதை அழகுகள், என் கவிதை உணர்வுகள், தழுவிக்கொள்ளத் துடிக்கும் போது எந்த விமர்சகருக்காக நான் தடுக்கவேண்டும்?

*முரண், படிமம் - இவற்றை இக்காலக் கவிதையில் இணைப்பது வரவேற்கப்படுகிறதா?*

முரண், படிமம் - இவை சிறந்த கவிதைக்கு எதிரானவை என்று ஏன் கருதப் படவேண்டும்? இவற்றை இணைக்காமல் விட்டுவிட்டாலே சிறந்த கவிதைகள் உருவாகிவிடுமா? அல்லது இவற்றுக்கு மாற்றாகப் பரிந்துரைக்கப்படுபவை என்ன? மிகை அலங்காரங்கள் எப்படிப்பட்டனவாக இருந்தாலும் தேவை இல்லை என்பதே என் கருத்து. அழகியல் கோட்பாடுகள் மாறலாம். ஆனால் அழகியலே தேவையில்லை என்பதை என்னால் ஏற்கமுடியாது.

*கவிதைகளில் பல சோதனைகளை நிகழ்த்தியவர் நீங்கள். அச்சோதனை கவிதைகளில் எத்தகைய வரவேற்புடன் இருந்து வருகிறது?*

நிச்சயமாக வரவேற்பு இருந்து வருகிறது 'புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார்' என்று கம்பன் சொன்னதை நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். சென்ரியு என்றால் என்னவென்று, விளக்கம் கொடுத்ததோடு முதல் சென்ரியு தொகுப்பை நான் வெளியிட்ட பிறகு எத்தனையோ சென்ரியுத் தொகுப்புகள், அவ்வாறே 'சென்னிமலைக் கிளியோப்பாத்திராக்கள்' என்ற தலைப்பில் முதல் 'லிமரைக்கூ' நூலை நான் வெளியிட்டபிறகு எத்தனையோ லிமரைக்கூ நூல்கள் வெளிவந்துவிட்டன. என் 'கவின்குறு' நூலை, என் 'கஸல்பிறை' நூலைப் பின்பற்றி வெளிவந்துள்ள படைப்புகளும் உண்டு. இப்போது நான் புதுவதாகச் செய்துள்ள 'பழமொன்ரியு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிமுகில் அறக்கட்டளையும் விழிகள் பதிப்பகமும் இணைந்து சென்னையில் 27.9.2014 அன்று நடத்திய ஈரோடு தமிழன்பன் அவர்களின் 80ஆம் பிறந்தநாள் நிறைவு விழாவில் தமிழன்பனுக்கு 'கவிப்பேரிமையம்' எனும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர்.**



**படத்தில்: ஜெ. கிருஷ்ணமூர்த்தி, தமிழமுதன், சிங்கப்பூர் எம்.ஏ.முஸ்தபா, திருமதி தமிழன்பன், கவிஞர் ஈரோடு தமிழன்பன், விழிகள் தி. நடராசன், சிங்கப்பூர் பிச்சினிக்காடு இளங்கோ, சி.நா. சண்முகசுந்தரம், கவிஞர் கவிமுகில்.**

நூலும் இளம் படைப்பாளிகளுக்குத் தூண்டுதலை ஏற்படுத்தும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

*ஜப்பானியக் கவிதை வடிவங்களைத் தமிழ்க் கவிதை வடிவங்களோடு கலந்து இளைஞர் மத்தியில் படரவிட்டிருப்பது தங்களின் சோதனை முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்று நினைக்கிறீர்களா?*

ஆம்! வெற்றியே! இளம் படைப்பாளிகள் ஆர்வத்துடன் இதுகுறித்து என்னிடம் பேசுகின்றனர். தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கும் என் முயற்சிகள் புதிய திசைகளைக் காட்டும். இப்படிப் புதியன பலவற்றை இன்னும் பலரால் காட்டமுடியும்.

*தங்கள் படைப்புகள் சர்வதேச அளவுக்கு உயர்ந்திருப்பதாக எண்ணுகிறீர்களா?*

நான் இதுகுறித்துப் பேசினால் தற்புகழ்ச்சியாகக் கருதப்படலாம். இப்போது இந்திய அளவில் நான் கவிஞனாக அறியப்படுகிறேன் என்றே நம்புகிறேன். கடந்த மே மாதம் புது தில்லியில் நடைபெற்ற உலகக் கவிதைத் திருவிழாவில் கலந்துகொண்டதை இங்குக் குறிப்பிடலாம் அமெரிக்கா, இங்கிலாந்து. ஆஸ்திரேலியா, மற்றும் கிரேக்கம் பாலஸ்தீனம், ஸ்பெயின், சிரியா, நைஜீரியா என 60 அயலகக் கவிஞர்களும் 20 இந்தியக் கவிஞர்களும் கலந்துகொண்ட அவ்விழாவில் தமிழ் மொழியின் சார்பில் நான் ஒருவன் மட்டுமே பங்குகொள்ள அழைக்கப்பட்டிருந்தேன். உலகக் கவிஞர்கள் பலரின் கவனத்தை நான் ஈர்த்திருக்கிறேன்; சிலர் என்னிடம் இப்போதும் தொடர்பில் உள்ளனர். என் கவிதைகள் பல்வேறு மொழிகளில் இன்னும் பெயர்க்கப்படவில்லை. அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டால் என் பெருமை அல்ல, தமிழின் பெருமை உலகிற்குத் தெரியவாய்ப்பு வரலாம்.

*கவிதை உலகில் அடியெடுத்து வைத்து ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. எழுதுவதில் எப்போதாவது சலிப்படைந்ததுண்டா?*

எனக்குக் கவிதை என்பது எனது உள்ளியக்கமாக, உணர்வியக்கமாக இருந்து வருகிறது. நான் வாழ்க்கையில் சலிப்படையாமல் இருப்பதற்கே கவிதை தான் காரணம் கவிதையால் நான் ஏன் சலிப்படைய வேண்டும்? தமிழோ கவிதையோ என்னால் சலிப்படையாமல் இருந்தால் போதும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயம்புத்தூர் கேப்பிட்டல்

## உங்கள் அனைத்து இன்வெஸ்ட்மெண்ட் தேவைகளுக்கும்

- ✓ ஷேர் டிரேடிங்
- ✓ டெரிவேட்டிவ்ஸ் டிரேடிங்
- ✓ டெப்பாசிட்டரி சர்வீசஸ்
- ✓ கமாடிட்டி டெரிவேடிவ்ஸ்
- ✓ கரன்சி டெரிவேட்டிவ்ஸ்
- ✓ இன்டர்நெட் டிரேடிங்
- ✓ மொபைல் டிரேடிங்
- ✓ இன்சூரன்ஸ்
- ✓ மியூச்சுவல் பண்ட்
- ✓ ஐ.பி.ஓ

**கோயம்புத்தூர் கேப்பிட்டல் லிமிடெட்**
ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் பில்டிங், முதல் தளம்,
686, திருச்சி சாலை, கோயமுத்தூர் 641 005
போன் : (0422) 232 02 02 - 06
பேக்ஸ் : (0422) 232 02 11

உங்கள் அருகில் உள்ள
கிளையின் விலாசத்தை அறிய
தொடர்பு கொள்ளவும்.
கட்டணமில்லா தொலைபேசி எண் :
**1800-425-0506**
(toll free from BSNL)

• Trading Member & Clearing Member : Capital Market Segment, Futures and Options Segment and Retail Debt Market Segment. Trading Member : Currency Derivatives Segment, National Stock Exchange of India Ltd., Mumbai • Depository Participant : National Securities Depository Ltd., Mumbai • SEBI Reg. No. : INB 230752939 / INF 230752939 / INE 230752939 / IN-DP-NSDL-19-97

**www.coimbatorecapital.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூமியின் சொந்தக்காரர்கள் யார்?

'சிலிர்ப்பூட்டுகிற' (த்ரில்லர்) என்று வகைப்படுத்தப்பட்ட படமானாலும் டிராக்கர், அதன் சிலிர்ப்பூட்டும் கதைக்குள் ஆதிக்க வெறி கொண்ட இங்கிலாந்தின் ஆன்மாவை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

மனித இன வளர்ச்சிப் போக்கில், கடற்பயணம் சாத்தியமற்ற காலம் வரை அந்தந்தக் கண்டத்து மனிதர்கள் அங்கங்கேயே வாழ்ந்து வந்தனர். கடற்பயணம் சாத்தியமானவுடன் கண்டம் விட்டு கண்டம் செல்லும் பயணங்கள் துவங்கியுள்ளன. இதில் முக்கியமானது கண்டங்களை வெல்லும் கனவோடு ஐரோப்பாவிலிருந்து ஆதிக்க வெறியர்கள் கிளம்பிச் சென்றதுதான். அதிலும் இங்கிலாந்து மன்னர் பரம்பரையினரும், அவர்களுக்கு வேண்டியவர்களும் இதில் தீவிரம் காட்டினர்.

புதிய கண்டங்களில் தங்கமும், வைரமும் தேடிப் புறப்பட்ட அவர்கள் தாங்கள் கண்டடைந்த புதிய நிலங்களைத் தங்களுடையதாக்கிக் கொள்ள ஆசைப்பட்டனர். எதிர்த்த உள்ளூர்வாசிகளை துப்பாக்கி களாலும் பீரங்கிகளாலும் சுட்டுப் பொசுக்கி, அழித்து தங்களின் மேலதிகாரத்தை நிலை நாட்டினர். இதில் அவர்கள் கருணையோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இரக்கமோ காட்டியதாக வரலாறே இல்லை. தாங்கள் வெற்றி கொண்ட நிலங்களின் இயற்கை வளங்களைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, பொருள் சேர்க்கும் வெறியுடன், தொழிலையும் வியாபாரத்தையும் பல நூற்றாண்டுகளாக நடத்தியதோடு ஆங்காங்குள்ள மக்களை அடிமைப்படுத்தி, அவர்களின் உழைப்பையும் சுரண்டிக் கொழுத்தனர்.

அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியா என்று ஐரோப்பியர்கள் கால் பதிக்காத பிற கண்டங்களே இல்லை. 18ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா, தன் விடுதலையைப் பெற்றுக் கொண்டு இங்கிலாந்துக்கு இணையான வல்லரசாக உருவெடுத்தது. பண பலமும், ஆளும் வர்க்கத்தின் ஆசியும் கொண்ட அமெரிக்க, இங்கிலாந்துக் கம்பெனிகள் பின் தங்கிய நாடுகளின் வளங்களைத் தங்கள் முழுக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள அந்தந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தின. அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்னிருந்துதான் "காலனிகள்" என்றழைக்கப்பட்ட அடிமை நாடுகள் போராடிப் போராடி தங்கள் விடுதலையைப் பெற்றன. தென் ஆப்பிரிக்கா விடுதலை பெற்றது 1994ஆம் ஆண்டில்தான். இதில் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற நாடுகள் விடுதலைப் போருக்கு வேலையே இல்லாமல் முழுக்க முழுக்க வெள்ளையர்களின் நாடாகவே மாறிப்போனது. அந்நாடுகளின் பூர்வ குடிமக்களில், வெள்ளையர்களை எதிர்த்தவர்கள் அழித்தொழிக்கப்பட்டது போக, எஞ்சியவர்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே இரண்டாந்தரக் குடிமக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இயற்கையிலேயே வெள்ளை ஆளும் வர்க்கத்தினருக்கு பொருளாசையும், அதிகார வெறியும் இருந்துள்ளதை வரலாறெங்கும் நாம் பார்க்க முடிகிறது. உலகெங்கும் அவர்களால் சூறையாடப்பட்ட நாடுகள், சமூகங்கள், குடும்பங்கள், தனி மனிதர்களின் வாழ்க்கையை இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. சினிமாக்களும் இருக்கின்றன. அதிலொன்றுதான் டிராக்கர் திரைப்படம். 'சிலிர்ப்பூட்டுகிற' (த்ரில்லர்) என்று வகைப்படுத்தப்பட்ட படமானாலும் டிராக்கர், அதன் சிலிர்ப்பூட்டும் கதைக்குள் ஆதிக்க வெறி கொண்ட இங்கிலாந்தின் ஆன்மாவை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

டிராக்கர் படத்தின் கதை 1903ஆம் ஆண்டு நியுசிலாந்தில் நடக்கிறது. இரண்டு முக்கிய கதாபாத்திரங்கள். ஒருவர் வான் டிமன் என்ற போயர். 1899–1902 காலத்தில் தென்ஆப்பிரிக்காவில் இங்கிலாந்தின் ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற இரண்டாம் போயர் போரில் பங்கேற்றவர். இங்கிலாந்தின் ஆதிக்க வெறிக்குத் தன் வீடு, நிலம், குடும்பம் என்று அனைத்தையும் பறிகொடுத்தவர்.

**பண பலமும், ஆளும் வர்க்கத்தின் ஆசியும் கொண்ட அமெரிக்க, இங்கிலாந்துக் கம்பெனிகள் பின் தங்கிய நாடுகளின் வளங்களைத் தங்கள் முழுக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள அந்தந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தின. அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்னிருந்துதான் "காலனிகள்" என்றழைக்கப்பட்ட அடிமை நாடுகள் போராடிப் போராடி தங்கள் விடுதலையைப் பெற்றன.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவர் நியுசிலாந்து பூர்வகுடியான மாவ்ரி இனத்தைச் சேர்ந்த கரிமீயா என்பவர். அவரும் தான் சிறுவனாய் இருந்த காலத்தில் இங்கிலாந்து வெள்ளையர்களால் குடும்பத்தோடு தங்கள் நிலத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்டவர். எதிர்ப்புக் காட்டிய அவருடைய பெற்றோர்கள் கொலை செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டனர். தான் சிறுவனாயிருந்த போது கொல்லப்பட்டு இறந்து போன தன் பெற்றோர்களின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனைகளை நிறைவேற்ற வந்திருக்கிறார் கரிமீயா. இதே தருணத்தில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து நியுசிலாந்து வருகிறார் வான் டிமன். அவரை நன்கறிந்த வெள்ளை இராணுவ அதிகாரி மேஜர் கார்லா துறைமுகத்திலேயே வரவேற்றுக் கேட்கிறார். "ஏது இவ்வளவு தூரம்?", "நியுசிலாந்தை எனது புதிய வீடாக நினைத்து வந்திருக்கிறேன்" என்கிறார் வான் டிமன். "என்னது, இது உங்கள் வீடா?" என நக்கலாய்க் கேட்கிறார் கார்லா. "ஆமாம்... உலகையே சொந்த வீடாக்கிக் கொண்ட உங்களுக்கு நான் சொல்வது நக்கலாகத்தானிருக்கும்..." என்று கொதிக்கிறார் வான் டிமன். "நல்லது... நிலம் வாங்கி விவசாயம் செய்யுங்கள்" என்று வான் டிமனை அனுப்பி வைக்கிறார் கார்லா.

'மனிதர்களைக் கொல்லுதல் கூடாது. அப்படிக் கொல்ல நேரிட்டால் அது தனது குடும்பத்தைக் காப்பதற்கு மட்டுமே' என்ற கடவுளின் வாக்கியத்தைப் பின்பற்றுபவர் வான் டிமன். போயர் போரின் போது தனது மனைவியையும், மூன்று குழந்தைகளையும் இழந்தவர் அவர். அதற்குக் காரணமான இங்கிலாந்து வெள்ளையர்களின் மீது கோபம் இருக்கிறது அவருக்கு. தப்பி ஓடுபவர்களின் கால் தடம் பற்றிச் சென்று அவர்களை மடக்கிப் பிடிக்கும் கலையில் வல்லவர் வான் டிமன். அந்தக் காலத்தில் வான் டிமன் போன்ற மோப்ப மனிதர்கள் (டிராக்கர்) நிறைய இருந்திருக்கிறார்கள். வான் டிமன், கப்பலில் நியுசிலாந்து வந்திறங்கும் அதே நாளில் தன் வெள்ளைக்கார காதலியோடு இராணுவத்திற்குச் சொந்தமான குதிரை லாயத்தில் உல்லாசமாக இருக்கிறார் கரிமீயா. அந்நேரம் அங்கு வருகிறான் சான்டர்ஸ் எனும் நிறவெறி கொண்ட இங்கிலாந்து அதிகாரி. "கலர்டு" என்றழைக்கப்படும் கறுப்பினத்தவர், வெள்ளை இனப் பெண்கள் மீது காதல் கொண்டாலோ, அல்லது ஆர்வத்திலோ, தெரியாமலோ வெள்ளை இனப் பெண்கள்மீது கை வைத்தால் கூட நிறவெறி கொண்ட வெள்ளையர்கள் கறுப்பர்களைக் கடுமையாகத் தாக்குவது வழக்கம். இம்மாதிரியான வழக்குகளில் நீதிமன்றங்கள்கூட வெள்ளை இனத்தவருக்கு ஆதரவாகவே தீர்ப்பளிக்கும் போக்கு அப்போது இருந்தது. எனவே சாண்டர்ஸ், "வெள்ளை இனப் பெண்ணோடா உறவு கொள்கிறாய்?" எனக் கேட்டு இன்னும் இரண்டு சிப்பாய்களோடு சேர்ந்து கரிமீயாவைக் கடுமையாகத் தாக்குகிறான். சண்டை நிகழ்கிறது. சண்டையின் ஊடாக சாண்டர்ஸ் தவறுதலாக தன் சிப்பாயைக்

**"உன் எதிரி யார் என்று தெரிந்து கொள்ள அவன் வணங்கும் கடவுள் யார் என்று கண்டுபிடி" என்று தன் தந்தை தனக்குச் சொல்லிக் கொடுத்ததாகச் சொல்கிறார் கரிமீயா. காட்டில், வான் டிமனுக்கும் கரிமீயாவுக்கும் இடையே நடக்கும் இது போன்ற உரையாடல் காட்சிகள் நமது மனித நேயத்தையும், பகுத்தறிவையும் உலுக்கும் காட்சிகள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்று விடுகிறான். "நீதான் கொன்றாய்" என்று கரிமீயாவைப் பார்த்துக் கூச்சலிடும் சாண்டர்ஸ் கரிமீயாவின் காதலியான லூஸியையும் மிரட்டி விசாரணையின் போது அவ்வாறே சொல்ல வைக்கிறான். ஒரு வெள்ளைச் சிப்பாயை கொன்றது மிகப் பெரிய குற்றம். இருப்பினும், எதையும் சட்டப்படி செய்ய வேண்டும் என்று கருதும் மேஜர் கார்லா ஓடிப்போன கரிமீயாவைப் பிடிப்பதற்காக உள்ளூர்க் காவலர் ப்ரைஸ் என்பவரையும் மற்றும் சில சிப்பாய்களையும் சேர்த்துக் கொண்டு கரிமீயாவைத் தேடிப் போகிறார். மோப்ப மனிதரான வான் டிமனையும், கண்டுபிடித்துக் கொடுத்தால் நூறு சவரன் தங்கம் என்று ஆசை காட்டுகிறார். வான் டிமனும் அதற்கு ஒத்துக்கொள்கிறார். காட்டு வழியே தப்பி ஓடுகிறார் கரிமீயா. வான் டிமன் தனது திறமையால் கரிமீயாவைப் பின் தொடர்ந்து சென்று அவரை மடக்கிப் பிடித்து விடுகிறார். சிப்பாயைத் தான் கொல்லவில்லை என்றும், நிரபராதி என்றும், தன்னை விட்டுவிடுமாறும் கெஞ்சுகிறார் கரிமீயா. வான் டிமன் இதனை நம்ப மறுக்கிறார்.


நியுசிலாந்தின் அடர்ந்த காடுகள், மலைகள், பள்ளத்தாக்குகள், நதிகள் என்ற ரம்மியமான சூழலில், இயற்கையான ஒலிகளின் பின்னணியில் இருவரின் பிடித்தல்-தப்பித்தல், மீண்டும் பிடித்தல் என ஒரு பூனை-எலி வேட்டை நடப்பது நமக்கு அருமையான ஒரு திகில் ஊட்டும் அனுபவம். கரிமீயா தன் கதையைச் சொல்கிறார். வெள்ளையர்களால் தனது தந்தை கொல்லப்பட்டதை, தனது குடும்பமே அழித்தொழிக்கப்பட்டதைச் சொல்கிறார். "போயரான உனக்கு வெள்ளையர்கள் மேல் கோபம் இல்லையா? வெள்ளையர்களால் நாமிருவருமே பாதிக்கப்படவில்லையா?" என்று வான் டிமனின் அனுதாபத்தைச் சம்பாதிக்க முயற்சிக்கிறார். வான் டிமனோ, "நீ ஒரு கொலைக் குற்றவாளி, நான் ஒரு விடுதலைப் போராளி" என்று கடுகடுக்கிறார். "ஒரு நேர்மையான விசாரணைக்கு நீ வர வேண்டும்" என்று உறுதிபடக் கூறுகிறார். "நேர்மையான விசாரணை அல்ல, நேர்மையான தூக்குதான்" எனக்குக் கிடைக்கும் என்று கரிமீயா வெடிக்கிறார். தான் சொல்வதை வான் டிமன் நம்பாமல் போவதை எண்ணி கரிமீயா வருந்துகிறார். இதற்கிடையில் கரிமீயா பிடிபட்டு நேர்மையான விசாரணை நடந்தால், தான் கொலை செய்த உண்மை வெளிப்பட்டு விடும் என்று சாண்டர்ஸ் அஞ்சுகிறான். எனவே மேஜர் கார்லாவின் தடையையும் மீறி கரிமீயாவைத் தேடும் படையில் வந்து சேர்கிறான் சாண்டர்ஸ். எப்படியாவது கரிமீயாவைக் கொன்றுவிடத் துடிக்கிறான். ஆனால் சாண்டர்ஸின் வருகை வான் டிமனுக்கு நியாயமான ஐயத்தை ஏற்படுத்திவிடுகிறது.

இந்தக் கட்டத்தில் வான் டிமன் கரிமீயா சொல்வது உண்மைதான் என்றும், அவர் குற்றமற்றவர் என்றும் கண்டுணர்கிறார். எனவே இங்கிலாந்து ராணுவ அதிகாரிகளிடமிருந்து கரிமீயா தப்பிக்க உதவுகிறார். அவ்வாறு வான் டிமன், கரிமீயா தப்பிக்க உதவுவதும், வான் டிமன் அதற்காக நடத்துகிற நாடகமும் ரொம்ப சுவாரஸ்யமான இறுதிக் கட்டக் காட்சிகள். வெள்ளை அதிகாரிகள் ஏமாந்து போக கரிமீயாவும் அவரைத் தப்பிக்கவிட்ட வான் டிமனும் நியுசிலாந்தை விட்டு வெளியேறுவதோடு படம் முடிகிறது. "உன் எதிரி யார் என்று தெரிந்து கொள்ள அவன் வணங்கும் கடவுள் யார் என்று கண்டுபிடி" என்று தன் தந்தை தனக்குச் சொல்லிக் கொடுத்ததாகச் சொல்கிறார் கரிமீயா. காட்டில், வான் டிமனுக்கும் கரிமீயாவுக்கும் இடையே நடக்கும் இது போன்ற உரையாடல் காட்சிகள் நமது மனித நேயத்தையும், பகுத்தறிவையும் உலுக்கும் காட்சிகள். இங்கிலாந்தின் ஆதிக்க வெறிக்கு இரையாகி, வீடும் நாடும் அற்றுப் போன வான் டிமனும், கரிமீயாவும் தங்களின் அனாதரவான நிலையை உணர்ந்து அதைப் பகிர்ந்து கொள்வதும், பொது எதிரியை அடையாளம் காணுவதும், ஒருவருக்கொருவர் உதவித் தப்புவதும் நம்மைச் சிலிர்ப்பூட்டி நெகிழ வைக்கிற இறுதி.

நிகோலஸ் வான் கதை வசனத்தில், இங்கிலாந்து ண் நியுசிலாந்து கூட்டுத் தயாரிப்பில், 2010இல் வெளிவந்த இப்படத்தை இயக்கியிருப்பவர் இயன் ஷார்ப். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வின் யதார்த்தங்களைப் புரியவைத்த உஷாநிவாஸ்

லயோலாவில் முதுகலை முடித்த கையோடு வேலைக்கான உத்தரவை என் கைகளில் கொண்டு வந்து திணித்து விடுவார்கள் என்று இறுமாந்திருந்த எனக்கு அப்படி இல்லையடா, வேலை வேண்டுமென்றால் நாயாய் பேயாய் அலைந்து திரிய வேண்டும் என்ற வாழ்வின் யதார்த்தம் புரிய ஆரம்பித்திருந்த நேரம். காலையிலேயே நாயர்கடை கப் சாயாவோடு ஹிந்து நாளிதழை அங்குலம் அங்குலமாக ஆராய்வது வழக்கம். வேலைவாய்ப்பு செய்திகளைத் துருவித் துருவி மேய்ந்து எழும்பூர், அண்ணாநகர் என பல்வேறு இடங்களில் நடக்கும் நேர்முகத் தேர்வுகளை ஓடி ஓடிச் சந்தித்தபடி இருந்தேன், பெரும்பாலும் விற்பனையாளர்களுக்கான நேர்முகங்கள். "என்னால் ஒரு எஸ்கிமோவுக்குக் கூட ஐஸ் கிரீம் விற்கமுடியும்'' என்று விற்பனைக் கலையின் தாத்பரியம் புரியாமல் உளறிக்கொண்டிருந்தேன். கழுத்தில் டையும், தோளில் பையுமாக யாரைக் கண்டாலும் அவன் எனக்கு ஒரு தேவதூதன் போலவே தெரிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை தேடும் காண்டத்தில் எனக்கு புகலிடம் அளித்த முதல் இடம் உஷா நிவாஸ். சூளைமேடு சாலையில் ரிசர்வ் வங்கியின் குடியிருப்புகளின் அருகே நகரின் எந்தப் பரபரப்பும் அப்போதெல்லாம் எட்டிப் பார்க்காத இடமாய் இருந்தது. தரைத் தளத்தில் ஆறு கடைகளும் மேல் தளத்தில் மாத வாடகைக்கு ஆறு அறைகளும் இருந்தன. அண்ணன் ஆமந்துறை இன்னோசெண்ட் ரொங்கலின் சிபாரிசில் மேலாளர் கணபதி எனக்கு இரண்டாம் அறையில் ஒரு படுக்கை ஒதுக்கித் தந்திருந்தார். ஒரு மாத வாடகை நூற்றியிருபது ரூபாய். கணபதி கறார் பேர்வழி, நண்பர்களென்று யார் வந்தாலும் குட்டி போட்ட பூனைபோல பின்னாலேயே ஓடிவந்து நிற்பார். “இருக்கவுங்களுக்கே தண்ணி இல்ல சார்'' அந்த நாளில் அடிக்கடி என் காதுகளில் விழுந்த வாசகம். ஒரு சிலருக்கோ கணபதியைக் கண்டாலே ஆகாது. காரணம் நண்பர்கள் கூடி அரட்டை அடிக்க விடமாட்டார். குடி, சீட்டாட்டம் எதுவுமே லாட்ஜ் பக்கம் எட்டிப் பார்க்காமல் காத்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

லாட்ஜில் பரமசிவம் என்று ஒரு நபர், பெருநகரத் தொலைபேசி நிலையத்தில் அதிகாரியாக பணியிலிருந்தார், கணபதிக்கும் அவருக்கும் ஏழாம் பொருத்தம். மாதத்தின் கடைசி தேதி வரை வாடகையை இழுத்தடித்து, நடையாய் நடக்க வைத்து கொடுப்பார். ஆச்சர்யம் என்னவென்றால் சென்னை நகரப் பேருந்துகளில் ஒரு தடவைகூட அவர் பயணச் சீட்டு எடுத்தது இல்லையாம். பெரிய பதவியிலிருந்தவர் எப்படி இப்படி ஒரு பழக்கம் வைத்திருந்தார் என்பதும் ஒருமுறைகூட பரிசோதகர்களிடம் மாட்டாமல் தப்பித்தார் என்பதும் இன்றுவரை புரியாத புதிர். இந்தச் தினசரி சகாசம் பற்றி மாலையில் வந்ததும் தன் நண்பர்களிடம் பகிர்ந்துகொள்வதோடு மட்டுமல்லாது தான் பேருந்தில் உரசிய பெண்கள் பற்றியும் அளவளாவியபடி இருப்பார் பரமசிவம். தன்னுடைய இயல்பில் பெருமிதம் அவருக்கு. இவையெல்லாம் ஒரு வகையான மனநோய். தனிமனித ஒழுக்கக் கேடு எப்படியெல்லாம் சமூகத்திற்குள் புரையோடிப் போயிருக்கிறது என்பதற்கு மிகப் பொருத்தமான உதாரணம் அவர். இன்றைய நிலையில் நிச்சயமாக அவருக்கு மணமுடிக்கும் பெண்பிள்ளைகள் இருக்கலாம். ஆனால் அவர்களை எப்படி வெளியே செல்ல அனுமதிப்பார்! எப்படிப்பட்டப் பொறுப்போடு அரசு பணிகளைச் செய்திருப்பார்?

பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர்களைச் சந்திக்கும் நாட்களில், ஐ போன் வைத்திருக்கும் அரை டவுசர்க்காரன், தனது லெக்கின் மனைவியோடு போனைக் காதில் பொருத்தியபடியே நுனி நாக்கு ஆங்கிலத்தில் யாருடனோ கதைத்தவாறு ஏற்கனவே சந்திப்புக்காக காத்திருப்பவர்கள் பற்றிய எந்தச் சிரத்தையுமில்லாமல் ஓடிப்போய் முன்னால் அமர்வது அடிக்கடி பார்க்கும் நிகழ்வு. இங்குதான் இந்தச் சிலம்பாட்டமெல்லாம், இவர்கள் ஆலாய் பறந்துபோய் பணியாற்றும் அமெரிக்காவிலோ கைபொத்தி, வாய் பொத்தி அரை வட்டத்துக்கும் மேலாகவே வளைந்து விடுகிறார்கள்.

கடந்த வாரம் ஒரு மாலைப் பொழுதில் நண்பர்களோடு மெரினாவில் அமர்ந்திருந்தேன். அம்மாவுக்கு ஜாமின் கிடைக்குமா, கிடைக்காதா? கிடைக்கா விட்டால் தமிழக அரசியல் எந்த திசையில் பயணிக்குமென்று கதைத்தபடியிருந்தோம், பேச்சினூடே ஏதாவது கொறிக்கலாமே என பக்கத்தில் வேர்க்கடலை விற்றபடி யிருந்தவளை அழைத்து கடலை வாங்கினோம். அவித்த வேர்க்கடலை

**கணபதிக்கு உஷா நிவாஸ் சம்பளத்தில் மணி நிவாஸிலும் மேலாளர் பொறுப்பு. சிறிய சம்பளத்தில் குடும்பம் நடத்தத் தடுமாறிய கணபதி மாலையில் சப்பாத்தி சுட்டு விற்க ஆரம்பித்திருந்தார். உடம்பெல்லாம் வியர்க்க விறுவிறுக்க, பானை வயிற்றைத் தள்ளிக்கொண்டு, மாடிப்படி ஏறி வந்து ஒவ்வொரு அறையாக அவர் பரிமாறுவது சிரிப்பை வரவழைத்தாலும் சிந்திக்க வைத்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சொல்லி முப்பது ரூபாய்க்கு கொடுத்தாள் "நானும் மதுரக்காரிதான்" என்ற பீடிகையோடு... இந்த வியாபாரம் நடந்தபடி இருந்தபோதே பக்கத்தில் வந்த சுக்குக் காப்பிக்காரி மூன்று பேருக்கும் ஆழாக்குக்கும் குறைவான அட்டைத் தம்ளர்களில் காப்பி ஊற்றி முப்பது ரூபாய் என்றாள், சிறு வியாபாரி களிடம் பேரம் பேசக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் அவர்களை அனுப்பி விட்டு கடலையின் தோலை உடைத்தால் நாற்றம் சகிக்க முடியவில்லை. கடலை அவித்து குறைந்தபட்சம் ஒரு வாரமாவது ஆகியிருக்கலாம். அவளைப் பொறுத்தவரையில், அன்றைய வியாபாரம் அவ்வளவுதான். யார் தன் பொருளை வாங்குகிறார்கள், இதைச் சாப்பிட்டபின் அவர்களுக்கு என்னவாகும் என்ற சிந்தனையே கிடையாது. சரி, சூடாய் சுக்குக் காப்பியையாவது குடித்து மனசை ஆற்றலாமென்று வாயில் வைத்தால் மண்டி கலங்கி, ஆறிக் குளிர்ந்துபோய் இருந்தது. அடிமண்டிக் காப்பியை இளிச்சவாயர்கள் மூன்று பேர் தலையிலும் கட்டிவிடலாம் என்று கங்கணம் கட்டியே வந்திருக்கிறாள். இங்கு யாரைக் குற்றம் சொல்ல... அடிப்படையான தனி ஒழுக்கமின்மையே எங்கும் நிறைந்திருக்கிறது.

உஷா நிவாஸின் முதலாளி யாரோ தஞ்சாவூர்க்காரராம், இளமையிலேயே அவரும் இறந்து போனதால் லாட்ஜின் பொறுப்பை குடும்பத்தார் எதிரே இருந்த மணி நிவாஸின் முதலாளியும், நண்பருமான சின்னமணி நாடாரிடம் கொடுத்திருந்தார்கள். வாரம் தவறாமல் மணி நிவாஸை மேற்பார்வையிட்டு குறை தீர்க்கும் சின்னமணி உஷா நிவாஸ் பக்கம் திரும்புவதே இல்லை. உஷா நிவாஸின் முதலாளி உயிரோடு இருந்த காலத்தில் வாரத்துக்கு இரு முறை படுக்கை விரிப்பும், தலையணை உறையும் மாற்றுவார்களாம், இன்றோ நிலைமை தலைகீழ். கணபதிக்கோ உஷா நிவாஸ் சம்பளத்தில் மணி நிவாஸிலும் மேலாளர் பொறுப்பு. சிறிய சம்பளத்தில் குடும்பம் நடத்தத் தடுமாறிய கணபதி மாலையில் சப்பாத்தி சுட்டு விற்க ஆரம்பித்திருந்தார். காய்ந்த தாமரை இலைத் தட்டில் நாலு சப்பாத்திகளும் உருளைக்கிழங்கு கூட்டும் வைத்து, உடம்பெல்லாம் வியர்க்க விறுவிறுக்க, பானை வயிற்றைத் தள்ளிக்கொண்டு, மாடிப்படி ஏறி வந்து ஒவ்வொரு அறையாக அவர் பரிமாறுவது சிரிப்பை வரவழைத்தாலும் சிந்திக்க வைத்தது. என் போல கணக்கு வைத்து சாப்பிடுபவர்கள் வாடகை கொடுப்பதில் முன்னப்பின்ன தாமதமானாலும் புன்சிரிப்போடு "சீக்கிரம் குடுத்திருங்க சார்" என்றவாறே நழுவுவார்.

பக்கத்து அறைத் தோழன் பழநி, வெளிநாட்டு வேலை ஆசையில் இங்கு செய்த நல்ல வேலையை விட்டு விட்டு, பணம் கட்டி வெளிநாடு போய், அங்கு ஏமாந்து அடி உதை வாங்கிய கையோடு சென்னை திரும்பியிருந்தான், ஏற்கனவே இங்கு இருந்தபோது லாட்ஜ் மேலாளர் கணபதிக்கோ பழநியைக் கண்டாலே ஆகாது. ஆனால் பரட்டைத் தலையும், தாடியுமாய் கையில் சல்லிக் காசில்லாமல் வந்து நின்ற பழநியை பார்த்ததும் இருக்க அறை கொடுத்து அவனுக்கு வேலை கிடைக்கும் வரை வாடகையே இல்லாமல் லாட்ஜில் வைத்திருந்ததோடு மட்டுமல்லாது சாப்பாடும் கொடுத்து உபசரித்தார் கணபதி. சுப்ரமணியன் அண்ணனோ தனியார் நிறுவனமொன்றில் ஓட்டுநராக இருந்தார். சம்பளம் வந்த கையோடு பழநிக்கு ஒரு பேனாவும், ஒரு கட்டு பேப்பரும், கவரும், ஸ்டாம்பும் வாங்கி வந்து கொடுத்து விடுவார். தோளோடு தோளாக உரசிய இந்தச் சாமானியர்களின் சிநேகத்தை கண் எதிரே பார்த்த எனக்கு இவர்களெல்லாம் மனித உருவில் நடமாடும் தெய்வங்களாகவே தெரிகிறார்கள்.

தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலுமிருந்து வந்து அரசுத் துறைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலை பார்த்த பலர் இங்கு இருந்தார்கள். சி.ஏ. படிப்புக்காக வடமாநிலங்களிலுமிருந்து இங்கு வந்து தங்கிப் படித்தவர்கள் ஏராளம். எத்தனையோ மொழி பேசுபவர்களும் மாநிலத்தவரும் ஒரே இடத்தில் தங்கியிருந்தாலும் ஒரு சிலரைத்தான் கவனிக்கத் தோன்றுகிறது அப்படியான என் கவனிப்பு கேமிராவில் சிக்கியவர்தான் ஜெகநாதன் அய்யர். கட்டுமானம் சம்பந்தமான அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்று பத்து வருடமாகியிருந்தது. தற்போது ஒரு தனியார் நிறுவனத்தில் பணி. ஆனாலும் எறும்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“பகவான் கொடுத்த வாழ்க்க இதுதாம். மாதத்துக்கு ஒரு முறையாவது அவளப் பாக்க முடியிதே. என்ன, எனக்கு முன்னால அவள எடுத்துக்கணும். அதுதாம் இப்ப என்னோட பிரார்த்தன. அரசங்க வேலையில இருந்தப்ப காசு, பணமின்னு நாயா பேயா அலையல, பிள்ளைகள முடிஞ்ச அளவு படிக்க வச்சம், அதுனால மெட்ராசுல ஒரு வீடு கட்ட முடியல்ல.''**

சுறுசுறுப்பு. தனது திட்டமிடல் தாண்டி ஒரு துரும்பைக்கூட அவர் அசைத்து நான் பார்த்ததில்லை. இரண்டு மாதங்கள் கழித்து தான் பங்கேற்கப் போகும் ஒரு நிகழ்வு ஒன்றிற்காக இன்றே முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் மூழ்கியிருப்பார். லாட்ஜிலிருந்து இத்தனை மணிக்கு இறங்கினால், பத்து நிமிட நடையில் பேருந்து நிறுத்தம், அடுத்த நாற்பத்தி ஐந்து நிமிடத்தில் வேளச்சேரி, இறங்கி நடந்து ஐந்து நிமிட நடையில் அலுவலகம் என எல்லா விசயத்திலும் கணக்கு. மணமான பிள்ளைகள் சென்னையிலேயே பக்கத்து தெருவிலேயே இருந்தாலும் காய்ச்சல், மண்டையிடியென ஒரு நாளும் அவர்களிடம் சென்று ராத் தங்கியது இல்லை. ஞாயிற்றுக் கிழமைகளில் மூத்தவன், இளையவன் என மகன்களுக்கு நேரம் குறித்துக் கொடுத்து உஷா நிவாஸிலேயே அவர்களைச் சந்திப்பார். மாதமொரு முறை தவறாமல் தஞ்சாவூர் பக்கமிருக்கும் சூரக்கோட்டைக்கு மனைவியைப் பார்க்கச் செல்வார். மாத தவணைக்கு மனைவிக்கான மருந்து வகைகளும் தவறாமல் வாங்கி வைத்திருப்பார். பெட்டி அடுக்கும் படலம், கிளம்பும் நாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்னாலிருந்தே நடக்கும்.

“ஏன் சார், வயசான காலத்துல துணைக்கி துணையா ஓங்க மனைவியோட இருக்காம இங்க லாட்ஜில வந்து கஷ்டப்படுறீங்க.''

“பகவான் கொடுத்த வாழ்க்க இதுதாம். மாதத்துக்கு ஒரு முறையாவது அவளப் பாக்க முடியிதே. என்ன, எனக்கு முன்னால அவள எடுத்துக்கணும். அதுதாம் இப்ப என்னோட பிரார்த்தன. அரசங்க வேலையில இருந்தப்ப காசு, பணமின்னு நாயா பேயா அலையல, பிள்ளைகள முடிஞ்ச அளவு படிக்க வச்சம், அதுனால மெட்ராசுல ஒரு வீடு கட்ட முடியல்ல.''

“உங்க பசங்க கூடயாவது...''

“பிள்ளைகளுக்குத் தொல்லையா இருக்க வேண்டாமின்னு இருக்கம்.''

நாள்தோறும் செய்தித்தாள்களில் வரும் படிப்பு, வேலைவாய்ப்பு சம்பந்தமான விளம்பரங்களை வெட்டிச் சேகரித்து, சந்திக்கும் வேளைகளில் தன் பேரப் பிள்ளைகளிடம் கொடுத்து மகிழ்வார். ஒருநாள் மாலையில் அவரது மூத்த மகன், தன் சகோதரி மாரடைப்பில் இறந்து போனதாக துக்கச் செய்தி கொண்டு வந்திருந்தார். சென்னை ஐஐடியில் நல்ல வேலையிலிருந்த அந்த மகளென்றால் ஜெகநாதனுக்கு கொள்ளை பிரியம், ஆனாலும் மனிதன் அசைந்து கொடுத்தாரில்லை. அந்த மாலை வேளையிலும் தான் வழக்கமாய்ச் செய்யும் அத்தனை பணிகளையும் முடித்த பிறகே கிளம்பிப் போனார். வாழ்வின் எந்த நிலையிலும் நிதானத்தை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கு ஜெகநாதன் ஒரு உதாரணம்.

எனக்கு, என்ன வேண்டுமென்றே தெளிவாய் தெரியாமலிருந்த காலம் அது. ஆனால், எக்காரணம் கொண்டும் வீட்டில் மட்டும் காசு வாங்கக் கூடாது என்பதில் தீர்மானமாய் இருந்தேன். மாத அறை வாடகையும், சாப்பாடு கைச் செலவுமாய் மாதம் நானூறு ரூபாயைத் தாண்டியது. செலவுகளை எப்படிக் குறைப்பது என்ற எண்ணமே எப்போதும் மேலோங்கும். காலையில் நாயர் கடையில் ஒரு கப் சாயாவும் பன்னும், மதியம் முனியாண்டி விலாஸில் குடல்கறி சாப்பாடு. மாலையில் வேலைகள் முடிந்த பிறகு பொடி நடையாக நடந்து மூக்கைப் பொத்தியபடியே கூவம் ஆற்றைக் கடந்தால் பச்சையப்பாவின் பின்புறம் மாடியில் சுப்ரபாத். பத்து ரூபாய்க்கு சுத்தமான சைவ சாப்பாடு. வெண்டைக்காய் சாம்பாரும், உருளைக்கிழங்கு பொறியலும், வெள்ளரிக்காய் பச்சடியும், காணத் துவைலும், வடுமாங்காயும் இன்று நினைத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்கில் எச்சில் ஊறிவிடுகிறது. இன்றும் வேலை நிமித்தம் மதிய வேளைகளில் பச்சையப்பா கல்லூரியைக் கடக்க நேர்ந்தால் சுப்ரபாத்தில் நுழைந்து ஒரு கை பார்த்துவிட்டுத்தான் நகர்கிறேன்.

விடியப் பொறுக்காமல் லாட்ஜிலிருந்து இறங்கி பொடி நடையாக நடந்து பொன்னியம்மன் கோவிலெதிரே உள்ள சந்தில் திரும்பி நடந்தால் ரயில் பாதையருகே கார்காத்தார் இல்லம் வந்துவிடும். அங்கிருந்து இடதுபுறம் திரும்பி ரயில் பாதையோடே நடந்தால் கூப்பிடு தூரத்தில் நுங்கம்பாக்கம் ரயில் நிலையம். காலை மாலை தவிர மற்ற வேளைகளில் பெரும்பாலும் வெறிச்சோடியே கிடக்கும். காலையில் விதவிதமான உடைகளில் ஆணும், பெண்ணும் அரக்க பரக்க ஓடோடி வந்து வேலைத் தளங்களுக்குச் செல்லும் ரயிலுக்காக காத்து நிற்பார்கள். பம்பாய் ரயில் நிலையங்களோடு சென்னையை ஒப்பிட்டால் கூட்டம் அப்போதெல்லாம் இங்கு பெரிதாக இல்லை. என்னைத் தவிர இங்கு எல்லோருமே ஏதோ அவரவர்க்கு தகுந்த வேலைகளைச் செய்துகொண்டிருந்தது போலவும், நான் மட்டும் வேலையில்லாமல் பூமிக்கு பாரமாய் சுற்றிக்கொண்டிருப்பது போலவும் என் மனசு பாடாய்ப் படுத்தும். காத்துக் கிடப்பது பெரும் சுமை, எப்போதும் ஏதாவது ஒன்றிற்காக காத்துக் கிடப்பதே நமக்கு வாடிக்கையாகிவிட்டது. வேலைக்காக, சம்பள நாளுக்காக, விடுமுறைக்காக, மனைவிக்காக, புகழுக்காக...

உன் மாமன் நட்ட யுத்த மரத்தில்
நியுட்ரான் காய்கள் குண்டு குண்டாய்
பழுத்துத் தொங்க ஒரு மெல்லிய
காற்றடிப்பில் கீழே விழும் சமயம்
பார்த்து மரத்தடி நிழலில்
கிளி ஜோசியம்
பார்த்துக் கொண்டிருக்கிறாய் நீ...

என்ற புவியரசுவின் புதுக் கவிதையை எனக்கு அறிமுகம் செய்து வைத்த யாழ்ப்பாணம் வசந்த் உஷா நிவாஸில், என் அறைத் தோழனாய் இருந்தான். பச்சையப்பாவில் இளங்கலை தமிழ் பயின்றபடியிருந்தான்.

"சேத்துப்பட்டின் கரைகளெங்கும் பச்சையப்பா
சேர்ந்ததொரு கல்லூரியும் பச்சையப்பா"

என்று அவன் எழுதிக் காட்டியபோது புதுக் கவிதை என்றால் என்னவென்றே தெரியாமலிருந்தது. அவனோடு பழகிய நட்பின் தாக்கத்தில்தான் ஆமந்துறையில் அந்தச் சமயத்தில் ஆத்தாவுக்கு தொல்லை கொடுத்த அய்யாவின் தம்பிக்கு "புலிகள் புழுக்களோடு மோதுவதில்லை பெரியவரே..." என்று கடிதம் எழுதியதாக ஞாபகம்.

"விநாயகன் பம்பாய் மகாலட்சுமியிடம்
கடன் வாங்கி வந்து கோவையில்
பஞ்சு வியாபாரம் செய்கிறானாம்
ஒரு குண்டு குஜராத்திப் பெண்ணைக்
கட்டிக் கொண்டு..."

இது போன்ற கவிஞர் புவியரசின் கவிதைகளை வசந்த், எனக்கு படித்துக் காட்ட அங்கேயே இலக்கியத்தோடு எனக்கு தொடர்பு ஏற்பட்டுவிட்டது என்று நினைக்கிறேன். ஆனால் அந்தத் தொடர்பின் தாக்கம் புரிய இத்தனை காலமாகியிருக்கிறது. கடந்த வருடம் கோவையில் விஜயா பதிப்பகத்தின் சார்பில் 'கொற்கை' நாவலுக்காக நடந்த விமரிசனக் கூட்டத்தில் கவிஞர் புவியரசோடு மேடையில் அமர்ந்திருந்த அனுபவம் வார்த்தையால் விவரிக்க முடியாத பெரும்பேறு. புவியரசுதான் பக்கத்தில் அமர்ந்திருக்கிறார் என்று தெரியாமல் நான் முதன் முதலாக ரசித்த இந்தக் கவிதைகளைப் பற்றி மேடையில் சொல்ல, எழுந்து வந்து என் உச்சி முகர்ந்தார் கவிஞர் புவியரசு. தெய்வங்களும் கவிஞனின் எள்ளல் உணர்வுக்கு உட்பட்டவர்களே, இதுவும் ஒரு வகையான பக்குவம். இந்தப் பக்குவம்தான் பாரத மண்ணின் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளும் அதிபக்குவம் என்று இப்போது சொல்லத் தோன்றுகிறது.

உஷா நிவாஸில் ஏற்பட்ட மற்றொரு கிடைத்தற்கரிய நட்புதான் இன்று சுகதேவ் என்று அறியப்படுகிற இளையபெருமாள். முறுக்கிவிட்ட மீசையும் கருத்துத் தெறிக்கும் கவிதையுமாய் பவனிவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் என் மனமேடையில் அமர்ந்து கோலேச்சும் மகாகவி பாரதியை எனக்கு உளப்பூர்வமாய் அறிமுகப்படுத்தியவர். "அவன் கந்தகத்தை கருக்கொண்டிருந்த கற்பூரச் சிமிழ், தமிழர்களின் அறம் பாட வந்த மறவன்'' என்று அவர் அன்று சொன்ன வரிகள் இன்னும் என் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன. தினமணியில் பணியிலிருந்த அவர் பக்கத்திலேயே கார்காத்தார் இல்லத்தில் தங்கியிருந்தார். விடுமுறை நாட்களில் உஷா நிவாஸ் வந்து நண்பர்களைச் சந்திப்பதை வாடிக்கையாக்கியிருந்தார். பல்வேறு வகையான, சமூக, பொருளாதார, இலக்கியக் கருத்தாடல்கள், சித்தாந்தங்களைப் புரட்டிப் போட்ட ஆளுமைகள் குறித்த விவாதங்கள் என ஞாயிற்றுக்கிழமை மாலைப் பொழுது மனதிற்கு உவகையூட்டுவதாய் இருந்தன.

கோடம்பாக்கம் பவர்ஹவுஸ் பக்கமிருந்த துர்கா டுடோரியல்ஸில் எனக்கு முதன் முதலாக நூற்றியெழுபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் ஆங்கில வகுப்பெடுக்கும் வேலை கிடைத்திருந்தது. லாட்ஜிலிருந்து மீனாட்சி கல்லூரி வரை நடை, பின் அங்கிருந்து பவர் ஹவுஸ் வரை பேருந்து. பயணக் கட்டணம் ஐம்பது பைசாதான். துர்கா போகும் வழியில் மாநகராட்சி பள்ளியருகே நெல்லை ஸ்வீட்ஸ், வியாழக்கிழமை மாலையானால் சுடச் சுட திருநெல்வேலி அல்வா செய்து, வெளியே தெரியுமாறு தட்டில் வைப்பார்கள். அந்த இடத்தைக் கடக்கும் போதெல்லாம் கண்கள் அந்த அல்வாத் தட்டைச் சுற்றி வட்டமிடுவதை தவிர்க்க முடியவில்லை. என்ன ஆனாலும் பரவாயில்லையென ஒரு வியாழக்கிழமை கடையுள்ளே போய் நூறு அல்வா என்று கேட்டேன் பின் என்ன, நடராசாதான்.

வாழ்வின் யதார்த்தங்கள் புரிந்த புண்ணிய இடம் உஷா நிவாஸ். பசி என்றால் என்னவென்று இங்குதான் புரிந்தது. நான் வேலை தேடி அலைகிறேன் என்பதை பக்கத்திலேயே இருந்து பார்த்ததால் ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியம் ஹிண்டுவில் வந்திருந்த பெசண்ட் ராச் கன்சல்டன்சியின் விளம்பரத்தை எடுத்து வந்து என்னிடம் காட்டினார் அண்ணன் இன்னோசெண்ட். திங்கள் கிழமை காலையிலேயே அந்த விளம்பரத்தை எடுத்துக் கொண்டு அங்கு நான் ஆஜர். அந்தக் காலத்தில் மிகவும் பிரபலமாய் இருந்த கன்சல்டன்சி அது. நிர்வாக இயக்குனராய் இருந்த டாக்டர் பெசண்ட் ராச் ஹாவர்ட் பல்கலைக் கழகத்தில் படித்தவர். பல்வேறு தனியார் நிறுவனங்களில் கௌரவ இயக்குனராகவும் இருந்தார். சிவில் சர்விஸ் படிப்புக்காக அஞ்சல் வழிக் கல்விமுறை ஆரம்பித்திருந்தார்கள். ஒரு குழுவாய் அமர்ந்து விதவிதமாய் கேள்விகள் கேட்டார்கள், எதற்கும் சளைக்காமல் நான் பதில் சொன்ன அந்த நாளை இன்று நினைத்தாலும் ஆச்சரியமே மேலிடுகிறது. குழுவின் தலைவியாய் சுமா ராவ். ஐஐஎம்மில் அப்போதே எம்.பி.ஏ. படிப்பு. கோதுமை நிறத்தில், அரேபியக் குதிரையைப் போல் தெம்மாந்து நடக்கும் சுமா, என்னைக் கண்ட மாத்திரத்திலேயே பதுமையாய்ச் சிரித்தாள். என்னருகே நெருங்கிக் குனிந்துசொன்னாள்,

"your answers are like bullets"

பெசண்ட் ராச்சில் பணியிலிருந்த காலத்தில் பழகியவர்களில் இரண்டு தோழியர் இன்னும் என் நினவில் இருக்கிறார்கள். தேவதை போலொரு மயிலாப்பூர் மாமி, நான் அவளிடம் வலிந்து போய் "I just call to say I love you" என்று பாடி நின்றாலும் ஒரு மீசைக்கார சி.ஏ.விடம் எப்போதும் வழிந்தபடியே இருப்பாள். மற்றொருத்தி தெலுங்குக்காரி, யாரிடமும் அவள் அதிர்ந்து பேசி நான் பார்த்ததேயில்லை. கவிதை சொல்லும் கண்கள் அவளுக்கு, எனக்காக மதியச் சாப்பாடெல்லாம் அக்கறையோடு கட்டிக்கொண்டு வருவாள். பெண்ணுக்கேயான நளினத்தை நான் முதலில் அவளிடம்தான் கண்டேன்.

சாப்பாட்டுக்கே வழிதெரியாமல் தவித்த எனக்கு பெசண்ட் ராச் கன்சல்டன்சியில் கிடைத்த ஆயிரம் ரூபாய் மாத வருமானம் பெரும் வரப்பிரசாதமாய் மாறியது. இப்போது நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் மாம்பலம் செல்லும் ரயிலுக்காக நானும் காத்து நிற்கிறேன் எனக்கான சிறிய உலகை வென்றுவிட்ட பெருமிதத்தோடு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடைவெளியின் இருண்மைகள்

இன்று ஏனோ பெரிய பிரளயம் நடந்தது போல உடம்பு அசந்திருந்தது ராதிகாவிற்கு. இயற்கை உபாதையின் அவசர அழைப்பில் படுக்கையை விட்டு எழும்போது சற்றே தடுமாறியது. நல்லவேளை படுக்கையறையுடன் ஒட்டிய கழிவறை அது. சுவரில் நேராக மாட்டியிருந்த கடிகாரத்தை பார்த்தாள். மணி ஏழு என்றது. 'என்னாச்சு எனக்கு...?' தொட்டுப்பார்த்துக்கொண்டாள் தன் உடலை. 'கொதிக்கிறாப்பல இருக்கு...' கண்கள் சுய இரக்கத்தில் ஈரமாயின. கணவனுக்கு சொல்ல வேண்டும் என்று தோன்றியது. படுக்கையின் அருகிலிருந்த செல்போனை எடுத்தாள். உயிரற்று கிடந்தது. 'அட.... நேத்து யூமா மெசேஜ் பூஸ்டர் போட மறந்துட்டேன்னு என்னோட சிம்மை கழட்டிட்டு போனாள்ல..' மகள் யூமாவின் அறையை எட்டிப் பார்த்தாள். கதவு சாத்தியிருந்தது. இன்னும் எழுந்துக் கொள்ளவில்லை. 'எப்போ தூங்குனாளோ..?' நேற்று நடந்த சண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுக்கு வந்தது. ஃபைனல் செமஸ்டர். பாட்டெல்லாம் அப்றம் கேட்டுக்கலாம். படிக்கற நேரத்துல படிடீன்னு கோவமா சொன்னதுக்கு எவ்ளோ சண்டை போடுறா. எதையெதையோ இழுத்து பேசுறா. பாவம்... சின்ன பொண்ணு தானே... சரிக்கு சமமா நானும் அவள நல்லா திட்டிட்டேன்.' சட்டென்று மகளை பார்க்க வேண்டும் போல் தோன்றியது ராதிகாவுக்கு.

நேற்று இரவு யூமா தோழிக்கு அனுப்பிய குறுஞ்செய்தி

எங்கம்மா பழைய மாதிரியே சத்தம் போட ஆரம்பிச்சுட்டாங்க.. ஃபோனும் மெசேஜும்தான் லைஃப்பான்னு நேத்து ஒரே சண்டை. ஃப்ரண்ட்ஸ்ட்ட பேசாம அவங்ககிட்ட பேசணும்மாம். வாய திறந்தாலே அட்வைஸ்தான். அப்றம் எப்டி பேசறதாம்? வெளியில போயி என்ஜாய் பண்ணவும் கூடாது. வீட்ல உட்கார்ந்து பேஸ்புக்ல அரட்டை அடிக்கவும் கூடாதுங்கறாங்க... ஜெயில் மாதிரி இருக்கு. நாண், பீஸாவெல்லாம் அவங்களுக்குப் புடிக்காது. அதுனால நானும் சாப்புட கூடாதாம். யூஸ்லெஸ் சீரியல் பாத்துக்கிட்டு இருப்பாங்க. ஆனா நான் ஹெட்போனை காதுல வச்சாலே கோவப்படுறாங்க. ஏன் பத்து மணிக்கு எழுந்துக்கறேங்கிறாங்க. காலைல சீக்ரமா எழுந்திரிச்சு என்ன செய்றது? எல்லாம் அவங்க இஷ்டந்தானா. அவங்க மட்டும் கடலைமாவு அது இதுன்னு மூஞ்சியில பூசிக்கிறாங்க. ஆனா நான் க்ரீம் போட்டா தப்பாம். ஃபேஸ் தொங்கி போயிடும்னு எனக்கு மட்டும் அட்வைஸ். எங்கப்பாவும் நல்லா டபுள்கேம் பிளே பண்றாரு. அம்மாவுக்கும் சப்போட். எனக்கும் சப்போட் பண்றாங்க. ஐ ஹேட் மம்மி.

ராதிகாவின் கணவன் ரவி வெளி நாட்டிலிருந்து இரண்டு வருடத்திற் கொருமுறை வருவான். வரும்போதெல்லாம் மனைவிக்கும் மகளுக்குமான நெருக்கம் சற்று பொறாமையாகக்கூட இருக்கும் அவனுக்கு. மகளுக்கு ஓரே தாய் என்பது போல தாய்க்கும் ஓரே மகள் தான் என்று அப்பாவிடம் விளையாட்டாக லாஜிக் பேசும் அம்மாவை இறுக்க கட்டிக்கொள்வாள் யூமா. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் எதிர்பாராமல் சற்றே மதிப்பெண் குறைந்துபோக, அதை அம்மாவின் மடிதான் நிறைத்தது. நிச்சயம் பயலாஜி குரூப்தான் எடுத்து படிப்பாள் என்று ஆசிரியர் முதல் அப்பா வரை எதிர்ப்பார்த்திருக்க பொசுக்கென்று வணிகவியல் பிரிவில் சேர்ந்துவிட்டாள் யூமா. அதில் ரவிக்கும் வருத்தம்தான். 'ஆனாலும் நீ ரொம்ப தான் இடம் கொடுக்கற உம்மகளுக்கு...' என்றான் மகளுக்கு அனுசரணையாக இருந்த மனைவியிடம்.

பாடமும் அதை தொடர்ந்த இடை விடாத படிப்பும் இரண்டு வருடங்கள் இருவரையுமே வேறொரு உலகத்திற்கு இட்டுச் சென்று, பிறகு மீட்டு அழைத்து வரும்போது யூமா உள்ளூர் கல்லூரி ஒன்றில் வணிகவியல் பட்டப் படிப்பில் சேர்ந்திருந்தாள். குறைந்து போன பாடத் திட்டங்கள் தோழமைகளைக் கூட்டி வந்தது. அதிகமான சிரிப்பும், கண்ணாடிக்காக ஒதுக்கும் நேரமும் அதிகரித்து போனதில் முகத்தில் அழகும் குறும்பும் கூடிப் போனது. செழித்து விரிந்து கிடந்த தாய்மையின் பூரிப்பிற்குள் யூமாவின் குறும்பு பொருந்தி போகவில்லை. கெஞ்சலும் கொஞ்சலுமாக பால் அருந்தும் நேரம் ரணக்களப்பட்டு

**இருவர் மட்டுமே புழங்கினாலும் கச்சிதமாக இருக்கும் அந்த வீடு மவுனங்களால் பெரிதாகி போனதை தாங்க முடியவில்லை ராதிகாவால். பாதி இரவில், தூங்கும் மகளின் அறைக்குள் சென்று அவளருகில் படுத்துக்கொண்டாள். லேசாகி போன மனம் காலை புத்துணர்ச்சியைக் கூட்டியிருந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும் முன்பு. இப்போதெல்லாம் அந்த பிரச்சனையே இல்லை. பேருக்காக மட்டுமே கட்டியிருந்த தனது அறைக்குள் தனியாக படுத்துக்கொள்ள துவங்கினாள் யூமா. அங்கேயே பாலும் கொடுத்து விட வேண்டுமாயிருக்கிறது. யூமா குளிக்கப் போன பிறகு, அவள் அறையிலிருக்கும் காலி டம்ளர் சந்தோஷம் அளித்தாலும் ஏதோ ஒன்று குறைந்து போலிருக்கும். இருட்டு... பேய்... என்று தன்னை இறுகக் கட்டிக் கொண்டு தூங்கும் மகளைவிட்டு தனித்து படுப்பது இன்னமும் ராதிகாவிற்கு பழக்கப்படவில்லை. ஆசையாகத் தலையை வருடும்போது விலகும் மகளை வினோதமாகப் பார்ப்பாள்.

வழக்கமாக யூமா தோழிகளுக்கு அனுப்பும் குறுஞ்செய்திகளுள் ஒன்று

யெஸ்டர்டே இவ்னிங்தான் பாத்துக் கிட்டோம். அதுக்குள்ள ஐ மிஸ் யூ ய லாட்ப்பா...

பள்ளிக் காலங்களில் யூமாவின் தோழிகள் அனைவரும் இவளுக்கும் பழக்கம். 'உங்கம்மா ரொம்ப ஃபிரண்ட்லீப்பா..' தோழிகளின் கருத்தைப் பெருமையாக சொல்வாள். 'ஆன்ட்டீ... ஆன்ட்டீ...' என்று தோழிகள் மொய்த்துக்கொள்ள எல்லா பெண் பிள்ளைகளையும் உரிமையோடு பெயர் சொல்லி அழைத்து பேசுவாள். இப்போதெல்லாம் முணுமுணுத்த குரலில் யூமா செல்பேசியில் பேசும் போது பெயர்களை விளிக்காமலேயே பேசுகிறாள். அவ்வப்போது வீட்டிற்கு வரும் விருந்தாளிகளிடம் பேசகூட நேரமற்று போனது.

எப்போதும் போல சீயக்காய், செம்பருந்தி, வெந்தயம்... என்ற கூட்டுக் கலவையில் உருவாகும் தலைமுடிக்கான பொடி யூமாவிற்கு கோபத்தை வரவழைக்கிறது இப்போது. 'என்ன ஷாம்பு எழுதட்டும்?" மாதாந்திர மளிகை லிஸ்டை கையில் வைத்துக்கொண்டு கேட்கும் தாயை 'நானே வாங்கிக்கிறேன்' என்று தாயை ஒற்றைச் சொல்லால் சுலபமாகப் புறக் கணிக்க முடிகிறது யூமாவிற்கு. வாராவாரம் எண்ணெய் தடவி ஈறு, பேன் நீக்கும் நேரம் தாய்க்கும் மகளுக்குமான தொடர்பை ஆழப்படுத்தும். மகளின் வெட்டப்பட்ட குட்டை முடி அதற்கும் குட்பை சொல்லி விட்டது. 'வில்லேஜ் டைப்பா இருக்காதம்மா... சுடிதாரை ஏம்மா இவ்ளோ லூசா போடுற? ஷாலை கழுத்தை சுத்தி போடு, இல்லேன்னா நீட்டா காட்டன் புடவை கட்டிக்கம்மா... ஹேண்ட் பேக்கை குறுக்கா மாட்டும்மா. எல்லார்கிட்டயும் நின்னு நின்னு பேசாத... கெத்து காட்டும்மா...' பல கன்டிஷன்களோடு யூமா தாயை தன் கல்லூரிக்கு அழைத்துச் செல்லும்போது அங்கு ராதிகாவின் நடவடிக்கைகள் முழுவதும் செயற்கையோடும் ஒரு வித படபடப்போடுமே இருக்கும்.

முட்டி வரையிலான பாவாடையும் இறுக்கமான மேல் சட்டையுமாக மெசேஜ் பூஸ்டர் போட, கடைக்குச் சென்ற மகளை ஏற இறங்க பார்த்தவளுக்குக் கோபம் தலைக்கேறியது. "கல்யாணம் பண்ற வயசுல இதென்னாடீ கோலம்?" ராதிகாவின் இரைதலை காதில் மாட்டியிருந்த இயர் போன் மறைத்திருந்தது. "பால் பாக்கெட் போட மறந்துட்டான்னு காலையிலேர்ந்து கரடியா கத்தறன்... என்னான்னு கேக்கிறியா... பொறுப்பே கிடையாதுடீ உனக்கு" எஞ்சியிருந்த கோபத்தை வெளிப்படுத்துகையில் மகளின் எதிர் தாக்குதலின் வலிமையில் நிலைக்குலைந்து போனாள். அந்த நாள் முழுவதும் இருவருமே மௌனம் காத்தனர். இருவர் மட்டுமே புழங்கினாலும் கச்சிதமாக இருக்கும் அந்த வீடு மவுனங்களால் பெரிதாகி போனதை தாங்க முடியவில்லை ராதிகாவால். பாதி இரவில், தூங்கும் மகளின் அறைக்குள் சென்று அவளருகில் படுத்துக்கொண்டாள். லேசாகி போன மனம் காலை புத்துணர்ச்சியைக் கூட்டியிருந்தது. சூடான பில்டர் காபியோடு மகளின் அறைக்கு செல்லும்போது மகளின் கோபம் இன்னும் தீராதது ஆச்சர்யமாக இருந்தது.

சென்ற மாதம் யூமா தோழிக்கு அனுப்பிய குறுஞ்செய்திகளுள் ஒன்று.

ஃப்ரீடமே இல்லடீ எனக்கு. காலேஜ் மாதிரி டிரஸ் கோட் வீட்லயும் ஃபாலோ பண்ணுணுமாம். எனக்கு வர்ற மெசேஜ்ஜெல்லாம் படிச்சுட்டு டாட் கிட்ட வேற போட்டுக் குடுக்குறாங்க. யாரும்மா அந்த கிருஷ்...ன்னு டாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டாங்க. கிருஷ்ணவேணிதான் கிருஷ்ன்னு நான் சொல்லவேயில்ல. யாரு அவன்னு மண்டைய உடைச்சுக்கட்டும். இன்னிக்கு ஸ்கைப்ல என் டாடிக்கிட்ட பேச போறதில்ல. ஐ ஹேட் டாட் ஆல்ஸோ.

பெற்றோர்கள் வந்திருந்ததில் தனிமை கொஞ்சம் தொலைந்திருந்தது ராதிகாவுக்கு. மருமகளையும் அழைத்து வந்திருந்தனர். தம்பி மனைவிக்கு எதிரில் தன் வளர்ப்பை வெளிச்சமிட்டுக் காட்டத் துடித்தது பெற்றவளின் மனம். "யூமா... பால் பாக்கெட் எடுத்துட்டு வாடீ. வாஷிங் மெஷினை ஆன் பண்ணி வுடுடீ. மாடியில காயிற துணிய பெரட்டி போட்டுட்டு வாடீ" என சின்ன சின்ன வேலைகளை ஏவினாள். "அம்மா... எனக்குப் படிக்கணும். டிஸ்டர்ப் பண்ணாத" அறைக்குள் நுழைந்து தாளிட்டுக்கொண்டாள் யூமா. "அவுங்கள்லாம் வந்துருக்காங்கள்ல... சும்மான்னாலும் கூட வந்து உட்காருடீ. உன் வயசுல எனக்கெல்லாம் கல்யாணமே ஆயிடுச்சு" என்றாள் கிசுகிசுப்பாக. "நீயெல்லாம் அந்தக் காலம். அதுவும் இதுவும் ஒண்ணா" வெடுக்கென்று பேசிய மகளின் வரிகள் மனதில் ஓடிக்கொண்டேயிருந்தது. கண்ணாடியை பார்த்துக்கொண்டாள். 'நான் அந்தக் காலம்' கண்களில் துளிர்த்த நீரை கண்ணாடி காட்டியது.

இரண்டு மாதங்களுக்கு முன், யூமா தோழிக்கு அனுப்பிய குறுஞ்செய்திகளுள் ஒன்று.

கிராண்ட் பேரண்ட்ஸ் கமிங். எங்கம்மாவோட டார்ச்சர் அதிகமாயிடுச்சு. அவங்க பேரண்ட்ஸ் வந்தா அவங்கதானே அட்டெண்ட் பண்ணுணும். என்னையும் கிளப் பண்றாங்க அதுல. எங்க தாத்தா கொஞ்சம் ஓகே தான். ஆனா அம்மாச்சிதான் ஷோ கேஸ் டால் மாதிரி ட்ரீட் பண்ணுவாங்க. சாப்பிட்டியா, தூங்குனீயா, ஏம்மா முடிய வெட்டிக்கிட்டேன்னு மொக்கை அட்வைஸ் பண்ணுவாங்க. இதுல மாமா வொஃய்ப் வேற... ஹைலி போர். பை தி வே. நேத்து எப்.பில நம்ப குரூப் ஃபோட்டோ அப்லோட் பண்ணிட்டேன். நெறைய லைக்ஸ் வந்துச்சு. ஐ லவ் ஃப்ரண்ட்ஸ்.

யூமா கல்லூரியிலிருந்து திரும்பி வரும் நேரங்களைக் கணக்கு பண்ணிக் கொண்டே காலையில் விட்டுச் சென்ற நேரங்களை நகர்த்துவாள் ராதிகா. யூமாவின் தோழிகள் யூமாவின் வீட்டு திண்ணையில் கால் மணி நேரமாவது ரவுண்ட் கட்டி பேசிவிட்டுதான் நகர்வார்கள். கலகலப்பாக ஓடிக் கொண்டிருக்கும் பேச்சு திடீரென்று நின்றுவிட்டது போலிருக்கும். உன்னிப்பாக காதை தீட்டினாலும் கேட்பதில்லை. கண் ஜாடையிலும் கையசைவிலும் ஏதோ ஒன்று ஓடிக்கொண்டிருக்கும். பீறிட்டு கிளம்பும் சிரிப்பொலியோடு தெறித்து பிரிவார்கள் தோழிகள். அதே சிரிப்போடு உள்ளே நுழையும் மகளிடம் அவளுக்குப் பிடித்தமான ஏதோவொன்றை தட்டில் வைத்து நீட்டுவாள். சில சமயங்களில் 'நீ சாப்டீல்ல?' என்பாள் யூமா. "அப்பா நீ வந்தவொடனே ஸ்கைப்ல வர சொன்னாரு" என்றாள் ஆர்வமாக. "ஏன்... நீ பேசலயா?", "நான் பேசிட்டன்டீ. உன்னைதான் பேச சொன்னாரு" பேருக்கு இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு மடிகணினியை அம்மாவிடம் நீட்டிவிட்டு யூமா நகரும்போது ரவியும் தனிமையை உணரத்தொடங்கினான்.

எப்போதாவது நெருங்கி பேசும் மகளிடம் தனது ஆதங்கத்தைக் கொட்டி விடுவாள். "சமையல்கட்டே தெரியாம எப்டிடீ குடும்பம் பண்ண போறே?" "ஹோட்டல்னு

**மகளின் கோப முகத்தைச் சட்டை செய்யாமல் சொல்ல வந்ததை சொல்லியே ஆகவேண்டும் என்ற நோக்கில் பேசினாள். "அதெல்லாம் நான் பாத்துக்கறன். ஏம்மா... உனக்கு பிரசன்ட்டுன்னா என்னான்னே தெரியாதா? எப்பப் பாரு ஃப்யூச்சர் பத்தியேதான் பேசுவே" பேச்சை மாற்றிவிட்டு நகர்வாள் யூமா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணு இருக்கு. சமைக்கறதுக்கு மெயிட் வைக்கிற பழக்கம் உங்க வீட்ல இல்ல. அதான் தெரியல உனக்கு" என்பாள் யூமா பதிலுக்கு. "எத்தன நாளுடீ வெளியில வாங்கி சாப்டறது. உடம்புக்கு ஒத்துக்குமா?", "அதான் சமைக்கறதுக்கு ஆள் போட்டுக்குவேன்னு சொன்னேன்ல", "அந்த ஆளுக்கு உடம்பே வராதாடீ. அவ படுத்துக்கிட்டான்னா வேணுங்கறத செஞ்சுக்கணுமில்ல...கொஞ்சமாவது வீட்டு வேலை கத்துக்கிலாமில்ல... நான் உனக்கு செய்ற மாதிரி நீ உன் குழந்தைங்களுக்குச் செய்யமாட்டீயா?" மகளின் கோப முகத்தைச் சட்டை செய்யாமல் சொல்ல வந்ததை சொல்லியே ஆகவேண்டும் என்ற நோக்கில் பேசினாள். "அதெல்லாம் நான் பாத்துக்கறன். ஏம்மா... உனக்கு பிரசன்ட்டுன்னா என்னான்னே தெரியாதா? எப்பப் பாரு ஃப்யூச்சர் பத்தியேதான் பேசுவே" பேச்சை மாற்றிவிட்டு நகர்வாள் யூமா.

அலைபேசியின் 'அனுப்பப்பட்ட குறுஞ் செய்தி விவரங்களில்' கிடந்த, இரண்டு வாரங்களுக்கு முன் யூமா தோழிக்கு அனுப்பிய குறுஞ்செய்தி.

எங்கம்மா பக்கா நான்பிராக்டிகல். கிச்சன் வொர்க் செய்ய கத்துக்குணுமாம். என்னால முடியாதுன்னுட்டேன். நம்ப ஃப்ரண்ட்ஸ் சர்க்கிள்ல யாருக்கும் சமைக்க தெரியாதுதானே. நான் சொன்னா நம்பமாட்டேங்கிறாங்க. எங்கம்மாவுக்கு அவங்க அம்மாதான் இப்டியெல்லாம் சொல்லித்தராங்க. எனக்கு வரவர வீட்டில இருக்கவே பிடிக்கல. ஐ ஹேட் ஆல் தீஸ்...

கவலையாக இருந்தது ராதிகாவுக்கு. 'இப்டி ஒரு பொண்ண வளர்த்து, எங்க தலையில கட்டிட்டாங்களேன்னு போற வீட்ல சொல்ல போறாங்க. அந்த மனுசன் வெளிநாட்டுல சம்பாதிச்சு நோட்டு நோட்டா அனுப்பி வுட்டுருக்காரு. இந்தம்மா நகையும் நட்டுமா மினுக்கிக்கிட்டு, சீரியலை பாத்துக்கிட்டு காலத்தை ஓட்டியிருக்கும் போலருக்குன்னு என்னைதான் போட்டு மெல்லுவாங்க' கணவனிடம் புலம்பிவிடுவாள். 'சின்ன பொண்ணுதான... எல்லாம் கத்துக்குவா' என்பான் ரவியும் ஆறுதலாக. இருந்தாலும் தாயிடம் ஒருபாட்டம் புலம்பினால்தான் தேவலை என்றிருக்கும் ராதிகாவுக்கு. மகளுக்கு கேட்டுவிடாத சன்னமாக குரலில் புலம்பி தள்ளிவிடுவாள் தாயிடம். தினமும் பேசினாலும் அம்மாவிடம் பேச அவளுக்கு நிறையவே விஷயங்கள் இருக்கும்.

உறவினர்களின் கல்யாணம், காட்சி... என்று எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் யூமா வர விரும்புவதில்லை. தோழிகளின் வீட்டு சுபநிகழ்வுகளில் கலந்துகொள்ள அழகு குவியலாக செல்லும் மகளை, உறவினர்கள் மத்தியில் காண்பிக்க எழும் ஆசையை மடக்கி உள்ளேயே செலுத்திக்கொள்வாள். ஒரு நாள் கணவனிடம் தன் ஆதங்கத்தை கொட்டிகொண்டிருந்தாள் ராதிகா. "நாலு எடத்துக்குப் போயிட்டு வந்தாதான் இவளை பத்தி நாலு பேருக்கு தெரியவரும். பொண்ணு கேட்கணும்னு தோணும்..." அதற்குள் யூமா வந்துவிடவே "சரி... சரி... பாப்பா வர்றா... நான் அவளை பத்தி பேசுனதா காட்டிக்காதீங்க" மகளிடம் செல்பேசியை நீட்டினாள். தன்னை பற்றி புகாராகவே சொல்லும் அம்மா இந்த முறை எதுவும் சொல்லாதது யூமாவுக்கு சந்தோஷமாக இருந்தது. புன்னகைத்தாள். மகளின் இந்தப் புன்னகையை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு. தனக்கும் மகளுக்கும் இடையே விழுந்த கனமான சுவரை தகர்த்து எறிந்து மீண்டும் மகளின் அன்பில் திளைக்கும் ஆசை கழுத்து வரை முட்டி நின்றது.

விடுமுறை தினங்களில் மதிய நேரத்திற்கு எழுந்து வரும் மகளை சிரிப்போடு வரவேற்க கற்றுக்கொண்டாள். நாளும் கிழமைகளில் வியர்க்க விறுவிறுக்க சமையற்கட்டில் அல்லாடும்போது பேஸ் புக்கில் லைக் போடும் மகளை லைக் பண்ண தெரிந்துகொண்டாள். வீடு நிறைய விருந்தாளிகள் இருக்கும்போது பேருக்கு ஒரு வார்த்தை பேசிவிட்டு காதுகளில் செல்பேசியை ஒட்ட வைக்கும் மகளை அப்படியே ஏற்றுக்கொண்டாள். விருந்தினர்களோடு விருந்தினராக மகளையும் உட்கார வைத்து சாப்பிட வைப்பதில் மகிழ்ச்சிக்கொண்டாள். கடைக்குச் சென்று அலுப்புடன் வீடு திரும்பும்போது, கதவுகளை தாளிட மறந்து அறையில் அடித்து போட்டாற் போல் உறங்கும் மகளை காபியுடன் எழுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறை விளக்கை ஒளிர விட்டு இருளை விரட்ட முடிகிறது அவளால். ஒருமுறை யூமாவின் தோழிகள் இருவரை ஹோட்டல் ஒன்றில் சந்தித்ததில் ஆர்வக்கோளாறுடன் பேச முயன்றவளுக்கு வார்த்தைகளை அடக்கிகொள்ள தெரிந்திருக்கிறது மகளின் கண்ணசைவை புரிந்துகொண்டு. இப்போது யூமாவிற்கும் அம்மாவிடம் பேச சிறிதொரு தகவல்கள் இருந்தன.

சென்ற வாரம் யூமா தோழிக்கு அனுப்பிய குறுஞ்செய்தி.

எங்கம்மா இப்ப ஃபார் பெட்டர்டீ. ஷீ அன்டர்ஸ்டாண்ட் மீ வெல். ஐ ஆல்ஸோ... ஐ லவ் மை மாம்.

அடக்கி வைத்திருந்த உணர்வுகள் ஏதோ ஒரு கணத்தில் பீறிட்டு எழுந்துவிட நேற்று இரவு மகளுக்கும் அவளுக்கும் சண்டையாகிப் போனது. யூமாவின் மூடிய அறைக் கதவையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவளுக்கு கணவனிடமிருந்து போன் வந்தது ஆறுதலாக இருந்தது. அதற்கு தகுந்தாற்போல ரவியும் உற்சாகமாக பேசினான். "ராது... என் தோஸ்து கண்ணன் இருக்கான்ல்ல... "என் பையனுக்கு யூமாவ தருவியான்னு" நேத்து பொசுக்குன்னு கேட்டுட்டான்ப்பா. ஆடி போய்ட்டேன். அவன் பையன் என்னாங்கற... கார்டியாலஜிஸ்ட். அவனும் யூஎஸ்ல தான் பிராக்டிஸ் பண்றான். தமிழ்நாட்லேர்ந்து பொண்ணு கிடைச்சா பரவாயில்லேன்னு நினைக்கிறாங்க. அடுத்த மாசம் அவங்க இந்தியா வர்றாங்களாம். அப்டியே ஒரு விசிட் நம்ம வீட்டுக்கும் வர்றேன்னு சொல்லியிருக்காங்க". மகிழ்ச்சி அம்மா வீட்டிற்கும் தொற்றிக்கொண்டதில் அவளின் பெற்றோர்கள் அடுத்த நாளே கிளம்பி வந்துவிட்டார்கள்.

"உம்மவள அடுப்படிக்குள்ளயே நொழைய வுடாம வச்சிருக்க. சமாளிச்சுக்குவாளா?" என்றாள் அம்மா. "அவங்கள்ளாம் பெரிய இடம்மா. எல்லாத்துக்கும் ஆள் போட்டுருப்பாங்க" சமாளித்தாள் ராதிகா. "அதுக்குன்னு? குடும்பம்ன்னா சமையக்கட்டு மட்டுந்தானா? எவ்ளோ விஷயம் இருக்கு. புரிஞ்சுக்குவாளாடீ பாப்பா". "படிச்ச பொண்ணுக்குப் புரியாம போவுமா" என்றாள் ராதிகா புரியாமலேயே.

"ஏன்டீ... மாப்ள பெரிய இடம்ங்கிற. அவங்க அந்தஸ்துக்குத் தகுந்தாப்பல கடைபொம்மைகணக்கா, போக வர இருக்காப்பல பொண்ணு தேடாம, நம்ம வீட்ல பொண்ணு கேக்குறாங்கன்னா என்னாடீ அர்த்தம்"

"நம்ப ஊர்ல வளர்ந்த மிடில் கிளாஸ் பொண்ணுதான் குடும்பத்துக்கு ஒத்து வரும்னு நினைச்சுருப்பாங்க" அம்மாவின் சந்தேகத்திற்கு விடையாகத் தன்னை மீறி வந்த வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டாள் ராதிகா. "சரிம்மா... பாப்பா வந்துடுவா... அப்றம் பேசலாம்".

"என்னாடீ. பாப்பா வந்துடுவா... வந்துடுவான்னு பயங்காட்டுறீயா. ஆத்தர அவசரத்துக்கு சுடுதண்ணி வைக்கக்கூட கத்துக் குடுக்காம என்ன புள்ள வளர்த்திருக்க. குச்சியால சாப்படறதும், குட்டை பாவாடை போட்டுக்கறதும், டர்புர்னு வண்டியில அலயறதுமா இருந்தா, போற வீட்ல மணத்துக்குவாங்கடீ... கம்யூட்டரு, செல்லு, இங்கிலிசு பாட்டுன்னு இப்டியே காலந்தள்ளிடுவாளாம்மா? பேசாம உன் புருசன வரச்சொல்லி நாலு புத்திமதி சொல்ல சொல்லு".

மூக்கும் கண்களும் விடைக்க, தன்னிடம் வெகு இயல்பாகக் கோபப்பட்டு பேசும் தாயைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள் ராதிகா.

பின்னினைப்பு: "அடுத்த மாசம் இண்டியா போறதுக்கு எல்லா ஏற்பாடும் செஞ்சாச்சுல்ல. நம்ம ஹரீஷ்க்கு ஆஞ்சியோ, பைபாஸ், ஹார்ட் அட்டாக், பேஸ்மேக்கர்... இதைத் தாண்டி வேற எதுவும் தெரியாது. யூமா வந்துதான் குடும்பக்காரனா மாத்தணும் அவனை..." ஒரு கையில் வானிடி பேக்குடன் கார் சாவியை மற்றொரு கையில் கோர்த்து எடுத்துக்கொண்டே கணவன் கண்ணனிடம் சொல்லிக்கொண்டிருந்தாள் அவரின் மனைவி. "அதுக்குத்தானே ரவியோட பொண்ணைக் கேட்டுருக்கோம்... மிடில் கிளாஸ் பிராட்அப்... நல்லாயிருக்கும்..." கட்ஷுவில் கால்களைச் சொருகிக்கொண்டு கிளம்பியவளின் காதுகளில் கணவனின் பேச்சு விழவில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மெட்ராஸ்
## ஆதித் தமிழர்களின் அப்பட்டமான வாழ்க்கைப் பதிவு

சமீபத்தில் வந்த படங்களில் தமிழ் வாழ்க்கையை அப்படியே பதிவு செய்த படமாக 'மெட்ராஸ்' படத்தைச் சொல்லலாம். பா. இரஞ்சித்தின் அட்டக்கத்திப் படம் சென்னைப் புறநகர் கிராமத்தின் சித்திரத்தைச் சொன்னது. இந்தப் படம் சென்னையின் பூர்வகுடிகளான வடசென்னை மக்களின் வாழ்வைப் படம்பிடிக்கிறது. இயல்பான வாழ்வின் இடையில் ஒரு ஒளிப்பதிவுக் கருவியை வைத்துவிட்டு கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அதை திரும்ப ஓடவிட்டுப் பார்ப்பதைப் போன்ற ஓர் உணர்வை படத்தின் முற்பகுதித் தருகிறது. பிற்பகுதி ஒரு வணிகச் சினிமாவுக்கான வரைவுக்குள் முற்பகுதி எங்கு வந்து முடியவேண்டுமோ அங்கு வந்து அற்புதமாக முடிந்திருக்கிறது. வணிகச் சினிமாவின் வரைவு எவற்றைக் கோருகிறதோ அந்த வடிவத்திற்குள் வேறுவகை உணர்வினைத் தந்திருக்கிறது 'மெட்ராஸ்'.

சென்னை நகரத்தின் தொடக்கத்தினை நாம் வரலாற்றுப்பூர்வமாகக் கொண்டால் இப்போது இருக்கும் மேட்டுக்குடிகளும் பணக்கார வர்க்கங்களும் அப்போது இல்லை. பரபரப்பாக இயங்கும் வாகனங்களும் தொழில்நுட்ப வணிக வளாகங்களும் அப்போது இல்லை. காடாக, கழனிகளாக இந்த இடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. தொழில் வளர்ச்சியினாலும் உலகமயமாதலினாலும் திரைப்படங்களின் தொலைக்காட்சிகளின் வளர்ச்சியினாலும் இன்று நாம் காணும் சென்னை மிகவும் அழகியலான கனவு சார்ந்தது. சமீபத்தில் ஒரு நிகழ்வுக்காக நான் திருவான்மியூரைத் தாண்டி இருக்கும் கொட்டிவாக்கம் சென்றேன். பத்து ஆண்டுகளுக்கு முன்பு பேருந்துகளே போகமுடியாமல் சேறும் சகதியுமாக இருந்த இடம்தான் இன்று ஏதோ வெளிநாட்டிற்குப் போய் வந்த உணர்வைத் தந்தது. கழனிகளும் வயல்களும் அழிக்கப்பட்டு வளரும் ஒரு நீண்ட கனவாகவே சென்னை வெளியிலிருக்கும் மக்களுக்குத் தெரிகிறது.

ஆனால் அதன் பூர்வகுடிகள், சென்னை நகரம் தோற்றுவிக்கப்பட்ட போது இருந்தவர்கள் அங்கு வந்து குடியேறிவர்கள், இன்று சென்னை நகரத்தின் அடையாளமாக இல்லாமல் போய்விட்டார்கள். அந்த அடிப்படையில் முன்பு 'மெட்ராஸ்' என்ற நகரம் உருவாகக் காரணமாயிருந்த மக்கள் அவர்கள் வாழ்ந்த நிலப்பரப்பு ஆகியவை படத்தின் முக்கியக் களமாக இருப்பதால் சென்னை என்று பெயர் வைக்காமல் மெட்ராஸ் என்று வைத்து அதற்கான அரசியலை தலைப்பிலிருந்தே பேச ஆரம்பிக்கிறது.

புனித ஜார்ஜ் கோட்டையச் சுற்றி இரண்டு நகரங்கள் முதன்முதலாக அமைந்தன. ஒன்று ஆங்கிலேயர்கள் வாழ்ந்த ஜார்ஜ் டவுன்; இன்னொன்று அவர்களுக்கு வேலை செய்வதற்காக கொண்டுவந்து குடியமர்த்தப்பட்டவர்கள் வாழ்ந்த பகுதி. 1779ஆம் ஆண்டு கோட்டையைச் சுற்றியிருக்கிற குடிசைகளை அகற்ற வேண்டும் என்ற நிலையை எதிர்த்த மக்கள், கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்களுக்கு அளித்த மனுவில் 'கோட்டையிலிருந்த சீமான்களுக்கும் சீமாட்டிகளுக்கும் பட்ளர் களாகவும் பட்ளர்களின் கையாட்களாகவும் சமையல்காரர்களாகவும் அவர்களின் துணையாட்களாகவும் பல்லக்குத் தூக்குபவர் களாகவும், பந்து எடுத்துப் போடும் பையன் களாகவும் சங்கு ஊதுபவர்களாகவும், குதிரை பராமரிப்பவர்களாகவும், புல்வெட்டுபவர்களாகவும், பிள்ளைகளுக்கு ஆயாக்களாகவும் தோட்டிகளாகவும் வண்டி ஓட்டுபவர்களாகவும் குப்பைக் கூட்டுபவர் களாகவும் விளக்கு ஏற்றுபவர்களாகவும்' தாங்கள் இருப்பதாய்க் குறிப்பிட்டு இருக்கின்றனர். இவர்கள் வாழ்ந்த பகுதி பறச்சேரி என்று மாறி பின்பு பிளாக் டவுன் ஆனது. ஜார்ஜ் டவுன், பிளாக் டவுனுமான சென்னையின் தோற்றுவாயாக இருந்த வடசென்னை மக்களின் வாழ்விலிருந்துதான் மெட்ராஸ் என்னும் திரைப்படம் விரிகிறது.

வடசென்னை மக்களைக் காட்டிய பல திரைப்படங்கள் தமிழில் வந்திருக்கின்றன. யாரையாவது அடிப்பதற்கும் கொல்வதற்கும் அல்லது பெட்டி மாற்றும் பாத்திரத்திற்கும் வடசென்னை அடையாளமாக 'ராபர்ட்', 'ஜானி' போன்ற பெயருடையவர்கள் தமிழ்த் திரைப்படங்களில் வருவார்கள். இல்லையென்றால் நீச்சல் குளத்தில் குளித்துக்கொண்டு வெயிலில் காயும் வில்லன்களுக்கு அருகில் குறைந்த உடை களுடன் 'மேரி', 'ரீட்டா'வாக அவர்கள் இருப்பார்கள். தற்காலங்களில் வரும் படங்களில் வடசென்னை மக்கள் 'கேஸ்ட்டர்'களாக வரும் பாத்திரங்கள் உருவாக்கப்பட்டன. சில படங்களில் வடசென்னையர்களாக இருக்கும் கதாநாயகர்கள் மேட்டுக்குடிப் பெண்களை அடைவதற்காக அவர்களின் பணக்கார அப்பாக்களை அடித்து நொறுக்குபவர்களாக வந்தார்கள். ஆனால், சென்னையின் மூலாதாரமாக இருந்த அம்மக்களின் வாழ்க்கையை அவர்களின் வாழ்வோடும் அரசியலோடும் சொன்ன படமாக 'மெட்ராஸ்' இருக்கிறது.

ஒரு சமூக மக்களை விளிம்பிலும் இன்னொரு சமூக மக்களை மையத்திலும் வைத்திருக்கிற அமைப்பு இன்றும் நம்மிடம்


**ஒரு சமூக மக்களை விளிம்பிலும் இன்னொரு சமூக மக்களை மையத்திலும் வைத்திருக்கிற அமைப்பு இன்றும் நம்மிடம் உள்ளது. மையத்திலிருக்கும் சமூகம் ஆள்கின்ற சமூகமாகவும் விளிம்பிலிருக்கிற சமூகம் அடிமைச் சமூகமாகவும் இருக்கின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. மையத்திலிருக்கும் சமூகம் ஆள்கின்ற சமூகமாகவும் விளிம்பிலிருக்கிற சமூகம் அடிமைச் சமூகமாகவும் இருக்கின்றன. மையத்தினைக் கட்டமைக்கும் அதிகாரத்தினை அங்கிருப்பவர்கள் மொழியின் மூலமாகவே அடைகிறார்கள். அவர்கள் பேசுகிற மொழி அவர்களை ஆதிக்கமுடையவர்களாக மாற்றுகிறது. சமஸ்கிருதத்தை தங்களுடைய பாஷையாக வைத்த காலத்தில் பார்ப்பனர்கள் மையத்திலிருந்தார்கள். ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு ஆங்கிலத்தைப் பார்ப்பனர்கள் தங்கள் மொழியாக வரித்துக்கொண்டனர். வழிபாடுகளிலும், கல்யாணம், கருமாதி போன்ற நிகழ்வுகளிலும் மட்டுமே அவர்கள் சமஸ்கிருதத்தை வைத்துக்கொண்டு, மீதி நேரங்களில் ஆங்கிலத்தையே தங்கள் உரையாடல் மொழியாக அமைத்து அன்றிலிருந்து இன்றுவரை அதிகாரத்தின் அருகிலேயே அமர்ந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். ஆங்கிலேயர்களுக்காக உழைத்த மக்கள் படிக்காமல் பழக்கத்தின் காரணமாகப் பேசிய ஆங்கிலம் 'பட்ளர் இங்கிலீஷ்' என்று பகடிக்கு உள்ளானது. இன்றும் தவறாக ஆங்கிலம் பேசுபவர்களை பட்ளர் இங்கிலீஷ் பேசுபவர்கள் என்று இகழ்வதைக் காணலாம். தமிழ்மொழியை எடுத்துக்கொண்டால் அது பிற்காலங்களில் வேளாளர்களின் மொழியாக மாறி அவர்களை மையத்தில் நிலை நிறுத்தியது. ஆக, மையம் விளிம்பு என்ற எதிர்வுகளை சமூக அமைப்பு மொழிவழியாகவே அமைத்தது. ஆங்கிலத்தையும் சமஸ்கிருதத்தையும் பயன்படுத்திய பார்ப்பனர்கள் தமிழை நீசப் பாஷை எனவும் உழைக்கும் மக்கள் பேசிய தமிழை சேரி மொழி என ஆதிக்க வேளாளர்களும் கூறி வந்தனர். காலத்தின் சுழற்சியில் மையத்தை நோக்கி நகரும் அரசியலும் பண்பாட்டு ரீதியான விழிப்புணர்வும் விளிம்பில் இருக்கும் மக்களுக்கு வந்த காலத்தில் அவர்கள் உடைப்பை ஏற்படுத்தினர். அவர்களின் கல்வியும் மொழி வழியான ஆளுமையும் மையத்தினை நோக்கி நகரும் பிரதிகளை உருவாக்கின. விளிம்புநிலை மக்களுக்கான அரசியல் நிகழ்ந்த காலத்தில் அவர்கள் மையத்தை உடைப்பதற்கான கட்டுடைப்புகளை நிகழ்த்தி மையத்தை நோக்கி நகரும் வன்மையைப் பெறுகின்றனர்.

பண்பாட்டு ரீதியான பிரதிகளின் வழியாகவும் அரசியலின் வழியாகவும் தன்னிலை உணர்ந்த விளிம்பு நிலை மக்கள் தங்கள் வாழ்வை அதன் கொண்டாட்டத்தைப் பதிவாக்குவதன் மூலம் புதிய விழுமியங்களை உருவாக்குவது அதை அடைவதுமான பின்நவீனத்துவ சூழல் சார்புகளை அவர்கள் அடைந்தனர். அப்படித்தான் வடசென்னையில் வாழ்கின்ற விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை

## அஞ்சலி



தமிழ்த்திரையுலகில் எஸ்.எஸ்.ஆர். என வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட திரு. எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்கள், திராவிட இயக்கத்தின் கொள்கைகளையும் முழக்கங்களையும் தமிழ்த்திரையுலகில் பிரதிபலித்ததன் மூலம் 'இலட்சிய நடிகர்' என்ற புகழ்மிக்க அடைமொழியுடன் தமிழ்நாட்டில் வலம் வந்தவர். தமிழ்த் திரையுலகின் வசன உச்சரிப்புக்கு புதிய மதிப்பையும் பெருமையையும் உருவாக்கித் தந்தவர். கதைக்குரிய கதாபாத்திரமாகவே வாழ்ந்து காட்டியதன் மூலம் பாமரர்கள் முதல் படித்தவர்கள் வரை பட்டிதொட்டியெங்கும் பரவியவர். சமூகச் சீர்திருத்த வசனங்களும் வரலாற்றை உயர்த்திப் பிடிக்கும் வசனங்களும் இவரது நாவிலிருந்து வெளிவரும்போது தமிழுக்குப் புதுப்புது அழகைக் கூட்டியவர். அரசியலில் அடியெடுத்து சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் எனச் செயல்பட்டிருந்தாலும் இவரது திரையுலகின் பங்களிப்பு தமிழர்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெறும். அன்னாரை இழந்து வாடும் உற்றார் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் 'காக்கை' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

–ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு செல்லுலாயிட் பிரதியாக, அந்த வாழ்க்கையின் நியாத்தைச் சொல்லும் கலைப்பிரதியாக 'மெட்ராஸ்' வந்திருக்கிறது. வணிகச் சினிமா என்ற சட்டகத்திற்குள் அடைக்கப்பட்டதாக அது இருந்தாலும் இதற்குமுன் பேசப்படாத அம்மக்களின் அரசியலை அது வெகு துல்லியமாகப் பேசுகிறது.

படத்தின் முக்கியக் களமாக இருக்கும் சுவர். அதைத் தன் கைகளில் வைத்திருக்கும் ஒரு அரசியல் கட்சி. அந்தச் சுவர் பலரை பலி வாங்கியதாகச் சொல்லப்படுதல் அதற்கான உரிமையை மாற்றம் அடையாமலிருக்கும் உத்தியாய் அதை ஒரு ஒரு சிறுதெய்வக் கோயிலாக்கிவிடுவது. பின்பு அன்பு பாத்திரத்தின் மூலம் அந்தச் சுவர் அங்குள்ள மக்களுக்குச் சொந்தமானது. அந்தச் சுவற்றின் அதிகாரத்தை அடைவது என்பது அரசியல் அதிகாரத்தை அடைவதற்குச் சமமானது எனப் போராடுவது. அன்பின் நண்பன் காளிதான் கதைநாயகன். காளி படித்தவன். மக்களுக்காக நல்லவைகளைச் செய்யச் சொல்லி அன்பை கேட்பவன். சுவர் பிரச்சினையை விட்டுவிட்டு பிள்ளைகளைப் படிக்கவைக்க வற்புறுத்துபவன். அவர்களின் நட்பு மிக அருமையான இழையாகப் படத்தில் வருவது மிகவும் சிறப்பானது. பின்பு சுவர் பிரச்சினையில் அன்பு கொல்லப்படுவதும், அதனால் தன் காதலையும் மீறி அன்பைக் கொன்றவர்களைப் பழிவாங்குவதும் அதற்குப் பிறகு வன்முறையற்ற ஒரு சமூக அமைப்பை உருவாக்கக் கல்வியை ஆயுதமாக எடுக்க வேண்டும் என்பதும் படத்தின் கரு.

இதில் ரஞ்சித் என்னும் சமூக அக்கறை கொண்ட கலைஞனின் மிக உன்னதமான நோக்கம் நிறைவேற்றப்பட்டிருப்பதுதான் மிக முக்கியம். வணிகத்தனமான சினிமாவில் எப்படி தன் மக்களின் வாழ்வைச் சொல்ல முடியும் என்னும் திரைக்கதை மிகப்பெரிய பலம். ஏனென்றால் ஆதிக்க சமூகத்தினர் தங்கள் வாழ்வைச் சொல்வதற்கு இங்கே எல்லாமே இருக்கிறது. ஆனால் உழைக்கும் மக்கள் தங்கள் வாழ்வைச் சொல்வதற்கு இங்கு எதுவுமே இல்லை என்பதுதான் உண்மை. அப்படி சொல்லப்பட்டாலும் அது வணிகமாகாது என்ற நிலையை மாற்றி அமைத்திருக்கும் 'மெட்ராஸ்' திரைப்படத்தின் வலுவே அதன் ஆழமானத் திரைக்கதைதான்.

காளி, அன்பு, கலை, மேரி ஆகிய கதைமுக்கியத்துவ பாத்திரங்களைத் தவிர மற்ற துணைப் பாத்திரங்கள் மிகவும் துல்லியமாகச் செதுக்கப்பட்டவை. குறிப்பாக ஜானி, காளியின் அம்மா, கலையின் அப்பா. இந்த மூன்று பாத்திரங்களை வைத்தே இது ஒரு விளிம்பு நிலை மக்களைக் காட்டும் படம் என்ற முடிவுக்கு நாம் வந்து விடலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜானி பேசுகிற அரசியல் என்பது ஏதோ மனநிலை பிறழ்ந்தவரின் சப்தமாக நாம் கருதிவிடமுடியாது. இத்தனைக் காலமும் விளிம்பு நிலை மக்களை அப்படியே வைத்திருக்கிற இந்த சமூகத்தின்மீதான கோபம்தான் அது. கதை நாயகியின் அப்பா நீலவண்ண கொடியுடைய கட்சியின் தொண்டராக இருக்கிறார். கட்சிக்காரர் என்று அவரை சொல்கிறார்கள். அவர் தன் மகளுக்குத் தோசை சுட்டுத்தருவார். இந்தக் குறியீடு வேறு எந்த ஆதிக்க சாதி அப்பன்களுக்கும் வைக்கமுடியாதது. அதே போல காளியின் தாய் எப்போதும் பேசிக்கொண்டே இருப்பார். இது மிகவும் சரியான சித்தரிப்பு.

படத்தின் ஒளிப்பதிவு, முரளியின் திறமை படம் முழுக்க பளிச்சிட வைக்கிறது. கதைக்கு எந்த மிகையும் இல்லாத ஒளியும் வண்ணமும் அவர் தந்திருப்பதும் வடசென்னையின் ஈரம் பதிந்த நிலத்தையும், சிறு சிறு சந்துகளையும் அவர் அப்படியே காட்டுவதும் அவருடைய அசாத்தியம். கடைசி சண்டைக் காட்சிகளையும் அவர் துல்லியமாகப் பதிவாக்கி இருக்கிறார். சுவற்றைக் காட்டும் ஒவ்வொரு முறையும் அந்தச் சுவற்றோடு பார்வையாளரை கதைக் களத்திற்குள் இழுத்துச் சென்றுவிடுகிறார். படத்தில் வாழ்வோடு நாமும் ஒருவராக மாறுவதற்கு இந்தக் காட்சிதான் முக்கியப் பங்காற்றுகிறது.

படத்தில் பேசப்படும் அரசியல், பல குறியீடுகள் மூலமாக ஒடுக்கப்பட்டவர் அரசியலைத்தான் அது பேசுகிறது என்பது வெட்ட வெளிச்சம். சுவரே ஒரு குறியீடாக மாறி அரசியல் அதிகாரத்திற்காக தலித்துகள் போராடுவதைப் பேசுகிறது. நீலவண்ணம் என்னும் பொதுமையான நிறம் அனைத்து வேறுபாடுகளையும் களையும் வண்ணமாகப் பயன்படுத்தப்படுகிறது. படத்தில் தேவையான இடங்களில் அம்பேத்கர் ரெட்டமலை சீனிவாசன் படங்களைக் காட்டுவது அம்மக்களின் அரசியல் அடையாளங்களைக் காட்டு வதற்காகத்தான்.

எளிய மக்களின் வாழ்வில் வெறும் துயரங்கள் மட்டுமில்லை அவர்கள் கொண்டாட்டம் நிறைந்த வாழ்வையும் வாழ்கிறார்கள் என்னும் தன்மையில் அவர்களின் கால்பந்தாட்டம், நடனம், வேலைக்குச் செல்வதற்குமுன் ஆயாவிற்கு பணம் தருவது, இன்னொரு முட்டையை வைக்கச் சொல்லும் தந்தை, தண்ணீர் பிடிக்க வரும் நேரங்களில் காதலிப்பது, அன்பு மேரியின் காதல் காட்சிகள், அதை அவர்கள் மகன் ரொனால்டோ கண்டும் காணாமல் இருப்பது. காளியைக் கலை முத்தமிடுவதை அவனுடைய அம்மா பார்ப்பது இப்படி பலக் காட்சிகள் படம் முழுக்க நிறைந்திருப்பதும். திரையின் ஓரத்தில் நகைச்சுவைக்காகக் காட்டப்பட்ட மக்கள் திரையின் மையத்தில் கதைநாயகர்களாக விரிவதும் அவர்கள் அவர்களுக்கான அரசியலைப் பேசுவதும் அதை அழகியலாகச் சொல்வதும் 'மெட்ராஸ்' திரைப்படம் சென்னையில் வசிக்கும் ஆதித்தமிழர்களின் அப்பட்டமான வாழ்க்கையாக மாற்றியிருக்கிறது. ●

## அஞ்சலி



'சுதந்திர ஜோதி' என்ற நாவல் மூலம் எழுத்துலகில் அறியப்பட்ட ராஜம் கிருஷ்ணன் அவர்கள், நாவல், குறுநாவல், வாழ்க்கை வரலாறு, பயணக்கதை என பல தளங்களில் தனது பங்களிப்பைச் செய்தவர். உலக மொழிகளின் சிறுகதைப் போட்டியில் 'ஊசியும் உணர்வும்' என்ற கதைக்காகப் பரிசு பெற்றதன் மூலம் உலக இலக்கியப் பரப்பை தமிழின் பக்கம் திருப்பியவர். சமகாலப் பிரச்னைகளையும் வாழ்வின் யதார்த்தங்களையும் கள ஆய்வு செய்து எழுதுவது இவரது படைப்பின் சிறப்பு என்று குறிப்பிடலாம். சாகித்ய அகாதமி விருது உட்பட பல்வேறு பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுள்ள ராஜம்கிருஷ்ணன், ஆதரவற்ற நிலையில் தனது அந்திமக் காலத்தை ஆண்டுகணக்காய் தனியார் மருத்துவமனையில் கழித்து உயிர்நீத்தது நெஞ்சம் கனக்கச் செய்கிறது.

—ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலம்பெயர் வாழ்வின் சமூக அநீதி

புலம்பெயர் சூழலில் காட்சியூடக வெளிப்பாடுகள் கணிசமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக இசைப்பாடல்கள், பாடல் காணொலிகள், குறும்படங்களின் வருகை அதிகரித்துள்ளது. புலம்பெயர் நாடுகளிலிருந்தும், தாயகத்தில் மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் எனப் பல பாகங்களிலிருந்தும் குறும்படங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஆங்காங்கே முழுநீளத் திரைப்படங்களும் வெளிவரத்தொடங்கியுள்ளன. லெனின் சிவம் எழுதி நெறியாள்கை செய்த 'ஒரு துப்பாக்கியும் மோதிரமும் 'A Gun and A Ring' என்ற முழுநீளத் திரைப்படம் ஈழத்துச் சினிமா சார்ந்த நம்பிக்கையைத் தரக்கூடியதொரு தொடக்கம் என பரவலான பாராட்டினைப் பெற்றுள்ளது.

அண்மையில் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருக்கின்ற இரண்டு குறும்படங்கள் எனது கவனத்தை ஈர்த்துள்ளன. ஒன்று பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் ரப் இசைக்கலைஞராகவும் பாடலாசிரியராகவும் அறியப்பட்ட சுஜித்ஜி எழுதி நெறியாள்கை செய்த 'மாசிலன்'. மற்றையது நோர்வேயைச் சேர்ந்த இளைய கலைஞர் பிரசன்னா எழுதி நெறியாள்கை செய்த 'இருளின் நிழல்' இவற்றில் மாசிலன் குறும்படம் மணமுறிவு (விவாகரத்து) நிகழ்ந்த பெற்றோர்களுக்கிடையில் நிகழும் ஈகோ நிறைந்த செயற்பாடுகளுக்குள் பந்தாடப்படும் குழந்தையின் உளவியலை மையப்படுத்தியதாக உருவாக்கப்பட்டிருந்தது.. இந்த மாசிலன் குறும்படம் பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் எழுத முயற்சிக்கிறேன்.

'இருளின் நிழல்' குறும்படம் பற்றிய பதிவு இது.

'இருளின் நிழல்' குறும்படம் தமிழ் ஊடக மற்றும் கலை இலக்கியத் தளங்




களில் பேசாப் பொருளாகவுள்ள புலம் பெயர் சூழலின் சமூக அநீதி ஒன்றினைப் பேசியுள்ளது. புலப்பெயர்வின் இருண்மையான பக்கமொன்று கதைக்கான கருவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. எதிர்கால வாழ்வுக்கான கனவுகளோடும், அந்தக்கனவுகளுக்காக பெருந்தொகை கடனையும் உழைப்பையும் மூலதனமாக்கி முன்னேறத் துடிக்கும்; தமிழ் இளைஞர்களின் வாழ்வியல் துயரத்தினைப் பேசியிருக்கின்றது.

நோர்வேயில் தமிழ் ஊழியர்கள் சில சிறு தமிழ் முதலாளிகளால் மோசமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரண்டப்படும் நிலைமை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நோர்வே 'தமிழ்3' வானொலியின் விவரண நிகழ்ச்சியொன்றில் ஒலி பரப்பப்பட்டிருந்தது. நோர்வே தேசியத் தொலைக்காட்சியில் (NRK) ஊடக வியலாளராகப் பணியாற்றும் ராஜன் செல்லையா தயாரித்திருந்த அந்த வானொலி நிகழ்ச்சியில் தமிழகத்தைச் சேர்ந்த சில ஊழியர்கள் தமக்கு நேர்ந்த மோசமான அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டிருந்தனர். ஆயினும் தமிழ் ஊடகப்பரப்பிலும் கலைப் படைப்புகளிலும் இந்த அநீதி இதற்கு முன்னர் அதிகம் பேசப்பட்டதில்லை என்ற வகையிலும் இக்குறும்படம் முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்தப் பின்னணியில், இக்குறும்படம் சார்ந்து சமூகக் கண்ணோட்டத்திலான பார்வையையும், குறும்படத்தின் கலைத்துவ வெளிப்பாடு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்தும் சுருக்கமாகப் பகிர்வதே இந்தப் பதிவின் நோக்கம்

ஈழத்திலிருந்து முகவர்களுக்கு பெருந் தொகை பணத்தை இறைத்து, அவர்கள் மூலம் வெளிநாடுகளுக்கு அழைத்துவரப்படும் இளைஞர்கள் அந்நாடுகளில் வாழ்விட உரிமையைப் பெறுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் அதிகம் வெளியில் தெரியாதவை. பயண வழியில்கூட மாதக் கணக்காக அல்லல்பட்டே பலரும் ஏதோவொரு நாட்டில் தஞ்சமடைகிறார்கள். அதுமட்டுமல்ல வாழ்விட உரிமை என்பதற்கு அப்பால் தற்காலிக வதிவிட உரிமையோடு வேலை செய்வதற்குரிய உரிமையைப் பெறுவது என்பதுகூட சுலபமான காரியமல்ல என்பதை நாம் அறிவோம். இது அந்தந்த நாடுகளின் வெளியுறவு, குடிவரவு அரசியல், வெளிநாட்டவர் சார்ந்த நிலைப்பாடு, தாயகத்தின் அரசியல் சூழல் மற்றும் அனைத்துலக அரசியலோடு தொடர்புபட்ட விடயங்களாகும்.

இவ்வாறான சூழலுக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட மனிதர்களின் உழைப்பு புலம்பெயர் நாடுகளிலுள்ள சில தமிழ் முதலாளிகளால் எப்படி சுரண்டப்படுகின்றது, ஊதியம் மறுக்கப்படுகின்றது என்பதை உணர்வுபூர்வமாகவும் நேர்த்தியாகவும் பதிவுசெய்துள்ள கலைவடிவமாக 'இருளின் நிழல்' குறும்படத்தினை அடையாளப்படுத்த முடியும். இது புலம்பெயர் நாடுகளில் பலவற்றில் நடைபெற்றதும் நடைபெறுகின்றதுமான அநீதி. இக்குறும்படத்தின் கதைக்களம் பிரான்ஸ் நாட்டில் நிகழ்வதாக சித்தரிக்கப் பட்டுள்ளது.

வாழ்விட உரிமை மறுக்கப்பட்ட பலர், சட்டத்திற்கு புறம்பான முறையில் வாழவேண்டிய நெருக்கடி நேரிடுகிறது. வாழ்விட உரிமை மறுக்கப்பட்ட இளைஞர்கள் எஞ்சியிருக்கும் தன்னம்பிக்கையோடு தஞ்சம் கோரும் இறுதியிடமாக விளங்குவது தமிழ் முதலாளிமார் என்பது பல நாடுகளின் யதார்த்தம். தமிழ் முதலாளிமார் என்று இங்கு சொல்லும் போது பல்பொருள் அங்காடிகள் மற்றும் உணவகங்களை நடாத்துவோரைக் குறிக்கின்றது.

இந்த முதலாளிமாரில் சிலர் தம்மிடம் வேலை தேடிவரும் இத்தகைய இளைஞர்களிடமிருந்து கடின உழைப்பினை உறிஞ்சியெடுப்பதோடு, அவர்கள் இரவுபகல் பாராது உழைத்துச் சேர்த்த பணத்தையும் எவ்வாறு சுரண்டுகிறார்கள் என்பதும் தாம் சுரண்டியதை அவர்கள் மீளக் கேட்கும் போது, எவ்வித குற்றவுணர்வுகளுமற்று, அவர்களைக் காட்டிக்கொடுத்து நாட்டைவிட்டு அனுப்புமளவிற்கு ஈடுபடுகின்றார்கள் என்பதும் இயல்பாக வெளிப்பட்டுள்ளது.

ஓப்பீட்டளவில் இயல்பான உரையாடல்கள் இடம்பெற்றுள்ளமை கதையோட்டத்திற்குப் பலம் சேர்த்துள்ளது. ஓரிரு காட்சிகளில் செந்தமிழ் வசனங்கள் துருத்திக் கொண்டு வெளிப்படுவது இயல்புத்தன்மையை இழக்கச் செய்துள்ளது. கிட்டத்தட்ட 13 நிமிடங்களைக் கொண்டுள்ள இக்குறும்படத்தின் பின்னணி இசை நேர்த்தியாக உள்ளது. கதையோட்டத்திற்கு ஒத்திசைவாக, அதனை நகர்த்திச் செல்வதில் இசையின் பங்கு நேர்த்தியாகவுள்ளது.

இதில் பங்குபற்றியுள்ள நடிகர்கள் பாத்திரங்களின் தன்மையுணர்ந்து இயல்பான நடிப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். முதன்மைப் பாத்திரமேற்று நடித்திருக்கும் குணபாலன் மற்றும் ரஜிந்த் ஆகியோரின் வெளிப்பாடு குறிப்பிடத்தக்கது. உரையாடல் வெளிப்பாட்டில் நாடகப்பாணி சற்று எட்டிப்பார்த்தாலும், நல்லவர் போன்ற புறத்தோற்றத்தையும், வஞ்சகம் கொண்ட அகத்தோற்றத்தையும் குணபாலன் இயல்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தியுள்ளார். பாதிக்கப்பட்ட இளைஞனாக நடித்திருக்கும் ரஜிந்த் சிறப்பான தெரிவு. இயலாமை, ஏக்கம், விரக்தி அப்பாவித்தனம் என அவரின் நடிப்பும் நேர்த்தியாக வெளிப்பட்டுள்ளது.

பிரசன்னா ஏற்கனவே சில குறும்படங்களையும் சில பாடல் காணொலிகளையும் உருவாக்கியுள்ளார். பிரசன்னாவின் கலைத்துறை ஈடுபாட்டினை ஆரம்பத்திலிருந்து அவதானித்து வருபவர்கள், இந்தக்குறும்படத்தில் கதைசொல்லல், திரைக்கதை அமைப்பில் முன்னேற்றத்தினைக் காணமுடியும். புலம்பெயர் வாழ்வியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உண்மைக்கதை என்பதும் தடுமாற்றமில்லாத திரைக்கதையும் இக்குறும்படத்திற்கு வலுச்சேர்த்துள்ளது எனலாம்.

தொழில்நுட்பக்கூறுகளில் இன்னும் சிரத்தை எடுத்திருக்கலாம். ஒளிப்பதிவிலும் ஒளியமைப்பிலும் (Cinematography and Lighting) மேலும் கவனம் செலுத்தியிருப்பின் இதன் தொழில்நுட்பத்தரம் மேலும் உயர்ந்திருக்கும். காட்சிகளின் கோணங்களில் (Camera frames and angles) சற்று நேர்த்திக்குறைவு தென்படுகின்றது. படத்தொகுப்பும் அவ்வாறே. படத்தின் எல்லாக் காட்சிகளிலும் இருண்மை ஆதிக்கம் செலுத்தியுள்ளது. ஆனால் எடுத்துக்கொண்ட பேசுபொருள் இருண்மை சூழ்ந்தது என்ற வகையில் படம் முழுவதும் பிரக்ஞையோடு அந்த இருண்மை கொண்டுவரப்பட்டதா அல்லது வசதியின்மை, வளமின்மை காரணமாக ஒளியமைப்பு; உரிய முறையில் அமைக்கப்படவில்லையா என்ற கேள்வி எழுகின்றது. படம் முழுவதும் இருண்மை நிறம் நிறைந்திருப்பதைத் தவிர்த்திருந்தால் இதன் கலைத்துவ மற்றும் காட்சிபூர்வ அழகியலுக்கு மெருகூட்டப்பட்டிருக்கும்.

இக்குறும்படம் புலம்பெயர் வாழ்வியலின் சமூக அநீதி ஒன்றினைப் பேசமுற்பட்டுள்ளது என்ற அடிப்படையில் ஒரு சமூகப்பிரக்ஞையுடைய ஆக்கமென அடையாளப்படுவதோடு முக்கியத்துவமும் பெறுகின்றது.

இக்குறும்படத்தை பார்க்க:

http://youtu.be/uY9AYA5MW84

●

## காக்கையின் கோரிக்கை




**காக்கைச் சிறகினிலே இதழுக்கு படைப்புகள் அனுப்புவோர் கவனத்திற்கு:**

படைப்பாளிகள் பக்க வரையறையைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்க. உங்கள் படைப்பு ஐந்து பக்கங்களுக்கு மிகாமல், (ஏறக்குறைய 750 வார்த்தைகள்) கணினி அச்சில் இருத்தல் அவசியம்.

படைப்புகளை எழுத்துப்பிரதியாக அனுப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். யுனிகோட் எனப்படும் ஒருங்குறி எழுத்துருவில் கணினி அச்சு செய்து அனுப்பவும். படைப்புகளை அனுப்புவோர் தங்களுக்கான பிரதியை வைத்துக் கொள்ளவும். வெளியிடுவதற்குத் தேர்வு பெறாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

உங்கள் படைப்பு வெளியிடுவதற்குத் தேர்வு பெற்றதா, இல்லையா என்பது குறித்து, படைப்பை அனுப்பிய ஒரு மாத காலத்திற்குப் பிறகு, தொலைபேசியில் (9841457503) தொடர்பு கொண்டு கேட்டறியலாம்.

கவிதை, சிறுகதை, கட்டுரை என உங்கள் படைப்பு எதுவாயிருப்பினும், நீங்களே ஓரிரு முறை படித்துப் பார்த்து, ஒற்று உள்பட மெய்ப்புத் திருத்தி அனுப்புமாறு கோருகிறோம்.

படைப்பை ஏற்பதும் நிராகரிப்பதும் ஆசிரியர் குழுவின் இறுதி முடிவுக்கு உட்பட்டது என்ற இதழியல் உலகின் மரபையும் ஜனநாயகத்தையும் மதித்துப் போற்றும் பண்பாடு நிறைந்தவர்கள் படைப்பாளிகள் என்று காக்கை முழுமையாக நம்பிக்கை கொள்கிறது.

இதழ் குறித்த தங்களது கருத்து அல்லது விமர்சனத்தை ரத்தினச் சுருக்கமாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். 60 முதல் 100 வார்த்தைகளுக்குள் இருத்தல் நலம். அதிகமானவர்களின் கருத்துகளை வெளியிடுவதற்கு இது உதவியாக அமையும்.

பிரபல சிற்றிதழ்கள் போல, விரிந்த கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளத்துடன் இயங்கும் நிலையில் காக்கை இல்லை. வெகுசில தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியில் இந்த இதழ் வெளிவருகிறது. முன்னும் பின்னும் அறிந்து ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை அளிக்குமாறு படைப்பாளிகளையும் வாசகர்களையும் காக்கை நிமிர்ந்து கோருகிறது.

– ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடல் திறப்பு

மீட்டர் வட்டி... ஏழைகளின் மேட்டரை காலி செய்துவிடும் போலிருக்கிறதே..? ஏழைகள் என்ன, கோடீஸ்வரர்களாக பீற்றிக் கொள்ளும் படத் தயாரிப்பாளர்களின் கழுத்துக்கே கயிற்றைக் கொண்டு வரும் அபாயகரமானதாயிற்றே இந்த கந்து வட்டி வகையறாக்கள். அம்பானி போன்ற பெரும் பணமுதலாளிகள் தப்பி விடுகிறார்கள். இதில் மாட்டி உயிரையிழப்பது சாமான்யன்தானே? முனைவர் க. பஞ்சாங்கத்தின் பாரதி விழா செய்திகள் படிக்க சுவாரசியமாயிருந்தது. அவருடைய செறிந்த அனுபவத்திலிருந்து பாரதியைப் பற்றிய பார்வையை விரித்து எழுதியது பாராட்டத்தக்கது.

– சூர்யநிலா, சேலம்

அக்டோபர் காக்கை படித்தேன். நூல் மதிப்புரைகள் அதிகமாக அளவோடு இருப்பது மகிழ்ச்சி. கேளாச் செவியர் நல்ல கவிதை. அரவிந்தனுக்குப் பாராட்டுகள். தன்ஒலியை யார் கேட்கிறார் என்றா அது கூவுகிறது. கேட்காதோர் பல கூறலாம். பலனை எதிர்பாராமல் கடமையைச் செய் என்று அது கூறுகிறதோ? இருந்தாலும் பிறர் புகழ்ந்தால் நம்மனம் மகிழ்வுறுவது போல அதற்கும் இரை தாருங்கள் என்று கவிதை கேட்கிறது.

– வளவ.துரையன்

அக்டோபர் மாத இதழில் வந்த 'உண்டாலம்ம இவ்வுலகம்' எழுதிய சு. இராமசுப்பிரமணியன் அவர்களுக்கு வாழ்த்துகள். ராமநாதனைப்போல, பிறருக்காக உதவி செய்யும் பலரில் சிலர் உள்ளனர். அதில் பாய்ஃபாலிங் என்பவர் ரிக்ஷா ஓட்டி. பள்ளிக்கு பணம் செலுத்த முடியாத மாணவர்களுக்கு உதவி செய்கிறார். அவர் அந்தப் பள்ளி மாணவர்களுக்காக இதுவரை 36,15,000 செலுத்தி 300 மாணவர்களைப் படிக்கச் செய்கிறார். நா.கிருஷ்ணன் என்பவர் ரோட்டில் இருப்பவருக்கு உணவு கொடுத்து உதவி செய்கிறார். இராமநாதனைப் பற்றி தெரிய வைத்த சு. இராமசுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி.

– தி.கவியரசன், VIII-B தேபிரித்தோ மேல்நிலைப்பள்ளி, தேவக்கோட்டை

வட்டித் தொழில் வன்முறையை, கந்து வட்டி, மீட்டர் வட்டி, கிலோமீட்டர் வட்டி என வேறு வேறு பெயரில் தற்போது நடத்தி வருகிறார்கள். இதை ஒழிக்க 2003இல் கந்துவட்டி ஒழிப்புச்சட்டம் கொண்டு வரப்பட்டது. செயல்பட முடியாமல் அது வெறும் கனவாக மாறியது. மீண்டும் வங்கி தினக் கடன் என்னும் அமைப்பை உருவாக்கி இன்று மக்கள் மத்தியில் செயல்படுகிறது. ஆனால் மக்களின் அவசரத் தேவைக்கு பணம் கிடைக்காவிட்டால் கந்து வட்டியில் மாட்டிக்கொண்டுதானே தவிக்கின்றனர்!

– ச. அரவிந்த்விக்னேஷ், VIII-B தேபிரித்தோ மேல்நிலைப்பள்ளி, தேவக்கோட்டை

சு.இராமசுப்பிரமணியத்தின், ராமநாதன் ஐ.ஏ.எஸ்., 'உண்டாலம்ம இவ்வுலகம்' கட்டுரை, ஏழை மாணவர்களுக்கு உதவி செய்து பல தலைமுறைகளின் கல்வியை வளர்க்கும் வகையில் அமைகின்றது. இந்த கனிந்த மனம் நீடூழி வாழ வாழ்த்துகள்.

– த.பாலமுருகன், VIII-B தேபிரித்தோ மேல்நிலைப்பள்ளி, தேவக்கோட்டை

**வலிகள் சுமந்த எமது தாய்மண்**

புல் பூண்டு தாவரமும் ஊர்வன பறப்பன
நடப்பனவும்
எல்லாமும் உலகில் மண்ணீன்றவையே!
மண்ணே உலகின் தாயென்பதால்
தாய்மண்ணென்று கொண்டாடுகின்றோம்.
உயிர்கள் அனைத்துக்கும் வலி உண்டுதானே!
நேசக்கரம் நீட்டி முதுகில் குத்தியோரும்
பாசாங்கு காட்டி படுகுழி தோண்டியோரும்
வெள்ளைக்கொடி ஏந்தியோரை
வேட்டையாடவைத்தோரும்
ஒரே கோப்பையில் உணவருந்தி
தம்பசி தீர நஞ்சு கலந்தோரும்
உங்களுக்காக உழைக்க புகலிடத்தில்
நாமென்று
ஒப்பனையிட்டு தம் குந்தி நிரப்பியோரும்
தாய்மண் மீட்க உயிர்கொடை அளித்தோரை
நல்ல
சேய்களாய் தம்முடலை விதைத்தோரை
நான்கு நாட்களிலே மறந்ததினால் எமது மண்
வலிகள் சுமந்த தாய்மண்ணாகியது
பொய்யாகிப் போகுமோ?

நாச்சிமார்கோயிலடி இராஜன்



Owned and published by V.Muthaiah from 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084 and Printed by H.Dhanasekar at Sekar Offset Printers, New No. 50 ( Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005. Editor : V.Muthaiah

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முடிந்த பின்பு, மனைவியைத் தொடுவதற்கு முன்பு, வரி கட்டவேண்டும் என்றும் அவ்வாறு வரி கொடுக்க இயலாதவர்கள் தற்கொலை செய்த நிகழ்ச்சிகளும் நடந்ததாக கல்வெட்டு சாட்சியம் கூறிக்கொண்டிருக்கிறது. புதுச்சேரி மாநிலத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று இவ்வாறு விவரிக்கிறது.

இராஷ்டிரகூட மன்னன் கன்னரதேவனின் ஆட்சிக் காலத்தில் அதாவது கி.பி. 961ஆம் ஆண்டு பாகூரில் வசித்த மன்றாடிகள் சமூகத்தினர் அவ்வூர் மூலட்டானத்துப் பெருமான் என்னும் சிவன் கோயிலுக்கு ஒரு தர்மம் செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

"நாங்கள் வைத்த தன்மம் கட்டிலேறப் போம்போது ஒரு ஆடு குடுத்துக் கட்டி லேறு வோமாகவும்"

என்று கூறப்பட்டுள்ளது. அதன் பின்னர் அடுத்த வாக்கியத்தில்

"புறநாட்டினின்று வந்து இந்நாட்டில் கட்டிலேறும் மன்றாடி வசம் ஒரு ஆடு குடுப்பதாகவும்"

எனவும் விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூடாது இருந்தால் இவ்வூராளுங்கணப்பெருமக்களும், தேவராடியாரும் இரண்டு ஆடுகள் பிடித்துக் கொள்ளலாம் என்றும் இச்செயல்பாட்டை இந்நாட்டில் மதகு செய்கின்ற மதகர், சந்திர சூரியர் உள்ளவரை பாதுகாப்பார் என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதே போல கரூரில் உள்ள ஜலசயனப் பெருமாள் கோயிலில் காணப்படும் முதலாம் குலோத்துங்கனின் 43ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று கட்டிலேறுதலை விவரிக்கிறது. இப்பகுதியில் உள்ள மன்றாடிகள் தங்கள் மகனுக்கோ அல்லது மகளுக்கோ திருமணத்தின்போது பெருமாளுக்கு ஒரு ஆடு கொடுக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். எங்கள் கல்யாணத்தின்போது ஒரு ஆண் கட்டிலேறுமிடத்தும் ஒரு பெண் வாழ்கைப் படுமிடத்தும் ஆடு கொடுப்பதாக இம்மன்றாடிகள் இசைந்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை என்னுமிடத்தில் திருமலைக் கடம்பர் கோயிலின் வடக்கு சுவராக அமைந்துள்ள ஒரு பாறையில் உள்ள கல்வெட்டு ஒன்று கட்டிலேறத்தடை விதித்ததால் தற்கொலை செய்துகொண்ட நிகழ்ச்சியை படம் பிடித்துக்காட்டுகிறது. நார்த்தமலை என்ற ஊரின் பழைய பெயர் தெலிங்ககுலகாலபுரம் என்பதாகும். இவ்வூரைச் சேர்ந்த அருமொழி என்னும் வியாபாரி ஒருவன் கட்டிலேற ஒரு பெண்ணை நிச்சயம் செய்து கொள்கிறான். ஆனால் அத்திருமணத்திற்கு தில்லைக் கூத்தன் என்பவனும் மற்றும் சிலரும் மறுப்புத் தெரிவித்து வேறு ஒரு பெண்ணான ராமன் என்பவரின் மகளைத் திருமணம் செய்ய வற்புறுத்துகின்றனர். இதனை அறிந்து முதலில் முடிவு செய்யப்பட்ட செட்டிச்சி என்ற பெண் நஞ்சு குடித்துச் சாகிறாள். இந்த அவலத்தினால் நேர்ந்த



அனுமந்தன்பட்டியில் உள்ள அண்ணன்-தம்பி சிலைகள்

பாவத்திற்கு வணிகக் குழுவினர் சங்குபரமேஸ்வரி அம்மைக்கு கோயில் எடுப்பித்து நந்தாவிளக்கு எரிக்கவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

அனுமந்தன் பட்டியில் தன்னுடைய தங்கைக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை தேடுகிறார்கள். ஆனால், தன்னுடைய தங்கை தனக்கு விரும்பிய காதலனோடு அடிக்கடி சந்தித்து வருகிறாள். தங்கை காதலித்த ஆடவனுக்கு பொருள் கொடுக்கக்கூடிய நிலையில் அண்ணன்கள் இல்லை. இதனால் வேறு இடத்தில் பெண்தேடுகிறார்கள். இதனைக்கண்ட அண்ணனும் தம்பியும் இரண்டு பேரும் சேர்ந்து தங்கையை வெட்டி, தங்களையும் மாய்த்துக்கொள்கிறார்கள். இதற்காக அப்பகுதி மக்கள் அண்ணன் தம்பிக்கு ஒரு கல்வெட்டும். தங்கைக்கு ஒரு கல்வெட்டையும் எடுக்கிறார்கள். ஒரு தோப்பின் நடுவில் கல்லில் செதுக்கப்பட்ட 'அண்ணன்மார்கள்' கற்பலகை ஒன்று உள்ளது. இது 3 முதல் 4 அடி உயரத்தில் இரண்டு ஆயுதம் தரித்த மனிதர்கள் உருவம் பொறித்ததாக இருக்கிறது. இதற்கு எதிரில் மற்றொரு கற்பலகை ஒன்றும் இருக்கிறது. அதில் சில தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு அவை அழிந்த நிலையில் உள்ளது. இன்றும் அப்பகுதி மக்கள் அப்பகுதியில் விளைகின்ற நெல் நாற்றுக்களை அண்ணன்மார்கள் சிலைக்கும் தங்கை சிலைக்கும் வைத்துவிட்டு விற்பனையைத் துவக்குகின்றனர்.

இவ்வாறு பொன் கொடுத்து பெண் பார்க்கும் நிகழ்வும், பெண் கொடுத்து பொன் வாங்கும் நிகழ்வும் பண்டைய காலத்திலிருந்து தொட்டுத்தொடரும் பாரம்பரியமாக உள்ளது. இதனால் பல பெண்கள் வாழாவெட்டியாகவும், முதிர்கன்னிகளாகவும் வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு கல்வெட்டுக்களே சாட்சியாய் இருப்பது தமிழ்ச் சமூகத்தின் செல்லரித்த பக்கங்களைக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2013-2015 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2014-2015.
ISSN 2348 - 4160 Date of Publication : 25.10.2014

# IAS 2014 RESULTS

**PRELIMS**





**1st Year** | **78 / 204** | **1st Batch**





GK LEADERS

## GK LEADERS IAS TRAINERS PVT. LTD.,

3032,'Z'BLOCK, 3RD STREET, 13TH MAIN ROAD, ANNA NAGAR WEST, CHENNAI-40
(ADJACENT TO NATESAN INSTITUTE OF CO-OPERATIVE MANAGEMENT)
CONTACT: 044-26224044, 9600033300 web: www.gkias.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org